...1920 களில் யாழ்குடாநாட்டில் நிகழ்ந்த சமூக உருவாக்கத்தினை முதன்மை மையப் பொருளாகக்கொண்டு, அச்சமூக உருவாக்கத்தில் பங்காற்றிய சிந்தனைப் போக்குகளின் பிரதிநிதிகளில் கனமிகு பாத்திரத்தை வகித்த யாழ் வாலிபர் காங்கிரஸ் குறித்தும் அவ்வமைப்பின் பங்களிப்பாளர்களுள் ஒருவராக இருந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விபுலானந்தரின் பங்கு குறித்தும் இந்நூல் பேசுகின்றது...

அ. கௌரிகாந்தன்

# யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்

# யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் [1920களில்]

# யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் [1920களில்]

அ. கௌரிகாந்தன்

எழுநா வெளியீடு

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் ◆ ஆசிரியர் : அ.கௌரிகாந்தன் ◆ © ஆசிரியருக்கு ◆ பக்கம்: 86 ◆ முதல் பதிப்பு : பெப்ரவரி 1992 ◆ இரண்டாம் பதிப்பு: மே 2013 ◆ வெளியீடு : எழுநா ஊடக நிறுவனம், No:4, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom ◆ தொலைபேசி : 0044 79 155 55 458 ◆ மின்னஞ்சல் : info@ezhunamedia.org ◆ அட்டை வடிவமைப்பு : இம்தாத் ◆ நூலாக்க வடிவமைப்பு : ஏபிஎம் மீடியா, வாழைச்சேனை, இலங்கை ◆ அச்சாக்க ஒருங்கிணைப்பு : சுவடி, சென்னை- 5

எழுநா ஊடக நிறுவன வெளியீடு : 11

PRICE : 50 INRS, 150 SLRS, 4 EURO, 6 USD

yAzppANa samUka uruvAkkamum vipulAnantharum ◆ Author : a.kaurikanthan ◆ © Author ◆ Pages: 86 ◆ First Editon: February 1992 ◆ Second Edition : May 2013 ◆ Published by Ezhuna Media Foundation, No:4, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom ◆ Phone: 0044 79 155 55 458 ◆ e-mail: info@ezhunamedia.org ◆ Cover Design: Imdad ◆ Layout Design : abm-media, Valaichenai, Srilanka ◆ Printing Co-odination: Chuvadi, Chennai - 5

Selling rights in India :
Discovery Book Palace (P) Ltd
No.6, Magavir Comlex, 1st Floor, Munusamy Salai,
K K Nagar West, Chennai - 600078
Phone: 0091 44 65157525
Mail: discoverybookpalace@gmail.com

நிதிக்கொடையாளர்

**சுஜன் சண்முகசிங்கம்**

Sujan Shan [B.Eng]

www.newreleasecondo.com

கனடாவில் Real Estate துறையில் முன்னணி வகிக்கும் மீசாலையைச் சேர்ந்த சுஜன் சண்முகசிங்கம் அவர்களின் முழுமையான பொருளுதவியில் எழுநா நிதிக்கொடை மீள்பதிப்பு வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் இந்நூல் வெளியாகிறது. சுஜன் சண்முகசிங்கம் அவர்கள் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் கலை இலக்கிய பண்பாட்டு அறிவுக் கரூவூலங்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கும் ஆர்வமும் உடையவர். இந் நூலுக்கான அவரது முழுமையான நிதிப்பங்களிப்பிற்கு எழுநா ஊடக நிறுவனம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நூலின் உரைப்பகுதி Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported (CC BY-NC-SA 3.0) உரிமத்தின் கீழ் வெளியாகிறது. அதனை விட உரிமை கூடிய விதத்தில் பயன்படுத்த விரும்புவோர் பதிப்பாளரைத் தொடர்பு கொள்ளலாம். இந்நூலின் தளக்கோலமும் வடிவமைப்பும் 2015 டிசம்பர் வரை முழுப் பதிப்புரிமைக்கு உட்படுகிறது. 2016 இல் இந்நூலின் தளக்கோலமும் வடிவமைப்பும் Creative Commons Attribution-NonCommercial-NoDerivs 3.0 Unported (CC BY-NC-ND 3.0) உரிமத்திற்கு மாற்றம் பெறுவதோடு, திறந்த அணுக்கத்தில் வெளியாகும்.

The Text within this book is available under the Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported (CC BY-NC-SA 3.0) licence. If anyone wants to use the content of the book with less copyright restrictions, please contact the publisher. The design and layout of the book are under copyright upto December 2015. In 2016, layout and design will accommodate to Creative Commons Attribution-NonCommercial-NoDerivs 3.0 Unported (CC BY-NC-ND 3.0) and a digital copy of this book will be made available sans access restrictions.

For more information :
*http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/*
*http://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/*

# பதிப்புரை

*யாழ்ப்பாண சமூக உருவாக்கத்தில் விபுலானந்தரின் பங்கு (1920களில்) என்ற இச்சிறுநூல் எழுநாவின் விசேட வெளியீட்டுத் திட்டங்களில் ஒன்றாகிய மீள்வெளியீடுகள் என்னும் பிரிவின் கீழ் வெளியாகின்றது. முதல்பதிப்பு வெளியாகிய காலப்பகுதி, தமிழ் அரசியலில் ஆசிரியரின் பங்களிப்பு, தமிழ் அரசியல் இன்று வந்தடைந்திருக்கும் இடம், தமிழ் அரசியலின் இன்றைய போக்கு போன்ற பல காரணிகள் இந்நூல் மீள்பதிப்பிக்கப்படுவதற்கான காரணிகளாகின்றன.*

*இந்நூல் வெளியாகிய காலப்பகுதியையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நூலாசிரியரின் பாத்திரத்தையும் சற்று விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு போராட்ட சக்திகள் களத்திலிருந்து அகற்றப்பட்டு புலிகள் தமது நடைமுறை அரசுக்கான தயார்படுத்தலை மேற்கொண்டிருந்த காலப்பகுதியில் தீவிர இடதுசாரிப் பின்புலத்திலிருந்த கௌரிகாந்தன் அவர்களால் இந்நூல் எழுதப்பட்டு யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.*

*இடதுசாரிச் செயற்பாட்டாளராக தனது பயணத்தைத் தொடங்கிய கௌரிகாந்தன் இரண்டாவது தலைமுறை இடதுசாரி இயக்கத்தில் செயற்பட்டவர். அத்துடன் அவ்வியக்கத்தின் கிளைகளில் ஒன்றான 'கீழைக்காற்றியக்கத்தில்' முக்கிய பங்காற்றியவர். அதன் தொடர்ச்சியில் தேசியவாத இயக்கமொன்றிலும் முக்கிய பொறுப்பில் செயற்பட்டுள்ளார். புலிகள் இயக்க காலப்பகுதியில் மக்கள் இயக்கச் செயற்பாடுகளில், முக்கியமாக மாணவ அமைப்புக்கள் சார் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருந்தபோது இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.*

தேசியப் போராட்டம் தொடர்பாகப் பல்வேறு பார்வைகளைக் கொண்டிருந்த அமைப்புக்கள் களத்தில் இல்லாத காரணத்தால் தேசியவாதம் தன்னை ஒருமுகப்படுத்தியிருந்த காலப்பகுதியது. குறிப்பாக தமிழ்த்தேசம் நடைமுறை அரசுக்கான தயார்படுத்தலில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

தமிழ்த்தேசத்தின் மரபார்ந்த 'சொந்தக்காரர்களாக' இருந்த சக்திகள் தொடர்ச்சியாக தமிழ்த்தேசியத்தைத் தம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கும் தேசியத்தின் பாதையும் குணாம்சமும் மாறிவிடாதபடி பேணுவதற்குமான வேலைத்ததிட்டங்களில் தம்மை ஈடுபடுத்தியவாறிருப்பர். அவ்வாறே, முற்போக்கு சக்திகளும் தேசியத்தின் பாத்திரத்தை முற்போக்காக மாற்றுவதற்கும் முற்போக்கு பாத்திரத்தையுடைய தேச உருவாக்கத்திற்குமான வேலைத் திட்டங்களில் நிச்சயமாக ஈடுபட்டிருப்பர். இவ்வாறான இருவேறு பார்வைகளையுடைய தேசிய சக்திகளுக்கிடையேயுள்ள முரண்பாட்டின் விளைவாகவே இந்நூல் வெளியாகியுள்ளதென்பதை நூலாசிரியர் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ரீதியான ஒடுக்குமுறை நிகழும் காலங்களிலும் அதற்கெதிரான தேசிய ரீதியான விடுதலைப் போராட்டம் நடைபெறும் காலங்களிலும் ஓர் இடதுசாரி, தன்னை இடதுசாரியாகவும் மார்க்சியவாதியாகவும் தொடர்ச்சியாக உணரும் அதேவேளை, ஒரு தேசியவாதியாகவும் தன்னுடைய பாத்திரத்தை வகுத்துச் செயற்படுவது உலகப் பொதுமையானது.

வரலாற்றில் பல மார்க்சியவாதிகள் தேசிய விடுதலைப் போராட்ட காலப்பகுதியில் தம்மைத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டு செயற்பட்டுள்ளனர். தேசியத்திற்கு இயல்பாக இருக்கக்கூடிய அசமத்துவத்திற்குச் சார்பான குணாம்சத்தை மாற்றியமைத்து, சமத்துவம் சார்பான கூறுகளை தேசியத்தின் குணாம்சங்களாக மாற்றும் நோக்கம் அவர்களிடம் இருந்திருக்கின்றது. கலாசாரக் கூறுகள் நிறைந்த தேசியவாதம் தன்னை அரசியல் கூறுகள் நிறைந்ததாக மாற்றிக் கொள்ளும் செயல்முறை தேசிய விடுதலைப் போராட்டக் காலப்பகுதியில் விரைவுபெறும். அவ்வேளையில் அதனை முற்போக்கான திசைவழியே முன்னகர்த்துவதற்கான செயற்பாட்டில் இடதுசாரிகளின் பங்கு மிக முக்கியமானதாயிருக்கும். தேசியவாதத்தின் முற்போக்கான பாத்திரத்திற்குரிய உள்ளீடுகள்

பெரும்பாலும் குறிப்பிட்ட சமூகத்தின் இடதுசாரிகளின் பங்களிப்புக்களால் ஆனவை. தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்திலும் இடதுசாரிகளின் பங்கு அளப்பரியதாக இருந்திருக்கின்றது. தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்போக்கான திசைவழியில் நகர்த்துவதற்கான செயற்பாடுகள், பல்வேறுபட்ட பின்னணிகளிலிருந்து செயற்பட்ட இடதுசாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் கௌரிகாந்தன் அவ்வாறான ஒருவர்.

தமிழ்த்தேசியத்தின் குணாம்சத்தை மாற்றியமைக்க முற்பட்ட வேளையில், நடைமுறைச் சமூகப் படிநிலை அமைப்பிலிருந்து வெளிக்கிளம்பக் கூடிய எதிர்ப்பைக் கருத்திற் கொண்டு, மையக்கருத்தியலில் கைவைக்காமல் - விளிம்புநிலையாக்கப்பட்ட கருத்தியல்களை மையத்திற்குக் கொண்டு வர முயற்சிக்கப்பட்டது. அவ்வகையில் யாழ்ப்பாணச் சமூக உருவாக்கத்தின் முற்போக்கான பக்கத்திற்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரின் பங்கு குறித்துப் பேசுவதே இந்நூல். அந்நபர் சுவாமி விபுலானந்த அடிகளாவார்.

இலக்கியம், மொழியியல், சமயம், அறிவியல், இசை போன்ற துறைகளில் விபுலானந்தரின் பங்கு குறித்து ஏராளமாகப் பேசியாகிவிட்டது. அரசியல் தளத்தில் விபுலானந்தரின் பங்கு குறித்த ஆய்வுகள் மற்றைய துறைகளுடன் ஒப்பிடுகையில் குறைவானவை என்று கூறலாம். அவ்வகையில், இந்நூல் அரசியல் தளத்தில் விபுலானந்தரின் பங்கைப் பேசுகின்றது.

விபுலானந்தரின் அரசியல் பணியை மூல ஆவணங்களில் இருந்து பூரணமாக அறிந்துவிட முடியாது. அவருடைய பிற பணிகள் தொடர்பான ஆய்வுகளில் இருந்தும் அக்காலப்பகுதிக்குரிய பிற ஆவணங்களில் இருந்துமே அறிந்து கொள்ள முடியும். விபுலானந்தர், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசுடன் இணைந்து சில காலங்கள் இயங்கியுள்ளார். இளைஞர் காங்கிரசின் காலத்திற்குப் பின்பான காலப்பகுதிகளில் விபுலானந்தர் அரசியல் ரீதியாக நேரடியாக இயங்கியதற்கான ஆதாரங்கள் இல்லாதபோதிலும் அரசியல் தளத்திற்கு மிக நெருக்கமான சமூகத்தளத்தில் இறுதிவரை இயங்கியுள்ளார். ஒடுக்கப்பட்டோர் சார்பான அவருடைய அரசியலின் தாக்கம் சமூகத்தளங்களிலான அவருடைய செயற்பாடுகளில் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது. முக்கியமாக முஸ்லிம்கள் தொடர்பான

அவருடைய பார்வைக்கு ஜனாப் ஏ.எம். நஹியா எழுதிய 'முஸ்லிம் நேசர் சுவாமி விபுலானந்தர்' என்ற நூல் சிறந்த உதாரணமாகும்.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் பாத்திரம் தொடர்பாக இவ்விடத்தில் சில விடயங்களைக் கூற முடியும். இலங்கைத் தீவின் இடதுசாரி அரசியலுக்கான விதை யாழ்ப்பாண காங்கிரஸ் ஊடாகவே ஊன்றப்பட்டது என்று சொல்வது மிகையானதல்ல. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் என்ற அச்செயற்பாட்டாளர்களின் பயணம், பிற்காலத்தில் சூரியமல் இயக்கம் வரை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வமைப்பைச் சேர்ந்தவர்களின் தாக்கம் லங்கா சமசமாஜக் கட்சியின் தோற்றத்திலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்திலும் கூட இருந்துள்ளது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் பாத்திரம் அதனுடன் தொடர்புபட்டவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அதன் முற்போக்கான பாத்திரம் தொடர்பாகப் பெருமளவு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், இவ்விடத்தில் அவற்றை இருவகையான சட்டகங்களுக்குள் உட்படுத்திப் பார்ப்பது அவசியமானது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் புறநிலையான பார்வையை நோக்கினால், காலனித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிட முடியும். புறநிலையில் முற்போக்கான பாத்திரத்தை வகித்ததுடன் மாத்திரமல்லாது, அகநிலையில் சமூக மாற்றம் தொடர்பாக 1920களிலேயே மிகவும் முற்போக்கான கருத்துக்களையும் முன்வைத்தது. தேசிய ஒற்றுமை, மதச்சார்பற்ற தன்மையை வலியுறுத்துதல், தீண்டாமைக்கும் சாதியத்திற்கும் எதிரான போக்கு, கூட்டுறவுக் கலாசாரத்தை சமூகமட்டத்திற்குக் கொண்டு செல்லுதல், சுய பொருளாதாரக் கொள்கை என ஏராளமான முற்போக்கான கருத்துக்களை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கொண்டிருந்ததுடன் அவற்றுக்காகப் போராடியுமிருந்தது.

விபுலானந்தர், அரசியல் ரீதியாகத் தொடர்புபட்ட அமைப்பாக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் மாத்திரமே இருந்துள்ளது. ஆக, அவருடைய அரசியல் பரிணாமம் அதனூடாகவே நேரடியாக அளவிடப்படக்கூடியது. மேலதிகமாக, சமூகத்தளத்தில் அவருடைய செயற்பாடுகளின் போதான அணுகுமுறையில் இருந்தும் மறைமுகமாக

அளவிட முடியும். சமூகத்தளத்தில் முக்கியமாக கல்வித்துறையில் விபுலானந்தரின் பங்கு ஒடுக்கப்பட்டவர்களுக்கு சார்பானது என்பதற்கான ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. இப்பின்புலத்தில் வைத்தே விபுலானந்தருடைய 'அரசியலை' உய்த்துணர்ந்து கொள்ள முடியும். யாழ்ப்பாணச் சமூக உருவாக்கத்திலும் அதன் பிற்காலத்தைய அரசியல் அசைவியக்கத்திலும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் பங்கு இன்றியமையாதது. அக்காலத்தில் அது வகித்த முற்போக்கான பாத்திரம் அதன் பின்வந்த பல அரசியல் இயக்கங்களால் கூட தொட்டுப்பார்க்க முடியாத உச்சத்தில் இருந்தது.

இந்நூல் இப்போது மீள்பதிப்பிற்குள்ளாகும் வேளையில், அதன் இக்காலத்தைய அவசியத்தையும் குறிப்பிட வேண்டும். அதற்கு, இன்றைய அரசியல் சூழல் பற்றிய பார்வையும் அவசியமானது. அதனூடாகவே இந்நுலை வெளியிட வேண்டியதன் அவசியம் பற்றிய புரிதலை வந்தடைய முடியும்.

2009 மே இல் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டது. அந்நிகழ்வுக்கு முதலான இறுதி 20 வருடங்களும் ஆயுதப்போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் மாத்திரம் நடாத்தப்பட்டது. இந்நிலையில் அவ்வமைப்பு அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் அரசியலில் ஒரு வெற்றிடம் தோன்றியுள்ளதை மறுக்க முடியாது. வரலாற்று ரீதியாக இலங்கையில் இரு தேசங்கள் இருந்துள்ளன. நடைமுறையில் இரு தேசங்களும் இரு அரசுகளாக செயலாற்றியுள்ளன. தொடர்ச்சியான சிங்கள பேரினவாத நடைமுறைகளால், தமிழ்த்தேசிய அரசியல், கலாசார கூறுகளுக்கு மேலதிகமாக அரசியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு சமூகத்தளத்தில் தன்னை மீள ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கின்றது.

இன்றைய தமிழ்த்தேசிய அரசியலானது, தேசியவாதத்திற்கு இயல்பிலேயே இருக்கக்கூடிய பிற்போக்கான கூறுகளைக் கொண்ட வலதுசாரித் தேசியமாக, பிற்போக்கான பாத்திரத்தை கொண்டுள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும். இந்நிலையை மாற்றி தமிழ்த்தேசிய சட்டகத்தில் இயங்கும் அரசியல் இயக்கங்கள் முற்போக்கான பாத்திரத்தை வகிக்க வேண்டியது அவசியமானது. ஆனால், இன்றுள்ள அமைப்புக்களிடம் வரலாற்று ரீதியான புரிதல் பெருமளவிற்கு இல்லை. இன்றைய தமிழ்த்தேசிய அரசியல் இயக்கங்கள் வெறுமனே சிங்கள பேரினவாத ஒடுக்குமுறையின் எதிர்வினை இயக்கங்களாகவும்

பிற்போக்கான குணாம்சங்களையுடைய தேசியவாதக் கருத்தியலை உற்பத்தி செய்வனவாகவும் மாத்திரமே தொழிற்படுகின்றன.

ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படும் அரசியல் என்ற அறரீதியான பாத்திரம், அவற்றுக்கு முற்போக்கான பாத்திரத்தை வழங்கிவிடப் போதுமானதல்ல. அல்லது, புறநிலையான பார்வையும் இயக்கமும் முற்போக்கான கருத்தியலைக் கொண்டிருப்பது மட்டும் அவற்றுக்கு முற்போக்கான பாத்திரத்தை வழங்கிவிடாது.

இன்றைய தமிழ்த்தேசிய அரசியல் எவ்வாறான பாத்திரத்தை வகிக்க வேண்டும் அல்லது இன்றிருக்கும் தமிழ்த்தேசிய செயற்பாட்டியக்கம் எவ்வாறான குணாம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு நாம் மீண்டும் 1920களில் செயற்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசிடம் செல்ல வேண்டியுள்ளது.

புறநிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பும், தமிழ்த்தேசத்தின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் இறையாண்மையையும் வலியுறுத்தும் தன்மையும் இருக்க வேண்டும். அவ்வாறே, அகநிலையில், அசமத்துவங்கள் தொடர்பான தீர்க்கமான பார்வையைக் கொண்டிருப்பதுவும் அவசியமானது. சாதியப்படிநிலையுடன் கூடிய சமூக அசமத்துவக் கட்டமைப்பை கருத்தியல் ரீதியில் மட்டுமல்லாது நடைமுறையிலும் எதிர்கொள்ளத் துணிய வேண்டும். அதற்கெதிராகப் போராட வேண்டும். அவ்வாறே, வர்க்க ரீதியான சமத்துவத்திற்கு ஆதரவான தனது கொள்கைப் பிடிப்பைப் பகிரங்கப்படுத்த வேண்டியதும் அவசியமானது. மேலும், இதர சிறுபான்மைத் தேசிய இனங்கள் தொடர்பான தன்னுடைய பார்வையை முற்போக்கானதாக வெளிப்படுத்த வேண்டியதும் அவசியமானது. இன்னும், பெண்கள் மற்றும் இதர ஒடுக்கப்பட்டோர் சார்ந்த நிலைப்பாடுகளையும் அவற்றுக்கெதிரான செயற்பாடுகளையும் கொண்டதாக தன்னுடைய பாத்திரத்தை வகுத்துக் கொள்வதே தமிழ்தேசியத்தின் இன்றைய தேவையாகவுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் குறிப்பிடுவது போன்று, 1990 களின் ஆரம்பத்தில் தேச உருவாக்கச் செயற்பாடுகளின் போது, பிற்போக்கான உள்ளடக்கத்துடன் நிகழும் தேச உருவாக்கம் தேச உருவாக்க நகர்வைத் தவறான திசைவழி நகர்த்திச் செல்லும் என்று முற்போக்காளர்களால் எச்சரிக்கப்பட்டுள்ளது. தமிழ்த்தேசியத்தின் குணாம்சத்தை

*முற்போக்குப் பாத்திரம் நிரம்பியதாக மாற்ற வேண்டும் என்ற நோக்குடன் சிறிய அணிகள் போராடியுள்ளன. அதற்கான உரையாடல் தொடங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்நூலும் வெளியிடப்பட்டுள்ளது. இன்று, வெற்றிடத்தில் இருந்து பிற்போக்கான கூறுகளுடன் சுய விமர்சனமற்று நகர முற்படும் தமிழ்த்தேசிய அரசியலின் திசைவழியை முற்போக்கான வழியில் பயணிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் எழுநா இதனை மீள்பிரசுரம் செய்கின்றது.*

*நடைமுறை அரசொன்றை நிறுவ முற்பட்ட காலப்பகுதியும், வெற்றிடத்தில் இருந்து அரசியலை மீளத் தொடங்கும் தற்போதைய காலப்பகுதியும் ஒன்றல்ல என்ற போதிலும் தற்போதைய சூழல் இவ்விடயத்தை வலியுறுத்துவதற்குப் பொருத்தமான காலம் என்றே கருதுகின்றோம்.*

*ஈழத்தமிழர்களில் 1/3 பகுதியினர் புலத்திலும் 2/3 பகுதியினர் தாயகத்திலும் நிலைகொண்டுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது. புலம்பெயர் அமைப்புக்களினதும் நீண்ட தூரத் தேசியவாதத்தினதும் செல்வாக்கிற்கு உட்பட்டே தமிழரசியல் தன்னை நகர்த்த வேண்டியுள்ளது. நீண்ட தூரத்தேசியவாதத்திற்கு தமிழ்த்தேசியத்தின் குணாம்சத்தை முற்போக்கானதாக மாற்றியமைக்க வேண்டிய தேவையிருக்காது. மேற்கத்தைய அதிகாரங்களின் ஏவல்படையாக இருப்பது முற்போக்கான வரலாற்றுப் பாத்திரம் அல்ல. இவ்விடத்தில், தாயகத்தில் உள்ள அமைப்புக்களே தேசியத்தின் முற்போக்கான பாத்திரத்தை உறுதிப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளார்கள். அதற்கான கடப்பாடும் தேவையும் அதிகமுள்ளவர்கள் அவர்களே. இவற்றைக் கவனத்தில் கொண்டே முற்போக்கு சக்திகள் செயற்பட வேண்டும்.*

*அவ்வகையில் இந்நூல், தமிழ்த்தேசிய அரசியல் செயற்பாட்டளர்களிடையே குறைந்தபட்சம் உள்ளக உரையாடலைத் தொடக்கி வைக்குமென்பது எம்முடைய நம்பிக்கையாகும்.*

***எழுநா***
*மே 2013*

# முன்னுரை

*யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் (1920களில்) எனும் இந்நூல், பதினாறு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து எழுதப்பட்டு, யாழ்ப்பாணத்தில் அப்போது ஆட்சியில் இருந்தவர்களின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது. ஆகவே இந்நூல் எழுதப்பட்ட, பதிப்பிக்கப்பட்ட அரசியல் சூழல் பற்றி சிறிது கூறவேண்டும்.*

*அப்போது, ஈழத்தில் இரு அரசுகள் இருந்தன. ஆனால் யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதிகள், தமிழீழ அரசின் ஆட்சியின் கீழேயே இருந்தன. யாழ்ப்பாணத்தின் மீதிப் பகுதியில் ஸ்ரீலங்கா அரசு பேரளவிற்கே இருந்தது. இந்நூல் எழுதப்பட்ட, வெளிக்கொணரப்பட்ட காலப்பகுதியில் அந்நிய நேரடி இராணுவத் தலையீட்டை எதிர்கொள்வதின் போதான பேரிழப்புகளின் பின்னால், தமிழீழ அரசு மீளவும் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இவ் அந்நிய இராணுவத் தலையீடும் அதை வெற்றிகொள்ள புலிகள் இயக்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இராணுவ, அரசியல் வழிமுறைகளும், பல படிப்பினைகளை தமிழ் பேசும் மக்களுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் கொடுத்திருந்தன. இப் படிப்பினைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் அரசியல் சிந்தனைப்போக்குகளை தமிழ்பேசும் மக்களிடையேயும், புலிகள் இயக்கத்தினுள்ளும் தோற்றுவித்தன. இது இயல்பானதே. புலிகள் இயக்கத்துள் ஆக்கபூர்வமான, சுமூகமான ஒரு உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமானது என்றும் கூறலாம். இது புலிகள் இயக்கத்திற்கு முற்றிலும் புதியதோர் மரபாகும்.*

*இதற்கான காரணத்தை ஆராய்வோம்; அந்நிய இராணுவ வெளியேற்றத்துடன் புலிகள் இயக்கம் ஓர் இயக்கமென்ற நிலையிலிருந்து, ஓர் அரசாங்கம் என்ற நிலைக்கு பரிணாமம்*

அடையவேண்டிய நிலையேற்பட்டதுதான் அகநிலைமாற்றம் ஏற்படுவதற்கான பிரதான அகக் காரணியாகும். ஏற்கனவே இருந்த புலிகள் இயக்கம் என்ற இராணுவமைய-அரசியல் கட்டுமானம் அரசு இயந்திரமாக மாற்றமுறுவதுவும், அரசாங்கம் என்ற புதிய சிவில்அங்கம் ஒன்று உருவாகுவதுவும் உடனடி அவசியங்களாகின்றன. இச் சிவில்அங்கம் நூறு விழுக்காடும் அரசியல் தன்மைபெற்றதாக இருக்கவேண்டியதுவும், அரசு இயந்திரம் தொடர்ந்தும் இராணுவமைய-அரசியல் அங்கமாக இருக்கவேண்டியதுவும் அவசியமாகின்றது. ஆனால் அவசியப்படும் இந்த இராணுவமைய-அரசியல் கட்டுமானம், இயக்ககாலத்தில் இருந்ததைப் போலன்றி முற்றிலும் வேறுபட்டதாகும். இயக்ககால இராணுவம் ஒரு எளிய அங்கியாகவே (*Simple Organ*) இருந்தது. ஆனால் அரசாங்கம் எனும் அங்கத்துடன் இணைந்த இராணுவமோ ஒரு பல்தொகுப்பு அங்கியாகவே (*Coplex Organ*) அமைய வேண்டும். இராணுவக் கட்டமைப்பு, காவல்துறைக் கட்டமைப்பு, அதிகாரத்துவக் கட்டமைப்பு, வங்கிக் கட்டமைப்பு, ஊடகத்துறைக் கட்டமைப்பு ஆகிய இன்னும்பிற சுயாதீன செயல்பாடுள்ள எளிய அங்கிகளின் கூட்டான பல்தொகுப்பு அங்கியே இந்த அரசஇயந்திரமாகும். அரசாங்கக் கட்டுமானம் புலிகள் இயக்கத்திற்கும் முற்றிலும் புதியது, ஆனால் அரசு இயந்திரக் கட்டுமானமோ புதியதல்ல. ஆனால் பல மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படவேண்டியது. இந்த மாற்றங்கள், எண்ணிக்கை மாற்றங்களோ அல்லது புதிய புதிய அங்கங்களை பழைய இயக்க இராணுவத்துடன் கொண்டுபோய் ஒட்டுவதோஅல்ல. அடிப்படை மாற்றத்தைக் கோரிநிற்கும் ஒரு புதிய வடிவமாகும்.

இக்கட்டத்தை புலிகள் இயக்கத்தின் மாறுநிலைக் கட்டமெனக் கொள்ளலாம். இயக்கநிலையில் இருந்து அரசநிலைக்குச் செல்லும் காலம். ஏற்கனவே உருவாகியிருந்த அரசஇயந்திரத்தை பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் புலிகள் இயக்கத்திற்கு இருக்கவில்லை, தானே தனது சொந்த அரசஇயந்திரத்தை உருவாக்கிக் கொள்ள முயன்றது என்பதை மிக உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அப்போதுதான் நூல் எழுதப்பட்ட காலகட்டத்தை சரியாகப் புரிந்து கொள்ளமுடியும். பிரபாகரனும், விடுதலைப்புலிகளும் தமிழ்த் தேசியத்தின் அடையாளங்களாக ஆகியதற்கான காரணத்தையும் புரிந்துகொள்ள முடியும். புதிய-வார்ப்புகளாக உங்களை ஆக்கிக்கொள்ளுங்கள், மறு-பிறப்பெடுங்கள் என்பதுவே தமிழீழ மக்களின் அபிலாசைகளாக இருந்தன. புலிகள் இயக்கமும் இதைப் புரிந்துகொண்டிருந்தது.

மறுபிறப்பெடுக்க முயற்சித்தது. அதற்கான வழிமுறைதான் முன்கூறிய உட்கட்சிப் போராட்டமாகும். இம்முயற்சிகளின் வெளிப்பாடுகளில் ஒரு துளிதான் இந்நூலாகும்.

இம்முயற்சியில் புலிகள் இயக்கம் மறு-பிறப்பெடுத்தார்களா? புதிய வார்ப்புக்களானார்களா என்பதுபற்றி, இம் முன்னுரையில் நான் எதுவும் கூறப்புகவில்லை. ஏனெனில் அதற்குரிய மேடையிதுவல்ல.

அக்கால கட்டத்தில் நிலவிய புறச்சூழல் ஒன்று இயக்கத்துள் நிலவிய உட்கட்சிப்போராட்டத்தை மேலும் நெறிப்படுத்தவும். ஆரோக்கியப் படுத்தவும் உதவியது. அது என்ன என்பதை புரிந்துகொண்டால்தான் இந்நூல் தோன்றிய அன்றைய அரசியல் சூழலைச் சரியாகப் புரிந்துகொள்ளமுடியும்.

அந்நிய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னால், தமிழீழப் பிரதேசத்தில் ஒரு அரசியல் உற்சாகம் ஒன்று தோன்றியிருந்தது. ஆனால் இப்பிரதேசத்தில் நிலவிய கண்டிப்பான ஒரு கட்சி ஆட்சிமுறையினால், இவ் அரசியல் உற்சாகம் அரசியல் அணிதிரளல்களாக மாறுவது சாத்தியமற்றதானதாகவே இருந்தது. அதாவது அரசியல் உற்சாகத்திற்கு ஒரு சுதந்திரமான வடிகால் கிடைக்கவில்லை. இதனால், புலிகள் இயக்கத்தை முற்றுமுழுப் பாசிஸ இயக்கமாக புரிந்துகொண்டவர்கள் புலம்பெயர்ந்தனர் அல்லது நிசப்தமாகினர் அல்லது ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் இணைந்துகொண்டனர். புலிகள் இயக்கத்தை முற்றுமுழுப் பாசிஸ இயக்கமாக ஏற்றுக்கொள்ளாத வர்க்க, தேசிய உணர்வாளர்களிலும், சமூக, தேசியப் பற்றாளர்களிலும் ஒரு பகுதியினர், ஏதோஒரு வழியில் புலிகள் இயக்கத்துடன் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். இதனால் இயக்கத்துள் நடந்துகொண்டிருந்த உட்கட்சிப் போராட்டம் மேலும் விரிவடையும் நிலையும் செழுமையடையும் நிலையும் தோன்றியது.

இக்கால கட்டத்தில் புலிகள் இயக்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளாவன:

1. மக்கள் மத்தியிலான பிணக்குகளை இணக்கமாகவும், வெளிப் படையாகவும், மக்களின் பங்களிப்புகள் மூலமும் தீர்த்து வைக்கவுமான அமைப்பான இணக்கசபை. இது மக்களின் அமோக ஆதரவுடன் துரிதமாக வளர்ந்துவந்தது. இணக்கசபை கிராமங்களின்

அதிகார மையங்களுக்கு ஒரு சவாலாகவும் இருந்து வந்தது.

2. விடுதலைப் புலிகளின் சார்பில் பிற அரசியல் அணிகளுடன் அரசியல் ரீதியான தொடர்புகளைப் பேணவும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு அவசியமான மக்கள் ஆதரவுத் தளத்தை தயார்படுத்தவுமென அமைக்கப்பட்ட புலிகளின் அரசியல் பிரிவு. மக்கள் மத்தியில் ஒரு அங்கீகாரத்தைப் பெறுவதில் அரசியல் பிரிவு வெற்றிபெற்றிருந்தது.

3. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிருவாக இயந்திரத்தையும், அதன் செயற்பாடுகளையும் திரைக்குப் பின்னால் இருந்து நெறிப்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட 'நிழல் நிருவாகம்'. அரசாங்க அதிகாரிகளை ஆயுதத்தின் துணைகொண்டு 'ஆணையிடுகிறேன் கீழ்ப்படி' என இயக்குவதற்குப் பதிலாக, இணக்கமான முறையில் சம்பந்தப்பட்ட மக்களையும் முன்வைத்துக் கலந்துரையாடியும், மக்கள் அழுத்தத்தை உருவாக்கியும் அரசாங்க அதிகார அடுக்குகள் இயக்கப்பட்டன. இவ் வதிகார அடுக்குகளுக்கு ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புப் பிரிவினரின் பக்கத்துணை கிடைக்காத நிலை இருந்ததால், அவர்கள் அடக்கியே வாசித்தார்கள். சயனற் குப்பிகள் அணியாத, தலைவருக்கு விசுவாசமாக இருப்பேன் என சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளாதவர்களே நிழல் நிருவாகப் பொறுப்பாளர்களாக இருந்தனர். இதை இராணுவ ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட சில தளர்வுகள் எனக் கூறலாம். இவ்வமைப்பு மிகச் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்று வந்தது.

4. தமிழீழ பொருளாதார மறுசீரமைப்புக்கென அமைக்கப்பட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். இப்பிரிவு முறையாகச் செயற்படவில்லை. பொறுப்பாளரின் ஆளுமைக் குறைபாடும், நிதிப் பற்றாக்குறையும் இதற்கான காரணங்களாக இருந்திருக்கக் கூடும்.

5. தமிழீழ கலைபண்பாட்டுக் கழகம். இது புதுவை இரத்தினதுரையின் தலைமையின் கீழ் இருந்ததை சகலரும் அறிவர். மக்கள் இலக்கியங்களை உருவாக்குவதில் இது குறிப்பிடக்கூடிய பங்கு எதுவும் வகிக்கவில்லை. துதிபாடலும், இயக்க பிரச்சாரமுமே இதன் செயற்பாடுகளாக இருந்தன.

6. *மாணவர் அமைப்பு. சமூக உள்ளடக்கம் கொண்ட கல்வித்திட்டத்தை அமுல்படுத்துவதுவும், சமூக உணர்வு கொண்ட மாணவர்களை உருவாக்குவதுமே மாணவர் மத்தியிலான நோக்கமாக இருந்தது. இதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் இரண்டுதான், சாளரம் எனும் மாணவர் இதழும், வருடாவருடம் நடத்தப்பட்ட அன்னை பூபதி பொது அறிவுப்பரீட்சைகளுமாகும். இப்பொது அறிவு வினாத்தாள் பற்றிய திறனாய்வு, ஐலண்ட் பத்திரிகையில் வெளிவந்தது. யாழ் குடாநாட்டு பாடசாலைகளில் இம் முயற்சிகள் மிகக் குறைந்தளவு வெற்றியையே தந்தன. ஆனால் வடமாகணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் பாடசாலைக் கல்வி கற்பிக்கப்படும் முறையிலும், மாணவர்களின் கண்ணோட்டத்திலும் குறிப்பிடக்கூடியளவு மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றத்தை வன்னிப் பாடசாலைகளில் இருந்து வந்த போராளிகளில் காணக்கூடியதாய் இருந்தது. ஆசிரியர்களையும் மாணவர்களையும் அணிதிரட்டுவதிலும் சிறு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால், மாணவர்களையும், ஆசிரியர்களையும் தனித்தனி அமைப்புகளாக கட்டியமைப்பதில் சிறு முன்னேற்றம் கூட ஏற்படவில்லை.*

*யாழ்மாவட்டத்தில் மாணவர் அமைப்பு வேலைகள் மிக அற்ப முன்னேற்றத்தையே தந்தது பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தது. இது சாளரம் அணியினரிடையே ஒரு விவாதத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பது இயல்பானது. இந்த விவாதத்தின் முடிவு என்னவாக இருந்திருக்கும் என்பதை, சாளரம் பதிப்பாசிரியரின் கீழ்வரும் வாக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.*

*ஆறுமுகநாவலர் சைவசமய வளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு செயற்பட்டவர் என்பர். விபுலானந்த அடிகளும் சைவ சமய வளர்ச்சிக்குப் பணி செய்வதற்காகத் துறவறம் பூண்டவர். இதனால் இருவரையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்க முடியாது.*

*நாவலரும் அடிகளாரும் சமூகப் பிரச்சினைகளில் வெவ்வேறு கருத்து நிலைகளைக் கொண்டிருந்தவர்கள். முரண்பட்ட கருத்து நிலைகளைக் கொண்டிருந்தவர்கள். இது சமூகப் பிரச்சினைகளை அவர்கள் அணுகிய விதங்களின் வெளிப்பாடு. சமூகத்தை அவர்கள் பார்த்த கண்ணோட்டத்தின் வேறுபாடு.*

பதிப்பாசிரியரியன் இக்கூற்று இந்நூல் வெளிவருவதற்கான உடனடி அரசியல் பின்னணியை தெளிவாக்குகின்றது. யாழ் சைவ வேளாளப் புத்திஜீவிகளால், ஆறுமுகநாவலரைப் பற்றி உருவாக்கவும், பரப்பவும்பட்டுவரும் உண்மைக்குப் புறம்பான மதிப்பீடுகளை பகிரங்கமாக நிராகரிக்கவேண்டும் என்பதே அந்தப் பின்னணியாகும். அதற்குகந்த நூலை எழுதும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. வெகுஜனத்தன்மை பெறவேண்டிய ஒரு நூலில் மத, ஆன்மீக, சாதிய மதிப்பீடுகளால் 'புனிதமானவர்', 'இறைஅருள் பெற்றவர்' என சமூகத்தின் உச்சாணிக் கொம்பில் தூக்கிவைக்கப்பட்டுள்ள ஒருவரைப் பற்றிய நிராகரணத்தை வெளிப்படையாக முன்வைப்பது என்பது எந்த சாதகபலனையும் தரப்போவதில்லை, பாதகமான விளைவுகளையே தரும். ஆகவே நூலின் தொனியும், முன்வைப்பும் எவ்விதம் இருக்கவேண்டும் என்பது பற்றி பலரிடம் ஆலோசித்ததில் மௌனகுரு அவர்கள் முன்வைத்த ஆலோசனை மிகவும் பொருத்தமானதாகப் பட்டது. நேர்மறை குணாம்சங்கள் மிக்க விபுலானந்தரை முன்கொண்டு வருவதன் மூலம் ஆறுமுகநாவலரின் எதிர்மறைக் குணாம்சங்களை ஆராயும் போக்கை உருவாக்கலாமே என்பதுதான் அவர் முன்வைத்த ஆலோசனையாகும். அது சரியானதாகப்பட்டது. நூல் பிறந்தது. ஒரே கல்லில் இரு மாங்காய்கள் விழுத்தலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நூல் வெளிவந்த பின்னர், இவ்வெதிர்பார்ப்பு தப்பானது என்பது புரிந்தது. சைவ வேளாளிய ஆதிக்கத்திற்கு எதிரானது என்ற பக்கத்தில் இயக்கத்தினர் இந்நூலை வரவேற்றனர். ஆனால், புலிகள் இயக்கத்தின் ஒரு சாரார் இந்நூலில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பற்றிக் கூறியிருப்பதை விரும்பவில்லை. இலங்கைத் தேசியம் பற்றிப் பேசுபவர்கள் அனைவரையும் தமிழ்த் தேசியத் துரோகிகளென வகைப்படுத்தி வைத்திருக்கும் அவர்கள் யாழ் வாலிபர் காங்கிரஸை முற்போக்கானது என்று கூறுவதை வெறுத்தார்கள். இவ்வமைப்பை சாதாரண படித்தவர்கள் மத்தியில் இருட்டடிப்புச் செய்வதே இவர்களின் நோக்கமாக இருந்தது.

யாழ்குடாநாட்டிலும் சமூக அரசியல் தேடல் உள்ள புத்திஜீவிகள் மிகக் குறைவாகவே இருந்தனர். புலிகள் மீதிருந்த அதீத நம்பிக்கையினாலும், தமிழீழம் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையினாலும் தேசிய அரசியல் தேடல்கூட மிக மந்தமானதாகவே இருந்தது. இதனால் எதிர்பார்த்த பலாபலன்களை இந்நூல் அப்போது தரவில்லை. ஆனால்

முள்ளிவாய்க்கால் அழிவுக்குப் பின் சமூக அரசியல் தேடலும், தேசிய அரசியல் தேடலும் அளவிலும் குணாம்சத்திலும் அதிகரித்துள்ளது. ஆகவே இச் சூழலில் இந்நூல் மறுபதிப்புச் செய்யப்படுவது நல்லது.

நூல் எழுதப்பட்ட காலத்தின்போது நிலவிய உட்கட்சிப் போராட்டம், கருத்து இறுக்கத்தில் சில தளர்வுகளை ஏற்படுத்தியிருந்தபோதும் எழுதுவதற்கான எல்லைப்படுத்தல்கள் அதிக வல்லமை பெற்றவையாகவே இருந்தன. அதன் பிரதிபலிப்பு இந்நூலிலும் காணப்படுகின்றது. இந்நூலில் கூறப்படவேண்டிய மூன்று விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. தமிழ்த் தேசியம் தொடர்பான விபுலானந்தரின் நிலைப்பாடு.
2. கல்வி அபிவிருத்தி தொடர்பான விபுலானந்தரின் நிலைப்பாடு.
3. மதச் சீர்திருத்தம் தொடர்பான விபுலானந்தரின் நிலைப்பாடு.

முதல் இரண்டுக்குமான காரணம் இயக்கம்தான். மூன்றாவதற்கான காரணம் வாசகர்களிடையே காணப்பட்ட சமூக விழிப்புணர்வின்மை. அது பற்றிக் கூறியிருந்தால் அது சைவத்திற்கு எதிரான கண்டன விமர்சனமாக மாத்திரமே நோக்கப்பட்டிருக்கும். இது தமிழ்த் தேசிய அணிதிரளுலுக்கு பாதகமாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று நிலைமை வேறு. தேசிய அணிக்குள்ளும் மதத்தைப் பற்றியும் ஆராயவேண்டுமெனும் கருத்து தோன்றியுள்ளது. ஆகவே விடுபட்ட இம்மூன்று நிலைப்பாடுகளையிட்டும் சிறிது கூறவேண்டியுள்ளது.

### 1. தமிழ்த் தேசியம் தொடர்பான விபுலானந்தரின் நிலைப்பாடு (முதற்பகுதி)

இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் ஒருங்குசேர்ந்து உணர்வு பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் நேசித்த ஒரிரு டசின் தமிழ் அறிஞர்களில் விபுலானந்தர் முதன்மையானவர். இவர் ஒரு பல்துறை அறிஞர். தமிழ் மொழிக்கும், தமிழ் பண்பாட்டிற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்புகளை வழங்கியதில் இவருக்கு இணையாக இன்றுவரை எவரும் தோன்றவில்லை. அறிவியற் களத்தில் மாத்திரம் அவர் தன்னை நிறுத்திக் கொள்ளவில்லை, தமிழ் மொழி, தமிழ் பண்பாடு ஆகிய இரண்டிற்காகவும் உழைத்த ஒரு செயல் வீரனாகவும், போராளியாகவும் இருந்துள்ளார். அவரின் இப்பங்களிப்புகள் பற்றி மிகச் சில ஆய்வு

*நூல்களும், ஏராளமான விபரணக் குறிப்புகளும் வெளிவந்துள்ளன. ஆகவே இது பற்றி இங்கு தவிர்த்துக் கொள்வோம்.*

*தமிழ் மொழியினதும், தமிழ்ப் பண்பாட்டினதும் வளர்ச்சிக்காக இவ்வளவு பெரும் சாதனைகள் புரிந்த விபுலானந்தரில் தமிழ்த் தேசியத்தின் சாயல்கூட படாதிருந்தது என்பதுதான் இங்கு அவதானிப்புக்குரிய விடயமாகும். அவர் சமூக அரங்கிலும், தமிழ் அரங்கிலும் செயற்பட்ட காலத்தில் (1910-1947வரை) தமிழ்த் தேசியம் தோன்றியிருக்கவில்லை என்று கூறமுடியாது. இக்காலத்தில்தான் தமிழ் நாட்டுப் பகுத்தறிவு இயக்கம் முதலில் திராவிட இயக்கத்தையும், பின்னர் தமிழ்த் தேசிய இயக்கத்தையும் நடத்தினார்கள். பெரியார் யாழ்வாலிப காங்கிரசின் அழைப்பின் பேரில் அவர்களின் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வந்து, சில நாட்கள் இங்கு தங்கியிருந்து தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரமும், பகுத்தறிவுப் பிரச்சாரமும் செய்தும் உள்ளார். யாழ் வாலிபர் காங்கிரஸ் தலைவர் ஹண்டி பேரின்பநாயகம் இந்தியா சென்று பெரியாரின் பாசறையில் சிறிது காலம் பயின்றும் உள்ளார். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைத் தேசியத்தின் ஒரு கிளையாக தமிழ்த் தேசியம் வளரத்தொடங்கியிருந்தது. ஆறுமுக நாவலர் இதில் பிரதானியாகச் செயற்பட்டுள்ளார். ஆகவே இவரின் சமகாலத்தில், தமிழ்த் தேசியம் விவாதத்திற்குரிய பொருளாகவும், அரசியல் முக்கியத்துவம் மிக்க சமூக நிகழ்வுப்போக்காகவும் உருவாகியிருந்ததை காணக்கூடியதாய் உள்ளது. அதே காலப்பகுதியில் இவரையும் பிரதானமானவர்களில் ஒருவராகக் கொண்டிருந்த யாழ் வாலிபர் காங்கிரஸும் இலங்கைத் தேசியத்தையே முன்வைத்தது; தமிழ்த் தேசியத்தைக் கண்டுகொள்ளவில்லை. காந்தியின் தலைமையிலான இந்திய தேசிய இயக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டே இவர்கள் இலங்கைத் தேசியத்தையும் வேண்டினார்கள். டொனமூர் விசாரணைக் கமிஷன் வந்திருந்த அதே வேளையில் காந்தியும் யாழ்ப்பாணத்தில் யாழ் காங்கிரஸின் விருந்தினராக இருந்தார். தமிழ்த் தேசியத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டாலும் தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் இவ் இயக்கம் இயக்கங்கள் நடத்தியது. தமிழ்ப் பண்பாட்டு மீட்சியும் இவர்களின் முழக்கங்களில் ஒன்றாகும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சங்ககால பண்பாடு என்று இவர்கள் கருதியது சங்ககால மீட்பேயாகும். ONE HUNDRED TAMILS OF THE 20TH CENTURY எனும் தலைப்பிலான விபுலானந்தரின் கட்டுரை இதற்கு ஆதாரமாகும். 1928-ஆம் ஆண்டு, யாழ் கீரிமலையில் நடந்த இளைஞர்*

காங்கிரஸின் வருடாந்த மாநாட்டில் தலைமையுரை ஆற்றியது விபுலானந்தரேயாகும். இத்தலைமையுரையின் உள்ளடக்கம் தமிழ் கலை இலக்கியத்தின் மீட்சியாகும்.

விபுலானந்தரால் கண்டுகொள்ளப்படாமல் விட்டது, தமிழ்த் தேசியம் மட்டுமல்ல, தேசிய எல்லைகள் அற்ற தமிழின இயலும்தான் (Pan Tamilism). தமிழ் இனத்தின் அகத்தில் ஒன்றுடன் ஒன்று பகைமுரண் தன்மைபெற்ற இரு தத்துவங்களும், இரு பண்பாடுகளும் காணப்படுவதே உண்மையாகும். இவற்றிற்கு இடையேயான போராட்டம்தான் தமிழ் இனத்தின் வரலாறாகும். ஓர் இனம் ஒரே நேரத்தில் இரு குணாம்சங்களைக் கொண்டதாகவுள்ளது. அது, அதுவாக இருக்கும் அதேநேரத்தில், அதுவல்லதாத மற்றொன்றாகவும் உள்ளது. இந்த உண்மையை மூடிமறைத்து, தாம் விரும்பும் தத்துவத்தையும், பண்பாட்டையையும் மட்டுமே ஏகமானது என வாதிட்டு அதைத்தான் அவ் இனத்தின் ஏக குணாம்சமாக காண்பிப்பவர்களே தமிழியவாதிகளாவர். தேசிய எல்லைகளையும் இவர்கள் கணக்கில் எடுப்பதில்லை. தமிழியவாதிகள் இருவகைப்படுவர், ஒரு சாரார் சைவ சித்தாந்தம்தான் தமிழினத்தின் தத்துவம் என வாதிடுபவர்கள். மறுசாரார், திராவிட மரபுதான் தமிழின மரபு என வாதிடுபவர்கள்.

திராவிட மரபு வேதாந்தத்திற்கு எதிரானது. சைவ சித்தாந்திகள் வேதாந்தத்தின் வைதீக மரபைச் சேர்ந்தவர்கள். விபுலானந்தர் இவ்விரு மரபுகளில் எந்த மரபையும் சேர்ந்தவரல்ல, அவர் வேதாந்தத்தின் அவைதீக மரபினர்(சன்மார்க்க மரபு). ஆகவே அவர் தமிழியத்தின் எந்தப் பிரிவினருடனும் தன்னை இனங்காட்டிக் கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியத்தை விபுலானந்தர் நிராகரித்தமைக்கான காரணம் என்ன? தமிழியத்தின் மூன்றாவது அணியாக விபுலானந்தர் மாறாதது ஏன்? பதில் காண முற்படுவோம். என்ன காரணமாக இருந்தாலும் தமிழ்த் தேசியர்கள் இதை விபுலானந்தரின் பலவீனம் என்றே கருதுவர். தமிழராகப் பிறந்த அனைவரும் தமிழ்த் தேசியத்தை ஏற்றேயாக வேண்டும் என அடம்பிடிக்கும் தமிழ்த் தேசியவாதிகள் விபுலானந்தரை மட்டும் விட்டு வைப்பார்களா என்ன? இதனால்தான், இந்நூல் விபுலானந்தரிடம் இல்லாதிருந்த பக்கம் பற்றி எதுவுமே பேசாமல், அவரிடம் இருந்த நிறைவுகள் பற்றியே பேசியுள்ளது.

தேசியம், தமிழியம் ஆகியன தொடர்பான அவரின் நிலைப்பாட்டிற் கான காரணம் பற்றிய விவாதத்தைத் தொடரமுன்னர், மதம் பற்றிய அவரின் நிலைப்பாட்டை புரிந்துகொள்ள முயலுவோம். அதன்பின்னர், தேசியம் பற்றிய விவரத்துள் மீண்டும் செல்வோம். ஏனெனில் மதம் தொடர்பான அவரின் நிலைப்பாடுதான் தேசியம் தொடர்பான அவரின் நிலைப்பாட்டிற்கான நேரடிக் காரணமாகும். எவ்விதம் என்பதை நோக்குவோம்.

### 2. மதச் சீர்திருத்தம் தொடபான விபுலானந்தரின் நிலைப்பாடு

மதச் சீர்திருத்தத்தை வெளிப்படுத்திய முறையில் அமைந்த அவரின் இரு கூற்றுகளை மேற்கோள்காட்டி எமது விளக்கத்தைத் தொடர்வோம்.

> ‘வெள்ளைநிற மல்லிகையோ?
> வேறெந்த மாமலரோ?
> வள்ளல் அடியிணைக்கு
> வாய்த்த மலரெதுவோ?
> வெள்ளைநிறப் பூவுமல்ல!
> வேறெந்த மலருமல்ல!
> உள்ளக் கமலமடி
> உத்தமனார் வேண்டுவது!’

கடவுளை வள்ளல், உத்தமன் என அடையாளப்படுத்துகிறார். அறநெறி வகைப்பட்ட அடையாளப்படுத்தல். அனைத்து மதப்பிரிவினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாளப்படுத்தல். எந்தக் கடவுளுக்கு எந்தப் பூ என அவர் விவாதிக்க வரவில்லை. உள்ளத்தூய்மையெனும் பூ போதும் என்கிறார். வழிபாட்டில் அறநெறியை வலியுறுத்துவதுடன், வைதீகத்தையும் நிராகரிக்கிறார்.

‘‘மதமானது தரம் குறைந்துவரும் கடந்த 600 அல்லது 700 வருடங்களையிட்டு சற்றுச் சிந்தித்துப்பாருங்கள், பல நூற்றுக்கணக்கான மனிதர்கள் வருடக் கணக்காக எதையிட்டு விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? நாம் தண்ணீர் அருந்தும் கோப்பையை வலக்கையால் பிடிக்கவேண்டுமா அல்லது இடக்கையால் பிடிக்க வேண்டுமா? கைகளை மூன்றுதரம் கழுவவேண்டுமா அல்லது நான்குதரம் கழுவவேண்டுமா? போன்றவற்றைப் பற்றித்தானே? எமது

*மதம் சமையல் அறைக்குள் செல்லும் அபாயம் உண்டு. எமது கடவுள் சமையல் பானையாகியுள்ளார். அந்தப் பானை (எமது மதம்) 'என்னைத் தொடாதே நான், புனிதமானவன்' எனப் பறைசாற்றி நிற்கிறது. வாழ்க்கையின் உயர் சிக்கல்களை மனித மூளை எதிர்கொள்ளமுடியா நிலை வரும்போது, மனித மூளை வலுக்குறைந்து வருதலுக்கான அடையாளமே இதுவாகும். மூளை தனது அனைத்து சக்திகளையும், தனது அனைத்து செயல்பாடுகளையும், தனது அனைத்து சிந்தனை ஆற்றல்களையும் இழந்து நிற்கிறது. அதன் அனைத்து இயல்புத் தன்மைகளும் இழக்கப்பட்டு விட்டன.''*

*''அதற்குப் பதிலாக மதம் ஒரு செயல் சக்தியாக மாறவேண்டும், செயல்படு நம்பிக்கை மாத்திரம்தான் மனிதனுக்கு செயல்படு ஆளுமையைக் கொடுக்கவல்லது. இதன் ஊடாகத்தான் மனிதன் கடவுளின் கரங்களாக மாறுகிறான். பிறர் மீதான ஆக்கிரமிப்பு உந்துதலிலும், பிறரை வெல்லவேண்டும் என்ற அவாவிலும் இருந்து அவன் விடுபடும்போது மாத்திரம்தான் மனிதன் அச்சம் என்றால் என்ன என்பதை அறியாத மனிதனாக மாறுவான். இனியும் அவன் செயலற்ற மனிதனாக இருக்கமாட்டான். ஏனெனில் உருவாக்குவதற்கு ஒரு சமுதாயமே உள்ளது என்பதையும், அவ்வுருவாக்கலில் பங்குபற்றத் தான் கடமைப்பட்டவன் என்பதையும் உணர்ந்த அவன் இனியும் தயக்கவாதியாகவும் மென்போக்காளனாகவும் இருக்கமாட்டான். அவன் இவ்வுலக ஆசாபாசங்களில் இருந்து ஒதுங்கி இருந்தாலும், உண்மைக்கான போராட்டத்தை நடத்துவதற்காக, எப்போது அவசியப்படுகிறதோ, எங்கே தேவைப்படுகிறதோ, அப்போது, அங்கே, அதற்காக தனது இன்னுயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டான்.''*

*எந்தக் கையால் கோப்பையைப் பிடிப்பது, எத்தனைதரம் கையைக் கழுவுவது என்பதையும், இறைவனுக்கு சூட்டப்படும் மலர் எதுவாய் இருக்கவேண்டும் என்பதையும் பொருத்திப் பார்க்கவும். ஒரே விடயம் வெவ்வேறு உவமானங்கள். ஆனால், இது விபுலானந்தரின் கூற்றல்ல. விபுலானந்தரின் குருவான விவேகானத்தரின் கூற்றாகும். இக்கூற்றை மேற்கோள்காட்டி பேசியது விபுலாந்தரல்ல, கலாநிதி அஸீஸாகும். பேசப்பட்ட இடம் யாழ்-வைத்தீஸ்வராக் கல்லூரியின் விழாவொன்றின் போதாகும். இவர்தான் ஒரு இந்துக் கல்லூரியில் படித்த முதலாவது யாழ்-முஸ்லீம் மாணவனாகும். விவேகானந்தரின் சிந்தனையைப் புரிந்துகொள்ள இம்மேற்கோள் உதவும். இதுதான் விபுலானந்தரின் சிந்தனையுமாகும். இச்சிந்தனையை மேலும் விவரிப்போம்.*

மேற்கூறிய இரு கூற்றுகளும் சைவநெறிக்கு எதிரானது என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமா? பிற மத எதிர்ப்பும், அனுஷ்டானங்களை மயிரிழை பிசகாமல் பினபற்றுவதுவுந்தான் சைவநெறியாகும். ஆறுமுக நாவலருக்கும், வள்ளலாருக்கும் இடையே நடந்த அருட்பா, மருட்பா மோதல், சைவநெறிக்கும் சன்மார்க்க நெறிக்கும் இடையே நடந்த மோதலாகும். ஆறுமுக நாவலரால் மேற்கொள்ளப்பட்ட மதச் சீர்திருத்தம் சமூகவளர்ச்சியை நேர் எதிர்நின்று தடுப்பதற்கானது. விபுலானந்தரால் மேற்கொள்ளப்பட்ட மதச் சீர்திருத்தம் சமூகவளர்ச்சியை முன்நோக்கித் தள்ளுவதற்கானது.

இருந்தும், சன்மார்க்க நெறியும், சைவநெறியும் வேதாந்தப் பள்ளியின் இரு கிளைப்பள்ளிகளாகும். முன்னையது அவைதீகக் கிளை, பின்னையது வைதீகக் கிளை. இவ்விரு பள்ளிகளும் ஒரே சூலின் இரு குழந்தைகளானதால் சிந்தனைப் பள்ளி என்ற முறையில் இவர்களுக்கிடையே இணக்கமும் உண்டு பிணக்கமும் உண்டு; இணக்கமே அதிகம்; ஆனால், நடைமுறை சார்ந்த விடயங்களில் பிணக்கமே அதிகளவில் உண்டு. பாரதியாரைப் பொறுத்த மதிப்பீட்டில் இந்த நடைமுறைப் பிணக்கத்தை மிகத் தெளிவாகக் காணலாம். பாரதியார் வாழுங்காலத்தில் அவர் விரைவில் செத்துப்போவதற்கான சமூகச் சூழலை வைதீகப் பிரிவு உருவாக்கிக் கொண்டே இருந்தது. செத்தபின்னர் அவரின் புகழுடம்பை இருட்டடிப்புச் செய்து வந்தது, அது முடியாமல் போனபின்னர், அவரை வேதாந்தச் சிமிழுக்குள் அடக்கிவைக்க முற்பட்டது, இன்றும் அம்முயற்சி தொடர்கிறது. ஆனால் அவைதீகரான விபுலானந்தர், விவேகானந்தரின் விசுவாசியும், சன்மார்க்கத்தை ஒரு நெறியாக்கி தமிழரிடயே முன்வைத்து, அந்நெறிப்படி வாழ்ந்தும் காட்டிய வள்ளலாரை தனது மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டவருமான பாரதியாரைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றி இருந்தார். இது பற்றி நூலில் கூறப்பட்டுள்ளது.

**சன்மார்க்கத்தின் வரலாறு பற்றிய சிறு குறிப்பு:**

மோகன் ராயால் உருவாக்கப்பட்ட பிரம்மசமாஜமே சன்மார்க்க நெறியின் தோற்றுவாயாகும். வேதாந்தத்தின் வைதீகத்திற்கு எதிராகப் போராடிய முதல் அரசியல்-மத இயக்கம் இதுவேயாகும். பிரமம் ஒன்றே அநாதியானதும், உண்மையானதும் என்பதே இவர்களின் தத்துவமாகும். அந்தப் பிரமத்துக்கு இவர்கள் எந்த உருவத்தையும் கொடுக்கவில்லை. அது எங்கும் எதிலும் வியாபித்திருக்கும் ஒரு

அருவம் என்றார்கள். ஆகவே எந்த உருவத்தையும் இவர்கள் வழிபடுவதில்லை. வைதீகம் கட்டிக்காத்துவரும் அனைத்து நியமங்களையும், தூய்மைகளையும், அனுஸ்டானங்களையும் நிராகரித்தார்கள். மத வேறுபாடுகளையிட்டு சகிப்புத்தன்மை காட்டினார்கள். மாட்டுக்கறி மீதிருந்த தடையைக்கூட நீக்கினார்கள். அரசியல் வேலைத்திட்டம் எதற்கும் உட்படாத அரசியல் ஆர்வமுள்ள மதவாதிகளக இருந்தார்கள். ஆனால் காலப்போக்கில் இவர்களின் காலனியல் எதிர்ப்புத் தன்மை மறைந்துவிட்டது. ஆங்கிலவழிக் கல்வியின் ஊடாக கிறிஸ்தவ மத செல்வாக்கிற்கு உள்ளானார்கள்.

பிரம்ம சமாஜத்தின் திசைமாறலினால் அதிருப்தியுற்ற பிரிவினரின் வழித்தோன்றல்களில் ஒரு கிளையே இராமகிருஷ்ண அணியாகும். இவர்கள் பிரம்ம சமாஜத்தின் வைதீக எதிர்ப்பில் அதிருப்தி கொண்டவர்களாவர். வைதீக எதிர்ப்பு காலனியல் எதிர்ப்புத்தன்மை கொண்டதாகவும், பிற மதங்களிடம் சரணடையும் தன்மை அற்றதாவும் இருக்கவேண்டும் எனும் கொள்கை உடையவர்களாகும்.

இது ஒரு புறமிருக்க அடுத்த புறத்தில், ஆரிய சமாஜத்தின் வைதீக எதிர்ப்பின் மீது கோபம் கொண்ட ஒரு அணியும் களம் இறங்கியது. பிற மதங்களை மூர்க்கமாக எதிர்ப்பதுவும், வைதீகத்தைப் பேணிப் பாதுகாப்பதுவுமே இவர்களின் இலட்சியமாக இருந்து. இந்த இலட்சியத்தில் அவர்கள் மிகவும் மூர்க்கத்தனமாக இருந்தார்கள். காலனியல் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்ட இந்து மன்னர்கள் இவர்களின் ஆதரவாளர்களாக இருந்தார்கள். இதனால் இவர்கள் தீவிர காலனிய எதிர்ப்பாளர்களாகவும் இருந்தார்கள். தயானந்த சரஸ்வதியே இதன் ஸ்தாபகராவார். ‘சுத்தி’ இயக்கமே இவர்களின் முதல் இயக்கமாகும். ‘சுத்தி’ என்பது, மதம் மாறிய கிறிஸ்துவர்களையும், இஸ்லாமியர்களையும் மீண்டும் இந்து மதத்திற்கு மாற்றுவதாகும். இது பிற மதங்களுக்கு எதிரான போர்ப்பிரகடனமே. வைதீக மரபுகளைப் பேணுவது கட்டாயமாக்கப்படுகிறது. இதன் மூலம் அவைதீகர்களுக்கு எதிரான ஒரு கருத்தியல் போரும் ஆரம்பமாகிறது. அவைதீகர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இந்துமதம் தனக்குள்ளும் போராடியது. பிற மதங்களுடனும் போராடியது. இதனால் இப்போராட்டத்தை நடத்தியவர்கள் தீவிர அரசியலிலும் ஈடுபடுகிறார்கள். தயானந்த சரஸ்வதி எனும் கடுங்கோட்பாட்டாளரின் அரசியல் வழித்தோன்றல்தான் ஆர்.எஸ்.எஸ் ஆகும்.

அடுத்த பக்கத்தில் சுத்தி இயக்கத்திற்கு எதிரான ஓட்டத்தினதும், பிரமசமாஜத்தின் வழித்தோற்றத்தினதும் திரட்சிதான் இராமகிருஷ்ணராகும். ஜீவகாருண்யம், மானுட நேயம், சன்மார்க்கம் ஆகிய கோட்பாடுகளுக்குக் காரணமான, பிரமம் ஒன்றுதான் எனும் தத்துவத்தை கொண்டிருந்ததால், மிக உயரிய உள்வலு கொண்டிருந்த இவர், நடைமுறையில் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டே இருந்தார். அதுவும் பௌத்தத்திற்கு எதிரான கடுங்கோட்பாளர் பரம்பரையில் தோன்றிய இந்து மன்னர்கள் நிரம்பியிருந்த வங்கம் இராமகிருஷ்ணரை நிறையவே தனிமைப்படுத்தியிருந்தது. விவேகானந்தர் எனும் சீடர்தான் இராமகிருஷ்ணரை வெளிக்கொணர்கிறார். இதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தவர்கள் தமிழ் நாட்டின் குறுநில மன்னரும் தமிழ்நாட்டு மக்களுமே. வேதாந்தத்தின் ஒரு கிளையும், வைதீகத்தின் உறைவிடமுமான சைவம், தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்ற மதமாக இருந்தபோதிலும், அவைதீகர்களின் செல்வாக்கும் இங்கு உள்ளது என்பதையே இது காட்டுகிறது.

விபுலானந்தரின் தத்துவார்த்த உள்ளடக்கத்தைச் சுருக்குவோம்; அது இரு குணாம்சங்கள் கொண்டது. ஒன்று வேதாந்தம், மற்றையது அவைதீகம். இதை, வேதாந்த சுத்திகரிப்புத் தத்துவம் என்று கூறலாம். இன்னும் தெளிவாகச் சொல்வதானால், உருவாகிவரும் புதிய சிந்தனைப் போக்குக்கு ஏற்ப வேதாந்தத்திற்குப் புத்துயிர்ப்புக் கொடுக்கும் தத்துவம் என்றும் கூறலாம். ஆகவே இங்கு தர்க்கம் வைதீகமா, அவைதீகமா என்பதை விடுத்து வேதாந்தமா, வேதாந்த எதிர்ப்புத் தத்துவமா என்ற தர்க்கத்துக்குச் செல்கிறது. இந்திய தத்துவார்த்த வரலாற்றின் படி வேதாந்த எதிர்ப்புத் தத்துவம் என்பது லோகாயதவாதமாகும். ஆகவே வேதாந்தமா, லோகாயதவாதமா என்ற தர்க்கத்துக்குச் செல்கிறோம். அத் தர்க்கத்துக்குள் செல்லும் நோக்கம் இவ்விடத்தில் இல்லை. ஆகவே அத்தர்க்கத்தின் அடிப்படையில் விபுலானந்தரை மதிப்பிடும் நோக்கமும் இவ்விடத்தில் இல்லை. ஆனால் மத சீர்திருத்தம் தொடர்பான விபுலானந்தரின் நிலைப்பாடு பற்றிப் புரிந்துகொள்ள இவை போதும்.

## 3. தமிழ்த் தேசியம் தொடர்பான விபுலானந்தரின் நிலைப்பாடு (இரண்டாம் பகுதி)

மதம் தொடர்பான அவரின் நிலைப்பாட்டுக்கும் தேசியம் தொடர்பான அவரின் நிலைப்பாட்டுக்கும் இடையேயான தொடர்பு என்ன?

வேதாந்தம் இந்திய உபகண்டம் முழுமையும் தனதென்றே கருதுகின்றது. வைதீகப் பிரிவு பிற நம்பிக்கையாளர்களின் மீதான வலுப்பிரயோகத்தின் மூலம் இதைச் செய்ய எத்தனித்து வருகின்றது. கடும் போக்காளர்களான வைதீகர்கள் அரசியல் அரங்கினில் வேதாந்த (மத) பேரகங்காரவாதிகளாகிறார்கள், அவைதீகப் பிரிவு பிற நம்பிக்கையாளரை அரவணைத்துச் செல்வதன் மூலம் இதை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. அதாவது வேதாந்தத்தை நிலைநிறுத்துவதில் இவர்கள் மென்போக்காளர்களாக உள்ளார்கள். ஆனாலும், இவர்கள் லோகாயதவாதிகளையும் நாஸ்தீகர்களையும் தம்முடன் அரவணைத்துச் செல்ல தயாராயில்லை. கடும்போக்காளர்கள், மென்போக்காளர்கள் ஆகிய இரு சாராரும் வேதாந்தத்தின் வளர்ச்சிக்குப் பாதகமான அனைத்துத் தேசியங்களையும் நிராகரிக்கிறார்கள். இந்திய உபகண்டத்தில் தோன்றக்கூடிய புதிய தேசியங்கள் வேதாந்தத்தைப் பலவீனப்படுத்தும் என அவர்கள் அஞ்சினார்கள். அவர்களின் அச்சம் சரியானதுதான். பஞ்சாப் தேசியம் அவர்களை அச்சுறுத்துகின்றது. பாகிஸ்தானின் தோற்றம் இந்திய உபகண்டத்தில் வேதாந்தத்தை பலவீனப்படுத்தியே உள்ளது. வேதாந்த எதிர்ப்பு அரசைப் பலவீனப்படுத்துவதற்காகத்தான் பாக்கிஸ்தான் இரு கூறுகளாக்கப்பட்டது. இந்திய முஸ்லீம்களின் இந்தியத் தேசியம் வேதாந்த எதிர்ப்புத்தன்மை கொண்டதால் அதுவும் அவர்களை அச்சுறுத்துகின்றது. மூல பௌத்தம் வேதாந்தத்திற்கு மிகப் பெரும் எதிரியாக இருந்தாலும், 'பிரச்சன்ன' வேதாந்தமான இலங்கையின் இன்றைய பௌத்தம் வேதாந்தத்திற்கு எதிரானதல்ல. ஆகவே, இந்திய ஒருமைப்பாடு, இலங்கை ஒருமைப்பாடு, நேபாள ஒருமைப்பாடு, பர்மிய ஒருமைப்பாடு, பலூச்சிஸ்தான் தன்னாட்சி உரிமை ஆகியவையே தெற்காசிய தேசியங்கள் தொடர்பான அவர்களின் கோட்பாடாகும். கடுங்கோட்பாட்டு வேதாந்திகள் ஈழத் தமிழ்த் தேசியத்தை இந்துத்துவத் தேசியமாகக் காட்ட முற்படுவது வாக்குவேட்டை நுனிநாக்கு அரசியலே தவிர வேறொன்றுமல்ல. அவர்களும் என்ன விலை கொடுத்தும் (அது தமிழரின் உயிராகவும் இருக்கலாம்) இலங்கையின் ஒருமுகப்பாட்டைப் பேணுபவர்களேயாவர். தலித்துகளும், பழங்குடியினரும் வேதாந்தத்தை ஏற்கப்போவதில்லை. அவர்களின் தேசியம் வேதாந்தத்திற்கு எதிரானதே. இலங்கை, இந்திய தமிழ்த் தேசியங்களின் வரலாற்றை நோக்கும்போது, வேதாந்தத்திற்கு எதிரான அரசியல் போக்கும், வேதாந்தத்தின் வைதீக நெறிகளுக்கு எதிரான அரசியல் போக்கும் இன்னமும் பலவீனமடைந்துவிடவில்லை. இத்தமிழ்த்

தேசியங்களுக்கு தன்னாட்சி உரிமை கிடைக்குமானால் வேதாந்த எதிர்ப்புப் போக்கு பலப்படும் என நிச்சயமாகக் கூறலாம். ஆகவே இரு பிரிவு வேதாந்திகளும் தமிழ்த் தேசியத்தை நிராகரிப்பவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

கடுங்கோட்பாட்டாளர்கள் மத பேரகங்காரவாதிகளாகவும், மென்கோட்பாட்டாளர்கள் சன்மார்க்க நெறியர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

கடுங்கோட்பாட்டாளர்கள் பிறமக்களுக்கு எதிரான வன்முறையின் மூலம் தேசிய ஒருமுகப்பாட்டை பாதுகாப்பவர்களாகவும், மென்கோட்பாட்டாளர்கள் சமத்துவத்துடன் கூடிய சமாதான-சகஜீவன வாழ்க்கைமுறையை மக்களிடையே உருவாக்குவதன் மூலம் வேதாந்தத்தை நடுவமாகக் கொண்ட தேசிய ஒருமுகப்பாட்டை உருவாக்க முயலுபவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

கடுங்கோட்பாட்டாளர்கள் பிற மக்கள் பிரிவினரின் தனித்துவத்தை, குறிப்பாக பண்பாட்டுத் தனித்துவத்தை (மொழியும் உள்ளடங்கும்-மொழி வெறுமனே ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டுமல்ல. புதிதாக உருவாக்கப்படும் மொழிகள் தவிர பிற மொழிகள் அனைத்துமே, பண்பாட்டின் உறைவிடமாவும், நிறமுகூர்த்தங் களாகவும் செயல்படுகின்றன.) அழிக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்களாகவும், மென்கோட்பாட்டாளர்கள் பிற மக்களின் பண்பாட்டுத் தனித்துவத்தை பாதுகாத்து வளர்த்தெடுத்து வருபவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

கடுங்கோட்பாட்டாளர்கள் வேதாந்த சிந்தனைப் பள்ளிக்கும், பிற சிந்தனைப் பள்ளிகளுக்கும் இடையேயான கருத்துப் போராட்டத்தில் ஜனநாயக விரோதமாக நடந்து கொள்பவர்களாகவும், இக்கருத்துப் போராட்டத்தை மக்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இட்டுச்சென்று மக்கள் தமக்குள் பகைப்படும் போக்கை உருவாக்குபவர்காளாகவும்; மென்கோட்பாட்டாளர்கள் கருத்தியல் போராட்டத்தில் ஜனநாயக வழிமுறைகளைக் கையாள்பவர்களாகவும், அதேவேளை சமூக பொதுப்பிரச்சினைகளில் எந்தச் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அவர்களுடன் ஒன்று சேர்ந்து செயல்படுவதில் முன் உதாரணிகளாக இருந்து, மக்கள் தமக்குள் இசைபட்டு வாழும் போக்கை வளர்த்து வருபவர்களாகவும்; இருந்து

வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் விபுலானந்தரின் நடவடிக்கைகள் மென்கோட்பாட்டளர்களுக்கு உரித்தானதாகத்தான் இருந்தன என்பதை நூல் விளக்குகின்றது. மாணவர்கள் மும்மொழியிலும் திறமை பெற்றிருக்கவேண்டும் எனும் அவரின் கொள்கைக்கான காரணமும் இதுதான். கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பல்வேறுபட்ட வளர்ச்சிக்கு காரணமாயிருந்த அஸீஸுக்கும் இவருக்கும் இருந்த நெருங்கிய நட்புக்கான காரணமும் இதுதான். அஸீஸ் இவரைத் தன் வழிகாட்டியாகவே ஏற்றுக்கொண்டிருந்தார். தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சிக்காக அறிவியல் துறையிலும், நடைமுறைக் களத்திலும் கடினமாக உழைத்ததற்கான காரணமும் இதுதான்.

தெற்காசிய நாடுகளின் இன்றைய உடனடித் தேவை, இந்நாடுகளின் மக்களிடையே சமத்துவத்துடன் கூடிய சமாதான-சகஜீவன வாழ்க்கை முறையொன்றை செயல்படவைப்பதுதான். மக்கள் தம்மிடையே இசைபட வாழும் வாழ்க்கை முறையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் விபுலானந்தரை நாம் ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம். விபுலானந்த சிந்தனைக்கு மீண்டும் உயிர் கொடுக்கத் தேவையில்லை. ஏனெனில் வேதாந்தத்தை ஆதிக்க நிலையில் வைத்திருப்பது என்பது ஒரு அசட்டு நம்பிக்கை. ஆனால் இதற்காக அவர் பின்பற்றிய வழிமுறைக்காக அவரை வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

### 4. கல்வி அபிவிருத்தி தொடர்ப்பான விபுலானந்தரின் நிலைப்பாடு

விபுலானந்தர், யாழ் சமூக உருவாக்கம், யாழ்-வாலிபர் காங்கிரஸ் ஆகிய மூன்றும் ஒரு புள்ளியில் சந்திப்பது கல்வி அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டத்தில்தான். யாழ்-சமூக உருவாக்க நிகழ்வுகள் பற்றிக் கூறும் இந்நூல் சமூக உருவாக்கம் என்றால் என்ன என்பதுபற்றி எதுவுமே கூறவில்லை. முன்னுரையிலாவது கூறியிருக்கலாம். கூறவில்லை. மார்க்ஸியப் பள்ளிக்கு உரித்தான ஒரு சொற்பதத்தை தேசிய பள்ளிக்கென வெளிவரும் நூலில் வைப்பதால் எந்தப்பயனும் இல்லை என்பதே இதற்கான காரணமாகும். இரண்டாம் பதிப்பு இரு பள்ளிகளையும் சேர்க்கும் என்ற நம்பிக்கையில், இரண்டாம் பதிப்புக்கான முன்னுரையில் சமூக உருவாக்கம் பற்றிக் கூறுகிறோம். ஏனைய இரண்டு சமூக நிகழ்வுகள் பற்றி இந்நூலுக்கு அவசியமான

அளவு கூறப்பட்டுள்ளது.

**நூலின் வெவ்வேறு மையங்கள்:**

இந்நூல் யாழ்- வாலிபர் காங்கிரஸ் பற்றியதா, விபுலானந்தர் பற்றியதா என்று வினவும் அளவுக்கு இரண்டுக்கும் சம முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நூலின் பிரதான மையம் இவ்விரண்டிலும் எதுவுமேயில்லை. 1920களில் யாழ் குடாநாட்டில் நடந்த சமூக உருவாக்கமே நூலின் பிரதான அல்லது முதன்மை மையப் பொருளாகும். அவை என்னென்ன என்பது நூலில் கூறப்பட்டுள்ளது, ஆனால் சமூக உருவாக்கம் பற்றிய தர்க்கம் நூலில் இல்லாதபடியால், சமூக நிகழ்வுகள் நூலின் பின்னணியாக மாறிவிட்டது. இச் சமூக உருவாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் மூன்று சிந்தனைப்போக்குகள் செயற்பட்டுள்ளன. ஒரு போக்கு கிறிஸ்துவ மதபீடத்தினது, மற்றையது யாழ் வாலிபர் காங்கிரஸினது, மூன்றாவது இராமகிருஸ்ண மடத்தினது. இம்மூன்றிலும் யாழ்-வாலிபர் காங்கிரஸ் மட்டுமே யாழ் மண்ணிற்கே உரிய மக்கள் இயக்கமும் மக்கள் அமைப்புமாகும். இது ஒன்றுதான் தனக்குத் தானே தலைவனாக இருந்து செயற்பட்ட அமைப்பாகும். இது வேறு எவராலும் இயக்கப்பட்ட ஒரு அமைப்பல்ல. யாழ்ப்பாணத்துக்கு அப்பாற்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளான ஏனைய இரண்டும் இதைச் சார்ந்தே இயங்கின. யாழ் வாலிபர் காங்கிரஸ் இல்லையானால் இவ்விரண்டு அணியாலும் தனித்து நின்று இவ்வளவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஆகவே, ஒரு கட்டுரைக்குரிய இயல்பான தன்மையின்படி இந்நூலின் இரண்டாவது மையக்கருவாக அமையவேண்டியது யாழ்-வாலிபர் காங்கிரஸேயாகும். கிறிஸ்துவ மதபீடமும், விபுலானந்தரும் இரண்டாவது மையக்கருவின் துணைக்கருக்களாகவே அமைந்திருக்க வேண்டும். ஆனால் நூலின் தலைப்பும், குறிக்கோளும் பிரதான கருவையும், இரண்டாவது மையக் கருவின் துணைக்கருவையும் புரியவைப்பதாகவே இருந்தது. அதுவே அன்றைய தேவையாகவும் இருந்தது. அல்லது அன்றைய தேவையாகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய வாசகர்களிடையே இரண்டாவது மையக்கருவான யாழ்-வாலிபர் காங்கிரஸ் பற்றிய புரிதல்கள் மிக மிகக் குறைவானதாகவே இருந்தது. ஆகவே யாழ்-வாலிபர் காங்கிரஸ் பற்றியும் இந்நூலிலேயே சொல்லவேண்டியிருந்தது. இன்றைய வாசகர்களோ யாழ்-வாலிபர் காங்கிரஸ் பற்றி தெரிந்து வைத்துள்ளார்கள். அதைப்பற்றிய

விவாதங்கள் நடைபெற்றுக்கோண்டுள்ளன. இது ஒரு காலகட்ட வேறுபாட்டுப் பிரச்சினையாகும், இம் முன்னுரையில் விபுலானந்தர் பற்றிய விவாதங்களை முன்வைப்பதன் மூலம் விபுலானந்தர் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளார்.

**சமூக உருவாக்கம் பற்றி:**

சமூக உருவாக்கம் எனும் பதத்தின் பயன்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. அவ்விதம் பயன்படுத்தப்பட்டாலும் அதைப்பற்றிய புரிதல் மிகமிகக் குறைவே. மார்க்ஸிய சொல்லாடல்களுக்குப் பழக்கப்பட்டவர்கள் முதலாளித்துவ சமூக அமைப்பு, நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு, ஆண்டான்-அடிமை சமூக அமைப்பு, அரைக்காலனிய, அரைநிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு போன்ற பதங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அதாவது சமூகத்தை உற்பத்தி உறவு முறைமைகளால் அறிமுகப்படுத்தி வருகின்றனர். இந்த உற்பத்தி உறவு முறைமைகள் தத்தமக்கென்று தனியான மேற்கட்டுமானங்களையும் கொண்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. மேற்கட்டுமானத்தின் பிரதான அம்சங்கள் அரசியலும், பண்பாடுமாகும். மேற்கட்டுமானங்களும் முதலாளித்துவ மேற்கட்டுமானங்கள், நிலப்பிரபுத்துவ மேற்கட்டுமானங்கள் என அழைக்கப்படுகின்றன. ஒரு தேசத்தின் அல்லது பிரதேசத்தின் சமூகக் கட்டுமானத்தைப் புரிந்து கொள்வதற்கு இவ்வித பகுப்புகளும் பதங்களும் பலன் தரமாட்டாது. இவை, சமூகத்தை பகுப்பாய்வு செய்வதற்காக, மார்க்ஸிஸ்டுகளால் உருவாக்கப்பட்ட அருவங்களேயாகும். இவை ஒரு தேசத்துக்கோ பிரதேசத்துக்கோ கட்டுப்பட்டவையல்ல. எந்தத் தளமும் இன்றி தனித்து நிற்கும் அருவங்களாகும். இவ்வித உருவங்கள் எதுவுமேயில்லை. அருவங்களை உருவங்களாகக் கருதி தமது தேசத்தின் கோட்பாடுகளை வகுத்துக்கொள்ளலே டொக்மர் இஸம் (Dogmatism) எனப்படுகிறது. சமூக அமைப்புகள் தொடர்பான இவ் அருவக் கோட்பாடுகளை குறிப்பிட்ட தேச அல்லது பிரதேச எல்லைக்குள்ளான சமூகக் கட்டுமானத்துள் புகுத்தி ஆராயும் போது கிடைக்கும் சித்திரமே சமூக உருவாக்கம் எனப்படுகிறது.

ஒவ்வொரு தேசமும் பல்வேறு உற்பத்தி முறைமைகளினதும், ஒரே உற்பத்தி முறைமையின் பல்வேறு வடிவங்களினதும் கூட்டுத் தொகுப்பாகும். இக்கூட்டுத் தொகுப்பு சுய இயக்கமுள்ள தனி

உயிரியாகும். பல்வேறு பொருளாதார வடிவங்கள் அருகருகில் நிற்கின்றன என்று இதைப் புரிந்து கொள்ளல் தவறாகும். ஏனெனில் இம் முழுமையின் ஆக்கக்கூறுகள் ஒவ்வொன்றும் தத்தமது இருத்தலையும் மறு உற்பத்தியையும் தத்தமது சுயவிருப்பின்படி தீர்மானித்துக் கொள்ளும் நிலையில் இல்லை. காலனியல் மற்றும் நவகாலனியல் நாடுகளில் இம் முழுமை முதலாளித்துவத்தின் மேலாண்மையின் கீழேயே செயற்படுகிறது. இம்மேலாண்மை வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் செலுத்தப்படுகிறது. இம் முதலாளித்துவத்தின் உள்ளூர் தேவைக்கு உகந்த முறையிலேயே பிற பொருளாதார வடிவங்களின் இருத்தலும், மறு உற்பத்தியும் அமைகின்றன. முதலாளித்துவம் மேலாண்மை செலுத்தினாலும், தேசத்தின் உள்ளே முதலாளித்துவ உறவுகள் இக்கூட்டுத் தொகுப்பை மீறிச் சுயமாக செயல்பட முடியாது. இவையனைத்தும் ஒன்று கலந்து தனியொரு முழுமையில் சங்கமமாகியுள்ளன. சமூக உருவாக்கம் எனும் கோட்பாட்டின்படி இந்த முழுமையே அத்தேசத்தின் அல்லது பிரதேசத்தின் அடிக்கட்டுமானமாகின்றது.

மேற்கட்டுமானத்தை எடுத்துக் கொண்டால் அதுவும் ஒரு கூட்டுத் தொகுப்பாகும். அத் தொகுப்பின் ஆக்கக் கூறுகளில் ஒன்றுதான், கூட்டுத்தொகுப்பானது பொருளாதார அடிக்கட்டுமானத்தின் உருவாக்கமாகும். இரண்டாவது ஆக்கக்கூறு, கடந்த கால மேற்கட்டுமானத்தில் இருந்து பெறப்பட்டதும், மறு உற்பத்தி செய்யப்பட்டதுமாகும். மூன்றாவது ஆக்கக்கூறு, அனைத்துலக முதலாளித்துவத்தால் புறத்தேயிருந்து புகுத்தப்படும் மேற்கட்டுமானமாகும். ஆகவே, மேற்கட்டுமானமும் ஒரு கூட்டுத்தொகுப்பேயாகும். இக்கூட்டுத் தொகுப்பும் ஒரு உயிரியாகும். இத் தனிஉயிரி, அடிக்கட்டுமானத்தைச் சார்ந்திருந்தாலும், சுய இயக்கம் உள்ள உயிரியாகவும் உள்ளது. இதனால் தனியுரிமையினையும், தனிச்சொத்துடைமையையும் பேணிப்பாதுகாப்பதில் அடிக்கட்டுமானத்தையும் விட மேற்கட்டுமானத்துக்கு அதிக வலு இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. அதேபோல் சமூக அடிப்படை மாற்றதிற்கான (Radical change) சூழல் ஏற்படும் முன்னரேயே, மேற்கட்டுமானத்திலான மாற்றத்தினால் சமூகக் கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. சமூக உருவாக்கக் கோட்பாட்டின்படி இந்த உயிருள்ள கூட்டுத்தொகுப்பு தேசத்தின் மேற்கட்டுமானம் ஆகின்றது.

ஒன்றையொன்று சார்ந்திருக்கும் சுய இயக்கமுள்ள இவ்விரு கூட்டுத்தொகுப்புகளும், தமக்குள் ஒரு சேதன இணைப்பை உருவாக்கி மற்றோர் கூட்டுத்தொகுப்பாக மாறுகிறது. இந்த கூட்டுத் தொகுப்புத்தான் சமூக உருவாக்கமாகும். சமூக உருவாக்கம் என்பது நாட்டுக்கு நாடு வேறுபடும். மார்க்ஸிஸம்-லெனினிஸத்தை தத்தமது யதார்த்த நிலைக்கு ஒப்ப பிரயோகிக்கவேண்டும் என்பதன் அர்த்தம் இதுதான்.

**அ. கௌரிகாந்தன்**
*மே 2013*

# முதற்பதிப்பின் பதிப்புரை

*சமுதாயத்தின் பிரச்சினைகளிலிருந்து தனி மனிதர்கள் ஒதுங்கி வாழ முடியாது. ஒவ்வொருவரும் சமுதாயத்துடன் இரண்டறக் கலந்தவர்களே.*

*ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் கருத்துநிலை ஏதோவொரு விதத்தில் சமுதாயத்தின் பிரச்சினைகளையே பிரதிபலிக்கின்றது. சமுதாயத்தின் பிரச்சினைகளை அவர்கள் பார்க்கும் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அமைகின்றது. கருத்துநிலை முரண்பாடுகளுக்கு இதுவே காரணம்.*

*எனவே, எங்கள் சமுதாயத்தில் வாழ்ந்து மறைந்த பெரியார்களை மதிப்பீடு செய்யும் போது சமுதாயத்தின் அன்றைய பிரச்சினைகள் பற்றிய அவர்களது அணுகுமுறை, அப் பிரச்சினைகள் அவர்களிடம் ஏற்படுத்திய உணர்வலைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே அவர்களை மதிப்பீடு செய்ய வேண்டும்.*

*விபுலானந்த அடிகளாரைத் தமிழ் பேசும் நல்லுலகுக்குத் தெரியும். அவரின் இயற்பெயர் தெரியும். அன்னை, தந்தை பெயர் தெரியும். அவரின் கல்விச் சிறப்பைத் தெரியும். அவரின் துறவு பற்றித் தெரியும். தமிழுக்கு அவர் செய்த தொண்டு தெரியும்.*

*இல்வளவும் அவரை நாங்கள் புரிந்து கொள்ளப் போதுமானவையல்ல. ஆறுமுகநாவலர் சைவசமய வளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு செயற்பட்டவர் என்பர். விபுலானந்த அடிகளும் சைவ சமய வளர்ச்சிக்குப் பணி செய்வதற்காகத் துறவறம் பூண்டவர். இதனால் இருவரையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்க முடியாது.*

*நாவலரும் அடிகளாரும் சமூகப் பிரச்சினைகளில் வெவ்வேறு கருத்து நிலைகளைக் கொண்டிருந்தவர்கள். முரண்பட்ட கருத்து நிலைகளைக் கொண்டிருந்தவர்கள். இது சமூகப் பிரச்சினைகளை அவர்கள் அணுகிய விதங்களின் வெளிப்பாடு. சமூகத்தை அவர்கள் பார்த்த கண்ணோட்டத்தின் வேறுபாடு.*

*விபுலானந்த அடிகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் வாழ்ந்த சமுதாயத்தின் பிரச்சினைகளில் அவர் வகித்த பாத்திரம் என்ன என்பதை அறிய வேண்டும். அன்றைய சமூக உருவாக்கத்தில் அவர் வகித்த பங்கு எவ்வளவு என்பதை அறிய வேண்டும். அன்றைய பிரச்சினைகள் அவரிடம் எத்தகைய உணர்வலைகளை ஏற்படுத்தின என்பதை அறிய வேண்டும்.*

*இச் சிறு நூல் விபுலானந்தர் பற்றிய இந்த வகைப்பட்ட அறிவுத் தேடலுக்கான பாதையில் வாசகர்களை இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.*

***சாளரம் வெளியீட்டகம்***

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. விபுலானந்தர் காலத்தில் யாழ்ப்பாண அரசியல் | 41 |
| 2. மூன்றாவது அணியும் அதன் வரலாறும் | 47 |
| 2.1 அறிமுகம் | 47 |
| 2.2 வாலிபர் காங்கிரஸும் சாதி அடக்கு முறையும் | 48 |
| 2.3 காங்கிரஸின் ஏனைய நடவடிக்கைகள் | 53 |
| 2.3.1 தமிழ் மொழிக் கல்வி | 53 |
| 2.3.2 அரசியல் சுதந்திரம் | 57 |
| 3. சித்தர்களும் முளைவிடும் இடது சாரிகளும் | 62 |
| 4. வடக்கும் கிழக்கும் விபுலானந்தரும் | 69 |
| 4.1 பிரதேசரீதியான செயற்படு களம் | 69 |
| 4.2 துறைரீதியான செயற்படு களம் | 70 |
| 4.2.1 சமூக சீர்திருத்தம் | 70 |
| 4.2.2 தமிழ் மொழி வளப் பெருக்கம் | 72 |
| 4.2.3 முத்தமிழ் வளர்ச்சி | 72 |
| 4.2.4 மானுட உளச் செழுமை | 73 |
| 4.3 மனித குழும ரீதியான செயற்பாடுகள் | 74 |
| 4.4 தமிழன் என்ற பரிமாணம் | 77 |
| 5. முடிவுரை | 79 |
| 6. பிற்குறிப்புக்கள் | 85 |
| 7. உசாத்துணை நூல்கள் | 86 |

விபுலானந்தர் தனது 21வது வயதில், 1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தார். அப்போது அவர் டிப்ளோமா பட்டமும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் சித்தியும் பெற்ற பண்டிதர் மயில்வாகனனாராகவே இருந்தார். அதாவது இவர் துறவறக் கோலம் பூணவில்லை.

1917 - 1920 வரை இவர் புனித - சம்பத்திரிசியார் (St Patricks) கல்லூரியில் வேதியியல் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். இந்த நேரத்திலேயே அவர் வெளிவாரி மாணவனாக இருந்து அறிவியற் பட்டதாரி (லண்டன்) சோதனையில் வெற்றியீட்டினார்.

அதன் பின் 1920 - 1922 வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியராக இருந்ததுடன் ஆரிய - திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்திற்குச் சிறந்த தொண்டுகளும் ஆற்றிவந்தார்.

1922 இல் யாழ்ப்பாணத்தை விட்டு விலகி இந்தியா சென்றடைந்தார். அங்கு இராமகிருஷ்ண மிஷனில் இறையியல் பயின்று, 1924 இல் சித்திரை மாதம் ஞானோபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் துறவுத் திருநாமம் சூட்டிக் கொண்டார்.

அங்கிருந்து கிழக்கு மாகாணம் வந்தடைந்த விபுலானந்தர் 1926 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார். 1926, பெப் 15 இல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம், அருணோதயா வித்தியாலம் ஆகிய பாடசாலைகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1928 இல் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டு, திருகோணமலையை வந்தடைந்தார்.

*1917 - 1922 வரையும், பின் 1926ல் இருந்து 1928 வரையும் இவர் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகவல்லாமல் சுமார் 9 வருடங்கள் வாழ்ந்துள்ளார்.*

*இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் பாடசாலை ஆசிரியராகவும், அதிபராகவும், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தில் பிரதான பாத்திரம் ஏற்றும் செயற்பட்டுள்ளார். அத்துடன் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸுடன் இணைந்து இயங்கியும் உள்ளார். அதன் ஆரம்ப அமைப்பாளர்களில் இவரும் ஒருவராவார்.*

# விபுலானந்தர் காலத்தில் யாழ்ப்பாண அரசியல்

*இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில், சேர். பொன். இராமநாதன் படித்தோரின் சட்டசபைப் பரதிநிதியாக (1911 இல் நடந்த தேர்தல் மூலம்) ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார். சேர். பொன் இராமநாதன் ஆறுமுகநாவலரைப் பின் தொடர்ந்து அவரின் கொள்கைப்படியான தேசிய கலாசார மறுமலர்ச்சிக் கொள்கைகளைக் கையாண்டு, கல்வியில் மிஷனரிமாரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பல சைவப் பாடசாலைகளை உருவாக்கி வந்தார். இலங்கையில் பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமான கருத்துக்களிலும் இவர் அதிக அக்கறை செலுத்தி வந்தார். பெரும்பான்மையான சைவப் பெரியார்களும் அறிஞர்களும் பொன். இராமநாதனைப் பின்பற்றுபவர்களாகவே இருந்தார்கள்.*

*விபுலானந்தர் யாழ்ப்பாணம் வருவதற்குச் சற்று முற்பட்ட காலம் வரை (19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை) மிஷனரிமார்களுக்கும் சைவப்பெரியார்களுக்கும் இடையே மத அடிப்படையிலான வாதப்பிரதிவாதங்கள் உச்சநிலையில் காணப்பட்டன. சைவத்தின் எழுச்சியே தேசிய மறுமலர்ச்சி என்று கருதும் போக்கே யாழ்ப்பாண சைவப்பெரியார்களிடம் மலிந்து காணப்பட்டது. ஆறுமுகநாவலரின் இக் கொள்கையை வளர்ப்பதில் சேர். பொன். இராமநாதனும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து வந்தார். இக்காலப்பகுதியில் படித்தோர் உலகம் மத அடிப்படையில் பிளவுண்டு இருந்தது.*

*20 ஆம் நூற்றாண்டின் இந்த ஆரம்பகாலப் பகுதிகள் பிரித்தானிய காலனியல் வாதிகளின் ஆட்சிக்கு காவடி தூக்குவோர்களின் அரசியல் இயக்கங்களே இலங்கை முழுவதும் கையோங்கி இருந்த*

காலகட்டமாகும். சுதந்திரத்துக்கான போராட்டமோ, சுதந்திர உணர்வோ என எதுவுமே இல்லாதிருந்த நேரம். அன்றைய அரசியல் தலைவர்கள் காலனியல் அரசாங்கத்திற்கு விசுவாசமான சேவகர்களாக இருக்கவே விரும்பினார்கள். காலனியல் அரசாங்கத்திலும், நிருவாகத்திலும், 'சொந்தநாட்டினர்' அதிகளவு இருக்கவேண்டும் என்பதிலும், பிரித்தானியரால் பின்பற்றப்படும் கொள்கைகள் இலங்கையில் ஏற்கனவே நிலவிவந்த சமூக உறவுகளைப் பாதிக்கக் கூடாதமுறையில் அமையவேண்டும் என்பதிலுமேயே இவர்கள் அதிக கவனம் செலுத்தி வந்தார்கள்.

அதேகாலப் பகுதியில் மலைநாட்டில் கண்டிய நில உடைமையாளர்கள் தொடர்ந்தும் நில உடைமையாளர்களகவே இருக்க விரும்பினார்கள். பௌத்த மதபீடங்களுக்குச் சொந்தமானதாய் இருந்த நில உடைமை முறையையும், சமூக அந்தஸ்தையும் அப்படியே பாதுகாக்க விரும்பினார்கள். வறிய கண்டிய விவசாயிகளை அடக்கிவைப்பதற்கு இம்மடாலய நிலவுடைமை முறை மிகவும் உதவியாக இருந்தது. ஆகையால் அதை இழப்பதற்குக் கண்டிய 'றதலைகள்' (பெரும் நிலவுடமையாளர்கள்) விரும்பவில்லை. இதற்காகக் கண்டிய தேசவழமையைப் பாதுகாத்து வந்தார்கள். மலைநாட்டு நிலப்பிரபுத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் மலைநாட்டிற்கெனத் தனியான அரசாங்க நிருவாகம் வேண்டும் என்றுகூட பிரித்தானியர்களிடம் விண்ணப்பிக்கப்பட்டது.

கரையோரப் பிரதேசத்தில் (இலங்கையின் தென்பகுதி) ஐரோப்பியரின் தொடர்பால், இப்பகுதி உயர்வர்க்கங்கள் ஏற்கனவே தேசியத்தன்மை இழந்தவர்களாகியிருந்தார்கள். ஐரோப்பிய சார்புத் தரகர்கள், பெரும் அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பெருந்தோட்ட பயிர்ச்செய்கை (றப்பர், தென்னை) நில உடைமையாளர்கள் ஆகியோரே இவ்விதம் மாறிப்போயிருந்த கரையோர உயர்வர்க்கங்களாகும். இவர்கள் பிரித்தானிய பொருளாதாரத்தினால் கிடைத்த பலாபலன்கள் அனைத்தையும் தமதாக்கிக் கொள்ள விரும்பினார்கள். பிரித்தானியர்களுடன் கூட வந்த இந்தியர்களோ, ஐரோப்பிய கலப்பான பறங்கியரோ, இலங்கையின் பூர்வீக குடிகளில் ஒன்றான இஸ்லாமியர்களோ, மற்றோர் பூர்வீக குடியான இலங்கைத் தமிழர்களோ இப்பலாபலன்களைப் பங்கு போட்டுக் கொள்வதை விரும்பவில்லை. இவர்கள் பெரும்பங்கிற்காக ஏங்கினார்கள். ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களாக மாறுவதன் மூலம் இதைச் சாதித்துக்

கொள்ள முயன்றார்கள். போட்டி அதிகரித்த நிலையில் இது சாத்தியமில்லாது போகவே பௌத்த தேசியவாதத்தைத் தோற்றுவித்தார்கள். வடக்கின் ஆறுமுகநாவலரை விட பன்மடங்கு 'பாரம்பரிய பண்பாட்டு வீரனாக' திகழ்ந்த அநாகரிக தர்மபாலா தோன்றினார். இவர்களும் சுதந்திரத்துக்காகப் போராடவில்லை. மாறாகக் காலனிய அரசின் கீழ் அதிக சலுகைகளுக்காகவே காவடி எடுத்தார்கள்.

வடக்கைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அங்கு ஆதிக்கத்தில் இருந்த உயர் வர்க்கங்களின் நோக்கம் இருவிதமானதாக இருந்தது. ஒன்று சாதி அடிப்டையில் அமைந்த தமது சமூக பொருளாதார மேலாதிக்கத்தைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்பது, இரண்டாவது பிரித்தானிய பொருளாதாரத்தால் புதிது புதிதாக தோன்றிவரும் பொருளாதார வாய்ப்புக்களில் தாமே அதிகமான பங்கினைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்பதாகும். இதற்கான ஒரே வழி கொழும்பில் குடியேறும் வாய்ப்புக்களை மேலும் மேலும் அதிகப்படுத்திக் கொள்வதேயாகும் என எண்ணினார்கள். இந்த இரண்டையும் அடைவதை நோக்கியே அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் சமூக-பொருளாதார மேலாதிக்கம் நில உடைமையாளர்களாகவும், அடிமை உடைமையாளர்களாகவும், குடிமைகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புடையவர்களாகவும் இருந்த வெள்ளாளர் என்ற சாதிப்பிரிவினரிடமே இருந்து வந்தது. இவர்களே உயர்சாதியினர் என்றும் கருதப்பட்டார்கள். இவர்கள் தமது சாதி ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தவே விரும்பினார்கள். அதற்கான முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தார்கள். அதேநேரம், பிரித்தானியரும் மிஷனரிமாரும் சாதி அமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளத்தயாராய் இருக்கவில்லை. அதில் சில சீர் திருத்தங்களை ஏற்படுத்த விரும்பினார்கள். அடிமை வியாபாரத்தையும், அடிமைகளாக வைத்திருப்பதையும் சட்ட விரோதமாக்கினார்கள். அடிமைகளாக இருந்தவர்களில் ஒரு பகுதியினருக்குச் சம்பளம் கொடுத்துத் தமது கூலியாட்களாக அமர்த்திக் கொண்டார்கள். (நிரந்தரமாகவல்ல) இது மாத்திரமல்லாது மிஷனரிகள் தமது பாடசாலைகளிலும், கோவில்களிலும் ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினரையும் கூடச் சேர்த்துக்

கொண்டார்கள். இவ்விதமான பல சீர்திருத்தங்கள் காலனியவாதிகளால் ஏற்படுத்தப்பட்டன. இச் சீர்திருத்தங்களைப் பொறுக்க முடியாத நிலையிலேயே 'சைவத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம்' ஆரம்பமானது. இதையே சிலர் தமிழ்த் தேசிய எழுச்சியாக எடுத்துக் காட்டுகின்றனர். (ஆறுமுக நாவலரா, சேர். பொன் இராமநாதனா இதன் நிஜமான தலைவர் என்பது ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்) இவ்வியக்கத்தின் சமூக உள்நோக்கத்தைப் பற்றி ஆராய்ந்து அதன் அடிப்படையில் ஒரு மதிப்பீட்டைச் செய்வதற்குப் பதிலாக தமிழ் மொழி தொடர்பாகவும், கல்வி தொடர்பாகவும் இவ்வியக்கத்தின் பங்களிப்புகள் மிகப் பிரமாதம் என்று வர்ணிப்பதுடன் நிறுத்திக் கொள்ளப்படுகிறது. இவ்விதமான தோற்றத்தை நியாயப்படுத்து வதற்காக 1930 கள் வரை கல்வி தொடர்பாக மிஷனரிமாருடைய பங்களிப்புகள் யாழ் குடாநாட்டில் தலையாய பங்களிப்புகளாக இருந்து வந்துள்ளன என்பது சிலரால் மறைக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் 1920 களிலும் அதன் பின்பும், நாவலர் - இராமநாதன் கொள்கையுடன் இணங்கிப் போகாத யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசினர், மிஷனரிமாருடன் முரண்பட்டுக் கொள்ளாமலேயே கல்வி சார்ந்து அளப்பரிய தனித்துவமான பங்களிப்புகளைச் செய்துள்ளார்கள் என்பதுவும் மறைக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மொழியின் வளர்ச்சி தொடர்பாகவும் கூட பலவகையான மிகைப்படுத்தல்கள் நடைபெற்றுள்ளன. மிஷனரிமார் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் தமிழ்மொழி சார்ந்த அரிய பல அறிஞர்களை ஊக்குவித்துள்ளார்கள். சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகளார், தவத்திரு. லோங் அடிகளார் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் சிறந்த உதாரணங்களாவர். தமிழ்நாட்டில் வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு சாதாரணமானதல்ல. இச்சாதனைகளைக் கணக்கில் கொள்ளாது ஒரு பக்கப்பார்வையே வெளிக்காட்டப்படுகின்றது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் அங்கத்தினர்கள் தனிநபர்களாகவும், அமைப்புரீதியாகவும் தமிழ்மொழியின் வளர்ச்சி தொடர்பாக பாரிய பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். இவைபற்றியும் கூட மறைக்கப்படுகின்றது.

இன்னொரு விடயம் கொழும்பில், காலனிய அடிமைநாட்டின் தலைநகரில் நிலையான குடித்தனம் நடத்துவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட அரசியலாகும். கொழும்பை வளர்ப்பதையும், கொழும்பில் வளர்வதையும் நோக்கமாகக்

கொண்டதாகவே இராமநாதனின் தலைமையிலான அன்றைய 'தமிழ் தேசிய இயக்கம்' அமைந்திருந்தது.

1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் தோற்றம் பெறும்வரை இலங்கைத் தேசிய நிறுவனமே (Ceylon National Association) பிரதான, ஏகபோக இலங்கை அரசியல் ஸ்தாபனமாக இருந்தது. இலங்கைத் தேசிய நிறுவனத்தை ஸ்தாபித்ததும், இதற்குத் தலைவராக இருந்ததும் சேர். பொன், இராமநாதன் அவர்களேயாகும். இலங்கைத் தேசியத்தை உருவாக்குவதில் இவர் முன்நின்று உழைத்தார். சிங்களவர்களின் நம்பிக்கையைப் பெறுவதில் இவர் அபார வெற்றிகளை ஈட்டினார். 1915 இல் கரையோர சிங்களவர்கள், முஸ்லிம்களுக்கு எதிரான இனத் தாக்குதலைத் தொடுத்தார்கள். இதனால் சிங்களத் தலைவர்கள் பிரித்தானிய எஜமானர்களின் கோபத்துக்கு உள்ளானார்கள். இந்தக் கோபத்தைத் தணிக்க சிங்களத் தலைவர்களின் சார்பில் சேர். பொன். இராமநாதன் மகாராணியாரிடம் தூது சென்றார். தனது பணியில் வெற்றியும் பெற்றார். வெற்றியுடன் திரும்பிய இவரை சிங்களத் தலைவர்கள் ராஜமரியாதையுடன் வரவேற்றார்கள். அதுமட்டுமல்லாது, ஹென்றி ஒல் கொட்டினதும் இராமநாதனினதும் முயற்சியாலேயே வெசாக் தினம் பொதுவிடுமுறையாக அமுலுக்கு வந்தது. பௌத்த நிறுவனங்களினது புனரமைப்பிற்கும் பாதுகாப்பிற்குமான பல சட்டங்களை ஆக்குவதிலும் கூட இவர் துணிவுடன் போராடியுள்ளார். இவர் மேல் பௌத்தர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணத்தால் பௌத்த கல்விக்காக ஒல்கொட் அவர்களால் சேர்க்கப்பட்ட பிரமாண்டமான நிதிக்கு ஒல்கொட்டும், இராமநாதனும் இணைப் பொருளாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். இந்து - பௌத்த கல்லூரி ஒன்றை அமைப்பதற்கும் இராமநாதன் பல்வேறு வகைகளில் முயற்சித்தார். இதற்கான பொது நிறுவனம் ஒன்றையும் அமைத்தார். ஆனால் பௌத்தர்கள் இவரை ஏமாற்றி, இவரைக் கணக்கெடுக்காது ஆனந்தா கல்லூரியை அமைத்தார்கள். அதன் பின்பே இவர் கொழும்பில் சைவக் கல்லூரி ஒன்றை நிறுவினார். அந்நிலையிலுங்கூட சிங்களவர்கள் தேசியத் தன்மை இழந்து வருதலையிட்டு (Denationalization) கடும் எதிர்ப்புக் காட்டினார்.

1911 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட சட்ட சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் படித்த இலங்கையர் மட்டுமே வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தார்கள். மிக அதிகப்படியான வாக்குகளால் இராமநாதனே முதலாவது இலங்கைப் பிரதிநிதியாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டார். 664 வாக்குகள் மேலதிகமாகப் பெற்றார். இவருக்கு எதிராக போட்டியிட்டவர் பெர்னாண்டோ என்ற ஒரு சிங்கள கத்தோலிக்கராவர். யாழ்ப்பாணத்தில் மொத்தமாகப் பதிவான 440 வாக்குகளில் 410 வாக்குகளை இராமநாதனே பெற்றார். இராமநாதனின் இவ்விதமான தேசிய தலைமைப் பாத்திரத்தால் தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் கொழும்பில் குடியேறுவதும், நிரந்தர வசிப்பிடங்களை அமைப்பதும் எதுவித அரசியல் தடங்கல்களும் அற்றதொரு நிகழ்ச்சியாயிற்று. இந்த இலங்கையின் தமிழ் தலைவர்கள் இலங்கையின் சுயாதிபத்தியத்திற்கு எதிர் கருத்து கொண்டவர் களாகவும், தமிழ் பகுதிகளின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் நாட்டமற்றவர்களாகவும், தமிழ் இனத்தின் எதிர்கால அரசியல் உரிமைகள் பற்றி எதுவித அக்கறையற்றவர்களாகவுமே இருந்தனர்.

இந்த விதமான ஒரு அரசியல் சூழலில்தான் விபுலானந்தர் யாழ்ப்பாணம் வருகிறார். யாழ்ப்பாணத்தில் அவர் அரசியல் நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடுள்ளவராய் இருந்திரா விட்டாலும் முன்கூறிய அரசியல் போக்குடன் முரண்பட்டதொரு நிலைப்பாட்டையே யாழ்ப்பாணத்தில் எடுத்துள்ளார். அதே நேரத்தில் அரசியலில் காலனியல் வாதிகளுடன் இசைந்து போன மிஷனரிமார்களுடனும் இவர் தன்னை இனங்காட்டிக் கொள்ளவில்லை. காலனியல்வாதிகளிடம் சீர்திருத்தத்தை இரந்து நின்ற இராமநாதன் அணியுடனும் தன்னை இனங்காட்டிக் கொள்ளவில்லை. இவர் மூன்றாவது அணியாகவே தன்னை இனங்காட்டிக் கொண்டார். எது அந்த மூன்றாவது அணி? அவர்களின் கொள்கைகள் தான் என்ன? அவர்களின் நடவடிக்கைகள் என்ன?

# மூன்றாவது அணியும் அதன் வரலாறும்

## அறிமுகம்

*1924ல் இருந்து 1931 வரை யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸே அந்த மூன்றாவது அணியாகும்.*

*1924 இற்கு முன்பாக யாழ்ப்பாணக் கல்லூரியில் 'யாழ்ப்பாணக் கல்லூரியின் வாசகர் வட்டம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு இயங்கி வந்தது. யாழ்ப்பாணக் கல்லூரியானது 19 ஆம் நூற்றாண்டிலேயே தோற்றுவிக்கப்பட்ட ஒரு மிஷனரி கல்வி நிறுவனமாகும். இக்கல்லூரியில் தான் முதல்முதலாக (1910 களில்) எஸ். ஆர். ஜேக்கப் என்ற 'தீண்டத்தகாத சாதிப் பிரிவு' மாணவர் ஒருவர் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டார். இந்நடவடிக்கையை எதிர்த்து பாடசாலையில் கல்விகற்ற 'உயர்சாதி' மாணவர்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்தனர். ஆனால் அன்றைய அதிபரின் உறுதியான நடவடிக்கையால் மாணவர்களும் பெற்றோர்களும் அம்மாணவனை ஏற்றுக்கொண்டு தமது பகிஷ்கரிப்பை கைவிட்டனர். இக்கல்லூரியிலும் ஏனைய மிஷனரிக் கல்லூரிகளிலும் 'தீண்டத்தகாத சாதிப்பிரிவினர்' சிற்றூழியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.*

*1924 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி சனிக்கிழமை மாணவர் சங்கம் முப்பது படித்த இளைஞர்களுடன் யாழ்ப்பாணத்தில் வை. எம். சி. ஏ மண்டபத்தில் உருவெடுத்தது. ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், உயர் வகுப்பு மாணவர்கள், அரசியல் அபிமானிகள் ஆகியோருடன் இவ்வமைப்பு உருவாகியது. இதன் ஆரம்ப கால அமைப்பாளர்களுள் சுவாமி விபுலானந்தரும் ஒருவராவார். இதன் ஆரம்பகால அங்கத்தவர்களில் பலர் யாழ்ப்பாணக் கல்லூரி உயர் வகுப்பு*

*மாணவர்களாவார். இதே ஆண்டு சித்திரை மாதந்தான் விபுலானந்தர் துறவறப் பட்டம் பூண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாரம்ப கால அங்கத்தவர்கள் இந்துக்களையும் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கியவர்களாகவே இருந்தார்கள். மிஷனரி பாடசாலையில்தான் இவ்வமைப்புக் கருக்கொண்டிருந்தாலும் கூட, எந்த அருட்திரு தந்தைகளும் இதன் ஆரம்பகால அங்கத்தவராக இருந்ததாகத் தெரியவில்லை. விபுலானந்தர் மட்டுமே இதில் அங்கம் வகித்த ஒரேயொரு துறவியாவர்.*

*ஆரம்பத்தில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என அழைக்கப்பட்ட இந்தச் சங்கம் பின்னர் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்ற பெயரைப் பெற்றது.*

## வாலிபர் காங்கிரஸும் சாதி அடக்கு முறையும்

*1924 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண றிசர்வ மண்டபத்தில் நடைபெற்ற வாலிபர் காங்கிரஸ் 1 ஆவது மாநாடு நிறைவேற்றிய 10 தீர்மானங்களில் மூன்றாவது தீர்மானமாக அமைந்தது தமிழர்கள் மத்தியில் நடைமுறையில் இருந்து வந்த தீண்டாமைக்கு எதிரான குரலாகும். தீண்டாமையை ஒழிப்பதற்கு காங்கிரஸ் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைச் செயல்படுத்த வேண்டும் என அத்தீர்மானம் வலியுறுத்தியது. இம் மாநாடு திரு. ஹண்டி பேரின்பநாயகத்தின் தலைமையிலேயே நடைபெற்றது. காங்கிரஸ் உருவாக்கத்திலும் அதைச் செயற்படுத்துவதிலும் இவரே பிரதான பொறுப்பு வகித்தார். ''ஹண்டி பேரின்பநாயகமும் அவருடன் இணைந்த நண்பர்கள் சிலரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொழில் செய்து வந்த தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று தேநீர், சிற்றுண்டி அருந்தி தீண்டாமைத் திமிர் கொண்டோரின் சவாலை முறியடித்தனர் என்றும் அறிய முடிகிறது...''*

*''வருடா வருடம் நடைபெற்று வந்த வாலிபர் காங்கிரஸ் மாநாடுகளில் தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும், தீர்மானங்களும் பிரதான இடத்தைக் கொண்டிருந்தன. இதற்குக் காரணம் வாலிபர் காங்கிரஸ் இளைஞர்கள், இந்திய தேசிய இயக்கத்தின் தீவிர கருத்துக்களால் கவரப்பட்டிருந்தமையும் பரந்த கல்வி அறிவைப் பெற்றிருந்தமையு*

*மாகும். விவேகானந்தர், காந்தி, பாரதி போன்றோரது காலனிய எதிர்ப்புக் கருத்துக்களும் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளும் இவ் இளைஞர்களை அதிகளவு ஆட்கொண்டிருந்தன.''*

*விவேகானந்தர், பாரதி பற்றிக் கூறும்போது விபுலானந்தருக்கு அவர்கள் மேல் இருந்த ஈடுபாடு பற்றிக் கூறுவது அவசியமானது. இவர் 1922 - 1924 வரை சென்னை மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் இருந்த போது இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்) வேதாந்தகேசரி (ஆங்கிலம்) ஆகிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்துள்ளார். விவேகானந்தர் பற்றிய பல கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், அவரின் பல நூல்களை மொழிபெயர்த்தும் உள்ளார்.*

*அதேபோல் 1928 இல் திருகோணமலை ஆங்கில கலாசாலையில் பாரதியாரின் படத்தை திரைநீக்கம் செய்துவைத்து பாரதியாரை பலருக்கும் அறிமுகப் படுத்தினார். 1931 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த போது, தமிழ் நாட்டில் பாரதி கழகம் கட்டினார். பாரதி பாடல்களுக்கு இசையமைத்தார். தமிழ் நாட்டில் பாரதியாரை ஜனரஞ்சகப் படுத்துவதில் முன்னெடுப்பாளனாக இருந்துள்ளார்.*

*இது பற்றி சி. திமிலைத்துமிலன் எழுதிய கவிதை ஒன்றை இங்கே நோக்குவோம்.*

'கூட்டுக்குட் கோழிக் குஞ்செனத் தமிழைப்
பூட்டிவந்த பண்டிதர்கள் பாரதியின் பாட்டை
நல்ல தமிழல்ல நாங்கள் அனுமதியோம்
மெல்ல அதுசாக மென்றிடுவோம் என்று
பட்டடை நாய்கள் போல் பாதுகாத்த வேளையிலே
அட்டமா இருள்முன் ஆதவனைப் போல்வந்து
இங்கிதமாய்க் கவிச் சிறப்பை 'இழிசனர்க்கும்' அறிவித்தும்
சங்கங்கள் தொடங்கியும் சபையினிலே முழங்கியும்
பாரதியின் புகழையவர் பாட்டின் திறமைகளைப்
பாரதத்தின் புத்திரர்க்கும் பாருக்கும் விளக்கியவர்'

*இனி யாழ்ப்பாணத்தின் மூன்றாவது அணி பற்றிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் வரலாற்றுக்குள் தொடர்வோம்.*

''1927 ஆம் ஆண்டு கார்த்திகையில் மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தார். வாலிபர் காங்கிரஸ் அவரை யாழ்ப்பாணம் அழைத்திருந்தது. காந்திக்கு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வரவேற்புக் கொடுப்பதற்கான தயாரிப்புக் கூட்டங்களைக் காங்கிரஸ் தலைவர்கள் நடத்தி வந்தார்கள். சில இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் சாதி வெறியர்கள் தலையிட்டு காந்திக்கு வரவேற்புக் கொடுக்கும் அதேவேளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதில் சமத்துவம் கொடுக்கக் கூடாது என வாதிட்டனர். இவ்வளவிற்கு மத்தியிலும் 26-11-1927 இல் யாழ் முற்றவெளியில் காந்தி வரவேற்கப்பட்டார். வரவேற்புக் கூட்ட மேடையில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளும் வீற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.'' இந்த வரவேற்புக் கூட்டம் விபுலானந்தர் தலைமையிலேயே நடைபெற்றது. 1925 இல் நடைபெற்ற இரண்டாவது மாணவர் காங்கிரஸும் இவரின் தலைமையிலேயே நடைபெற்றது. (1925 - ஏப்ரல் - 26).

''1928 இல் கீரிமலை வைத்திலிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாநாடு, சமூக ஒருமைப்பாட்டு மாநாடாக நடைபெற்றது. விபுலானந்தர் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் சுயராச்சியக் கட்சித் துணைத் தலைவர் எஸ். சத்தியமூர்த்தி, நாலாந்தாக் கல்லூரி அதிபர் ஜி. கே. டபிள்யு. பெரேரா, தொழிற் சங்கவாதி ஏ. ஈ. குணசிங்கா, கௌரவ ஆ. கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனை ஓர் நாடளாவிய மாநாடாகக் கொள்ள வைத்தனர்'' இந்த மாநாட்டில் சமபந்தி சமபோசனம் என்ற நடவடிக்கையை அமுல்படுத்துவதில் மண்டப உரிமையாளர் பல தடங்கல்களை ஏற்படுத்தினார் என்பது கவனிக்கத்தக்கது.

''1929 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் காங்கேசன்துறையில் அமைக்கபட்ட பந்தலில் 4வது மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு இந்தியாவில் இருந்து வந்திருந்த தமிழ்த் தென்றல் கல்யாணசுந்தர முதலியார் தலைமை தாங்கினார். இம் மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் பங்கு கொண்டனர். சமபந்தி - சம ஆசனம் என்ற வாலிபர் காங்கிரஸின் உறுதியான நடவடிக்கை வெற்றிகரமாக நடைபெற்றது. இது பற்றி 13-4-1929 இல் டெயிலி நியூஸ் பத்திரிகை எழுதுகையில் 'யாழ்ப்பாணத்தில் புரட்சிகர நடவடிக்கை' என வர்ணித்தது. இந்த மாநாட்டின் இறுதியில் தெரிவு செய்யப்பட்ட நிருவாகக் குழுவில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரும், சமூக

நலன் விரும்பும் கல்வி கற்ற இளைஞனுமாய் இருந்த திரு, யோவேல் போல் அவர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடத்தில் யோவேல் போல் பற்றி சிறிது கூறுவது அவசியமானது. அப்போதுதான் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் கால சமூக - அரசியற் பின்னணியை நன்கு புரிந்து கொள்ள முடியும். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தீண்டாமைக்கு எதிராக முனைப்புமிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது 'தீண்டத்தகாதோரை' பிரதிநிதித்துவம் செய்யும் தனியான ஸ்தாபனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றது. 'ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம்' என்ற பெயருடன் 16-7-1927 இல் இவ்வமைப்பு உதித்தது. இது கிறிஸ்துவ பின்னணியிலேயே தோற்றுவிக்கப்பட்டது. 'உயர் சமூகத்தை'ச் சேர்ந்த கிறிஸ்தவரான நெவில் செல்லத்துரை என்பவரே இதன் தலைவராக இருந்தார். மிஷனரிக் கல்லூரி இளைஞர்களாய் இருந்த திரு. யோவேல் போல், திரு. டி. ஜேம்ஸ் ஆகிய இருவரும் இணைக் காரியதரிசிகளாக இருந்தனர். 1927 இல் காந்தியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது யோவேல் போல் தலைமையில் ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம் வரவேற்புப் பந்தல் அமைத்திருந்தது. இப்பந்தல் சாதி வெறியர்களால் எரிக்கப்பட்டது. யோவேல் போல் மீண்டும் அதே இடத்தில் பந்தல் அமைத்து காந்திக்கு வரவேற்புக் கொடுத்தார். 1928 ஆம் ஆண்டு இவரின் முன்னெடுப்பில் உடுவில் பெண்கள் பாடசாலையில் சம ஆசன - சமபோசன இயக்கம் நடைபெற்றது. வெற்றியும் தந்தது. பாடசாலைகளில் சம ஆசனம், சம போசனம் தொடர்பாக இவர் இருமுறை தேசாதிபதியைக் கண்டுள்ளார். இது நடந்தது 1928, 1929 இலாகும். இவ்விடயம் தொடர்பாக இவர் டொனமூர் ஆணைக் குழுவிடமும் சாட்சிபகன்றார்.

யோவேல் போலின் இப் போராட்டத்தை ஆதரிக்கும் நோக்குடனும், இவ்விதமான போராட்டத்தில் ஈடுபடுவதற்காக யோவேல் போலை கௌரவிக்கும் நோக்குடனுமே அவரை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தனது நிருவாகக் குழு அங்கத்தவராகத் தேர்ந்தெடுத்தது போலும்.

1930 ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு, சம ஆசனம், ஆலயப் பிரவேசம், மிருகபலி நீக்கம் போன்ற சமூகநீதிகளை முன்கொணரும் மாநாடாக இருந்தது. இம்மாநாடு சமூக நீதியை நிலைநாட்டிக் கொடுமைகளைக்

களைய முற்படக்கூடிய பல ஆலோசனைகளை முன் வைத்தது.

1930, 1931 களில் அது கூடியளவு அரசியல் குணாம்சம் கொண்டதாக மாறி, பின்னர் தன்னைக் கலைத்துக் கொண்டது. இதன் அங்கத்தவர்கள் பலர் வெவ்வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து கொள்கிறார்கள். அனேகமானோர் இடதுசாரிக் கட்சிகளுடனேயே இணைகிறார்கள். 1930 களிலேயே இடதுசாரிக் கட்சிகள் தோற்றம் பெற ஆரம்பித்தன என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். விபுலானந்தர் 1929 இல் மீண்டும் மட்டக்களப்பை வந்தடைகிறார்.

இந்த வாலிபர் காங்கிரஸ் சமூக நீதிக்காக மட்டுந்தான் போராடியதா எனக் கேட்டால், இல்லை. இன்னும் பல விவகாரங்களையும் தனது வேலைத் திட்டத்தில் உள்ளடக்கியிருந்தது. அவை எவை என்று இனிவரும் பகுதிகளில் நோக்குவோம்.

இவ்விடயத்துள் புகுமுன்னர், தீண்டாமை ஒழிப்பில் விபுலானந்தர் எவ்வளவு தூரம் அக்கறையாய் இருந்தார் என்பதை அவதானிப்பது அவசியமானது. 1970 களிலும், 1980 களிலும் தீண்டாமைக்கு எதிராகப் பேசுவதும் சமதர்மம் பேசுவதும் ஒரு காலக்கோலமாக (Fashion) இருந்தது. மேடைகளிலும், பொது இடங்களிலும், இலக்கியங்களிலும் பலர் சாதிசமத்துவம், சமதர்மம், சீதனஒழிப்பு போன்றவை தொடர்பாக பகிரங்கமாகப் பேசுவார்கள். முற்போக்குவாதிகளாகத் தம்மை வெளிக்காட்டிக் கொள்வார்கள். ஆனால், நடைமுறையில், அதிலும் குறிப்பாக தமது சொந்த வாழ்க்கை நடவடிக்கைகளில் தாம் பேசுவதை நடைமுறைப்படுத்த மாட்டார்கள். சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் ஒரு இணைவைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். பேசுவதற்கு எதிர் மாறாகவே நடந்து கொள்வார்கள். ''சில நடைமுறைச் சிக்கல்கள்'' என்று சாக்குப் போக்கும் கூறிக் கொள்வார்கள்.

ஆனால் 1970 களின் முன்பு அதுவும் குறிப்பாக 1920 களில் சாதி சமத்துவம் பேசுதல் என்பது மிக அருவருக்கத்தக்க ஒன்றாகவும், மதத்துரோகமும், தமிழ் பண்பாட்டுத் துரோகமும் மிக்கதொன்றாகவுமே கருதப்பட்டது. சாதி சமத்துவம் பேசியவர்கள் சமூகத்தில் இருந்தே ஒதுக்கப்பட்டார்கள். ஒரு கல்விமானாகவும், கல்லூரி அதிபராகவும், இந்து மதத் துறவியாகவும் இருந்த விபுலானந்தர் இவ்வளவு பிரச்சினைக்கும் முகம் கொடுத்தார். இவற்றிற்கு எதிரான போராட்டத்தின் மூலம் அவரது உள்ளம் மிக வைராக்கியமடைந்ததே

*தவிர தளர்ந்து போய்விடவில்லை என்பதை 1930 களில் தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்கள் மூலம் உணரக்கூடியதாய் உள்ளது.*

*1931 இல் இவர் அண்ணாமலை பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த போது தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் குடியிருப்புக்களுக்குச் (சேரிகளுக்கு) செல்வதை விருப்பமான கடமையாகக் கொண்டிருந்தார். அம்மக்களின் பண்பாட்டிலும் கலாசாரத்திலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. அடிமட்ட மக்களின் தொடர்பினால் அவர் பல விடயங்களைக் கற்றார். அதேவேளையில் அவர்களுக்கு பல விடயங்களைக் கற்பித்தார். சேரிகளும் அவருக்கு பல்கலைக்கழகமாக இருந்தன. திருவேங்கடத்தைச் சுற்றியிருந்த இந்தச் சேரிக் குழந்தைகளை இன்புறுவித்தலில் அவர் ஆத்ம திருப்தி பெற்றார். இவரும் இவரைப் பின்பற்றுபவர்களும் அக் குழந்தைகளைக் குளிப்பாட்டி சட்டையிடுவார்கள். அக் குழந்தைகளுக்கு வடை, சுண்டல் கொடுத்து மகிழ்வூட்டுவார்கள். இவர்கள் தம்முடன் பிற சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளையும் அழைத்துச் செல்வார்கள். சிறுவர், சிறுமியர்களிடம் மனிதனின் இயல்பான குணங்களான மனித நேயம் இயல்பாகவே மேவி இருக்கும். இதனால் சாதி பேத வேறுபாடுகளை மறந்து அக்குழந்தைகள் கூடி விளையாடுவார்கள். விபுலானந்தர் இதை வழி நடத்துவார். இவர்களின் இச் செயலைக் கண்டு பொறுக்காத 'பெரியவர்களின்' முயற்சியால் விபுலானந்தர் நல்ல நீர்க் கிணற்றில் நீர் அள்ளுவதுகூடத் தடுக்கப்பட்டது. இவர் சிலகாலம் தனது எல்லாத்தேவைகளுக்கும் உப்புநீரையே பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது.*

*அவரின் இந்நடவடிக்கை சொல்லுக்கும், செயலுக்கும் இடையில் இணைவை ஏற்படுத்திக் கொள்வதில் தொடர்ந்து விடா முயற்சியுடன் இருந்து வந்துள்ளமைக்கான ஓர் உதாரணமாகும்.*

## காங்கிரஸின் ஏனைய நடவடிக்கைகள்

### தமிழ் மொழிக் கல்வி

*சமூகவயமான (Socialized) ஒருவகை தனிமனிதர்கள், தமது நடவடிக்கைகளை இருவகைகளில் வெளிக் கொணர்கிறார்கள். ஒன்று தனிநபராக அவர்கள் ஆற்றும் கடமைகள். மற்றையது நிறுவனரீதியான,*

*நிறுவனமொன்றின் ஊடாக அவர்கள் ஆற்றும் கடமைகள். சமூகவியல் விவகாரங்களில் அதிக நாட்டமுள்ள மனிதர்கள் வாய்ப்புக் கிட்டுமானால் நிறுவனரீதியாக நிறுவனமொன்றின் ஊடாகக் கருமமாற்றுவதையே அதிகம் விரும்புவார்கள். இதன் மூலமே அவர்களின் எண்ணங்கள், மனப்பாங்குகள், அபிலாசைகள் அதிகளவு சக்தி மிக்கதாக மாற்றமுறும்.*

*விபுலானந்தர் மிக அதிகளவு சமூகவயமான ஒரு தனிநபராவார். அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது தனிநபர் என்ற முறையில் அவர் ஆற்றிய கருமங்களையும் விட நிறுவனரீதியாக அவர் ஆற்றிய கருமங்களே அதிகமானதும், அதிக வீச்சுக் கொண்டதுமாகும். ஆகவே விபுலானந்தரைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் அதிகளவு தன்னை அர்ப்பணித்த நிறுவனங்களைப் பற்றியும், அவற்றின் செயல்பாடு பற்றியும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் அவர் ஈடுபட்ட நிறுவனங்களில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸும், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கமும் பிரதானமானவை. நாம் இவை பற்றி ஆராய வேண்டியது மிக அவசியமானதாகும்.*

*யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஆனது படித்த வாலிபர் அமைப்பேயாகும். நகர்ப்புற மத்தியதர வர்க்க இளைஞர்களே இதன் அங்கத்தவர்களாக இருந்தார்கள். கல்வியமைப்பில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே இவ்வமைப்பின் பிரதான, தலையாய குறிக்கோளாக இருந்தது. இக்குறிக்கோள், கல்வி மறுமலர்ச்சி என்ற கோணத்தில் இருந்தே அனைத்துச் சமூகப் பிரச்சினைகளையும் அணுகியது. கல்வியில் பாரபட்சமற்ற சமவாய்ப்பு அவசியம் என்பது, இவ்வமைப்பின் கொள்கையில் ஒன்றாக இருந்தது. சாதிபேதம் இச்சமவாய்ப்பை மறுத்து நின்ற பலமிக்க சமூகக் காரணியாக இருந்தது. இதனாலேயே வாலிபர் காங்கிரஸினர் சாதி பேதத்தையும் எதிர்க்க வேண்டிய நிலைக்குள்ளானார்கள். கல்வி மறுமலர்ச்சியே இவர்களது பிரதான குறிக்கோளாகும் என்பதே நாம் இங்கு அவதானிக்க வேண்டிய முக்கிய குறிப்பாகும்.*

*கல்வி மறுமலர்ச்சிக்குத் தடையாக இருந்த மற்றோர் காரணிதான் அந்நிய மொழிக் கல்வியாகும். இதனால் தான் தாய்மொழிக் கல்வி என்பது இவர்களின் அடுத்த கொள்கையாக இருந்தது. ''மூன்று நாட்கள் நடைபெறும் தங்கள் மாநாடு ஒருநாள் தமிழ் மொழியில்*

நடைபெறுவதும், தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் உரிய நாளாக அந்நாளைக் கொள்வதுமாக நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தனர். தேசிய கல்வித் திட்டத்தில் ஆங்கிலத்துக்கான இடத்தை அன்னை மொழிக்குக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். இந்தப் போராட்டம், தேசிய மொழிகளுக்கு முக்கியம் தரும் இடமாகக் காணப்பட்டது.''

''இவ்விளைஞர் சங்கத்தின் மற்றுமோர் கல்விப்பணி வடமாகாண ஆசிரியர் சங்கத்தினைத் தமது செல்வாக்கினுள் வைத்திருந்து ஆசிரியர் உலகத்துக்குப் பணியாற்றியதாகும். இப்பெருமக்கள் ஆசிரியர் மத்தியில் நிலவிய வேதன முரண்பாட்டை நீக்குவதற்காக உழைத்தனர். மொழிவாரியாக வேதன முரண்பாடு காட்டப்படக்கூடாது என்று அரசாங்கத்துடன் வாதிட்டு வந்தனர். மேலும் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றனர். தேசியக் கல்வித்திட்டம், அன்னைமொழிக் கல்வி, கட்டாயக்கல்வி, இலவசக்கல்வி, தொழிற்கல்வி, விஞ்ஞானக்கல்வி போன்று கல்வி விரிவடைய அரும்பாடுபட்டனர்''

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் முன்னோடியும், ஆசிரிய தந்தை என்று கருதப்பட வேண்டியவருமான ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் அன்னை மொழிக்கல்வி, தேசியக்கல்வி ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவராவார்.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அங்கத்தவர்களாக இருந்த பேராசான் நேசையா, சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து 1930 இல் வாலிபர் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவருமான சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் போன்றோர் அன்னை மொழிக் கல்விக்காக உழைத்த முக்கியஸ்தர்களாவர். திரு. நேசையா அன்னை மொழிக்கல்வி தொடர்பாக ஒரு நூல் எழுதியுள்ளார். திரு. சிவபாதசுந்தரம் கல்வி ஆலோசனை சபை அங்கத்தவராக இருந்து அச்சபையில் அன்னை மொழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

20 ஆம் நூற்றாண்டின் முதற் காலப்பகுதியில் இருவிதமான தாய்மொழிக்கல்வி இயக்கங்கள் செயற்பட்டன. ஒன்று, இலங்கை மக்களில் மிகப் பெரும்பான்மையினர் கல்வி கற்பதை சாத்தியப்படுத்துவது என்ற நோக்கம்கொண்டது. மற்றையது,

ஐரோப்பியமயமாதலுக்கு தடைகள் இடுவதை நோக்கமாய்க் கொண்டது. இலங்கையின் உயர்வர்க்கங்கள் குறிப்பாக சிங்கள உயர்வர்க்கங்கள் தாய்மொழியையும், பாரம்பரிய மதத்தையும், பண்பாட்டையும் மறந்தே போய்விடும் நிலைமை தோன்றியிருந்தது. அவர்கள் தமது அன்றாட வாழ்க்கைப் பழக்கவழக்கங்களில் ஐரோப்பிய மயமாகி வந்தார்கள். இதைத் தடுத்து நிறுத்தி பாரம்பரிய பண்பாட்டை மீளப் பாதுகாப்பதற்கான வழிவகைகளில் ஒன்றாகக் கிறிஸ்தவ மத எதிர்ப்பும், தாய் மொழிக் கொள்கையும் பின்பற்றப்பட்டது. சேர். பொன் இராமநாதனே இந்த வகையான தாய்மொழிக் கல்வி இயக்கத்தின் தமிழ்ப்பகுதி முன்னோடியாக இருந்தார். இராமநாதன் குழுவினருக்கு, பரவலாக மக்கள் கற்கவேண்டும் என்பதுவோ, கற்றல் சுலபமாக்கப்பட வேண்டும் என்பதுவோ நோக்கமாய் இருக்கவில்லை. மொழியை அரசியல் கருவியாகப் பயன்படுத்துவதற்கு அப்பால் இவர்களின் தாய்மொழிக் கல்வி இயக்கத்தால் வளரமுடியவில்லை.

ஆனால், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பரவலாக மக்கள் கற்க வேண்டும் என்பதையும், கற்றல் சுலபமாக்கப்படவேண்டும் என்பதையுமே தனது நோக்கமாய் கொண்டிருந்தது. ஆகவே இது தேசிய கல்விக்காக வாதிட்டதே தவிர, மொழியை 'தேசிய இயக்கத்தின்' ஒரு அரசியல் கருவியாக மட்டும் பயன்படுத்தும் கீழ் நிலைக்கு இறங்கிச் செல்லாமல் தன்னைப் பாதுகாத்துக் கொண்டது. இதன் அங்கத்தவர்கள் மொழிவளர்ச்சிக்கு தனிநபர்கள் என்ற முறையிலும், அமைப்பு ரீதியாகவும் பல பங்களிப்புகளை வழங்கினர். விபுலானந்தர் இதில் அதிக நாட்டமும், முயற்சியும் உடையவராய் இருந்தார்.

அறிவியற் கல்வி தமிழிலும் போதிக்கப்பட வேண்டும் என்பதில் விபுலானந்தர் மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்தார். பல ஆங்கில நூல்களை மொழிபெயர்த்தார். இதற்காக 1922 இலேயே யாழ்ப்பாண காங்கிரஸ் அமையுமுன்பாக, மேற்றிசை செல்வம், விஞ்ஞான தீபம் ஆகிய நூல்களை இயற்ற ஆரம்பித்தார். விபுலானந்தர், 1966 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டார். விஞ்ஞான நூலாக்க சொல்லாக்கு கழகம் ஒன்றை நிறுவி தாமே தலைமையும் தாங்கினார். 1920-1922 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்த போது, இவர் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். பல்கலைக் கழகம் சம்பந்தமான இவரது கொள்கைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் ஒரு களமாகவே இச்சங்கம்

அமைந்திருந்தது. இதற்கான பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில் இவர் பிரதான பங்கு வகித்தார். பிற மதத்தினருடனும் இணைந்து செயற்படும் அவரின் பண்பு இங்கும் வெளிப்பட்டது. அருட்திரு. ஞானப்பிரகாசருடன் இவர் இங்கு கூட்டுச் சேர்ந்து செயற்பட்டார். நெருங்கி ஒத்தழைத்தார். தமிழ் மொழியியல் விற்பன்னரான ஞானப்பிரகாசருடன் நட்புப் பூண்டார். அருட்திரு ஞானப்பிரகாசரின் தமிழ் மொழி ஒப்பியல் நூலே சங்கத்தின் பாட நூலாகவும் இருந்தது. இப் பாஷா அபிவிருத்திச் சங்கம் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என்ற முத்தரங் கொண்ட மூன்று தேர்வுகளை நடத்தி வந்தது. விபுலானந்தரே இத்தேர்வுகளின் முன்னோடியாவார். விபுலானந்தர் மட்டக்களப்புக்கு திரும்பி வந்த பின்னரும் 1930 இல் ஆரிய பாஷா திராவிடசங்கம் பாலபண்டிதர் பரீட்சை நடத்தும் பொறுப்பை (பரீட்சகர்) விபுலானந்தரிடமே ஒப்படைத்திருந்தது. இவர் எத்தனை வருடம் இந்தப் பொறுப்பில் இருந்தார் என்பது பற்றி சரியான தகவல் கிடைக்கவில்லை.

**அரசியல் சுதந்திரம்**

1920 களில் இருந்த அரசியல் பின்னணி பற்றி முன்னர் குறிப்பிட்டோம். 1919 இல் இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றம் பெற்றது. சேர். பொன். அருணாசலமே அதன் தலைவராக இருந்தார். இவரே இதை இயக்கினார். தனது அண்ணன் சேர் பொன். இராமநாதனைத் தொடர்ந்து, சேர் பொன் அருணாசலம் ‘இலங்கைத் தேசியத்தின்’ தந்தையாக முயற்சித்தார். அக்காலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கும் தென்பகுதி சிங்களவர்களுக்கும் இடையில் மிக நெருங்கிய நேச உறவு நிலவிவந்தது. முன் குறிப்பிட்டது போல கொழும்பில் யாழ்ப்பாணத்தவர்களின் குடியிருப்புகள் பெருகி வந்தன. இலங்கையை ஆள்வதற்காக பிரித்தானியரால் தோற்றுவிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வந்த அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் வேண்டி இலங்கைத் தேசிய காங்கிரஸ் விண்ணப்பங்கள் அனுப்பியும் சாட்சிகள் அளித்தும் ‘போராடிக் கொண்டிருந்தது’.

இதே இருபதுகளில் கொழும்பு நகரத் தொழிலாளர்கள் மெல்ல மெல்ல அமைப்பு ரீதியாகத் தம்மை அணிதிரட்டி வந்தார்கள். பிரித்தானியருக்கு எதிரான ‘மலேரியா எதிர்ப்பு’[1] இயக்கமும் ‘சூரியமல்’[2] இயக்கமும் தெற்கில் தோற்றமெடுத்தன. இடதுசாரி இயக்கத்தின் கருப்பைகளாக இவை விளங்கின. இவை தவிர வேறு எந்த அரசியல் கட்சிகளுமே

இலங்கையில் அக்காலத்தில் இருக்கவில்லை.

1920 களின் முற்பகுதியில் தோற்றம் பெற்ற யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், ஆரம்பத்தில் ஒரு அரசியல் ஸ்தாபனமாகச் செயற்படவில்லை. அதற்கோர் அரசியல் நிலைப்பாடு இருந்துள்ளது. ஆனால் அது ஒரு அரசியல் இயக்கமாகச் செயற்படவில்லை. 20 களில் தனி ஒரு அரசியல் இயக்கமாக இருந்த இலங்கைத் தேசிய காங்கிரஸுடன் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் முன்னோடி அமைப்புகள் தம்மை இனங்காட்டிக் கொள்ளவில்லை. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அரசியல் எவ்வாறு இருந்தது என்பதற்கு இதுவொரு சிறந்த நிலைப்பாடாகும்.

20 களில் யாழ்ப்பாணத்துள் செயற்பட்ட வர்க்க முரண்பாடுகள் சாதிய முரண்பாடுகளாகவே வெளிப்பட்டன. இதனால் யாழ்ப்பாணத்தின் உயர் வர்க்கங்கள் நில உடைமையாளர்களும், உயர் அதிகாரிகளும், பிரித்தானிய தரகு முதலாளித்துவ வர்க்கங்களும், பெரும் வர்த்தகர்களும் ஊறிப்போன தடித்த சாதிமான்களாகவே இருந்தார்கள். இலங்கை தேசிய காங்கிரஸின் யாழ்ப்பாணப் பகுதியினராக இருந்தவை இதே உயர்வர்க்கங்களேயாகும். இதனால் இலங்கைத் தேசிய காங்கிரஸின் அரசியல் என்பது யாழ்ப்பாணத்தில் சாதிமான்களின் அரசியலாகவே இருந்தது. இந்நிலையில் கல்வியில் சமவாய்ப்புக்கோரிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் முன்னோடிகள் இலங்கை தேசிய காங்கிரஸுடன் எவ்விதம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்?

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், படிப்படியாக இலங்கை தேசிய காங்கிரஸ் வழிவந்த தலைவர்களுடன் (தமிழ் மகாஜன சபை) அனைத்து வழிகளிலும் முரண்பட்ட ஒரு அரசியல் நிலைப்பாட்டை எடுக்க ஆரம்பித்தது. வாலிபர் காங்கிரஸ் மேடைகளில் இந்திய சுதந்திர விடுதலைப் போராட்ட வீரர்களும் தென் இலங்கை தொழிற்சங்க அரசியல் வாதிகளும், இடது சாரி அரசியல் கருத்துள்ளவர்களும் தோன்ற ஆரம்பித்தார்கள். இலங்கை தேசிய காங்கிரஸ், சிங்கள முதலாளித்துவ நிலப் பிரபுத்துவவாதிகளின் ஸ்தாபனமாகியது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சிங்கள ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட பகுதியினருடன் நட்புறவு பூண்டது. இந்திய சுதந்திர இயக்கத்துடன் நட்புறவு கொண்டது.

இவ்விதமாக வளர்ந்து வந்த படிப்படியான அரசியல் முரண்பாடுகள் 1931 இல் வெளிப்படையான வடிவமெடுத்து பூதாகரமாக வெடித்தன. 1928 - 1929 ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய அரசு டொனமூர் ஆணைக்கமிஷனை அனுப்பிவைத்தது. இலங்கையில் அரசியல், சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான சிபாரிசுகளைத் தயாரிப்பதுவே இக் கமிஷனின் நோக்கமாய் இருந்தது. யாழ்ப்பாணத்தின் சாதிப்பிரச்சினையும் சமூக சீர்திருத்தத்தை கோரி நிற்கும் பிரச்சினையல்லாவா?

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பாடசாலைகளில் சம ஆசனம் சம போசனம் வேண்டி இயக்கம் நடத்தியபோது, ''...மறுபுறத்தில் உயர் குல தமிழர்களின் தலைவரும், இலங்கையின் உயர் கல்விமானும், நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியுமாக விளங்கியவரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் சம ஆசனம் சம போசனத்திற்கு எதிரான நடைமுறைகள் இயக்கப்பட்டன. 1928 ஆம் ஆண்டில் சேர்.பொன். இராமநாதன் 79 கிராமச் சங்கப் பிரதிநிதிகளுடன் அன்றைய வெள்ளைக்காரத் தேசாதிபதியைப் பேட்டி கண்டு சாதி அமைப்பு முறையிலான பாடசாலை முறைகளை வலியுறுத்தினார். தேச வழமையின்படி தமிழர்களின் பாரம்பரியம் காப்பாற்றப்படுவது அவசியம் என வாதம் புரிந்தார். 4-11-1929 இல் நூற்றிமுப்பத்தொரு 'சைவப் பெரியார்கள்' யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரில் இந்து மகாசபையின் தலைமையில் ஒன்று கூடி கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையை உயர் சாதியினரின் தனி ஸ்தாபனம் ஆக்குமாறு தேசாதிபதிக்கு மனுச்செய்தனர்''

இவ்வனைத்தையும் மீறி டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசின் பெயரில் 1930 ஆம் ஆண்டு சம ஆசனம் சம போசனம் சட்டமாக்கப்பட்டது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் யார் பக்கம் நின்றதெனில், சாதிய அடக்குமுறைகளுக்கு எதிரானோர் பக்கமே; அப்பக்கமே வெற்றி கண்டது.

டொனமூர் ஆணைக்குழுவினரின் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட அடுத்தவிடயம் சர்வஜன வாக்குரிமை தொடர்புபட்டதாகும். ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினர் மத்தியில் தோன்றிய ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்கள் சர்வஜன வாக்குரிமை கோரி இயக்கம் நடத்தின. அதேவேளை சேர். பொன். இராமநாதனும் அவரின் ஆதரவாளர்களும் படித்தோர்க்கான வாக்குரிமை மட்டும் போதும் என்று கூறி சர்வஜன

வாக்குரிமையை எதிர்த்தார்கள். சேர். பொன். இராமநாதன் சர்வஜன வாக்குரிமைக்கு எதிராக ஆணைக்குழு முன்சாட்சியமளித்தார். ஆனால் அவரின் அவாவையும் மீறி 1931 இல் சர்வஜன வாக்குரிமை அமுலுக்கு வந்தது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சர்வஜன வாக்குரிமையை எதிர்க்கவில்லை. அதை வரவேற்றது. ஆனால், அரசியல் சீர்திருத்தங்களுக்குப் பதிலாக இலங்கைக்கான பூரண சுதந்திரத்தையே அது தனது தேசிய அரசியல் கொள்கையாக வகுத்துக் கொண்டுவிட்டபடியால் டொனமூர் கமிஷனைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை.

1931 இல் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தனதுஅரசியல் நடவடிக்கையின் அதி உச்ச நிலைக்குத் தாவியது. ''டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையானது முழுமையான இலங்கை மக்களினது தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்வில்லை எனக்கூறி சர்வஜனவாக்குரிமையினடிப்படையில் இடம்பெற்ற முதலாவது தேர்தலை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் புரட்சிகரமான முறையில் பகிஷ்கரித்தது.''[3] பிரித்தானிய காலனியவாதிகளோ தமது காருண்யத்தை பிரபல்யப்படுத்த இத் தேர்தலைப் பெரிதாக விளம்பரப்படுத்தினார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தை பலவீனப்படுத்துவதற்கு சர்வஜன வாக்குரிமை மூலம் அமைக்கப்பட்ட சட்டசபையை ஒரு வகைமாதிரியாக பயன் படுத்தவும் எத்தனித்தார்கள். இலங்கையின் பிரித்தானிய காலனி ஆதரவு புத்திஜீவிகள் சகல பிரித்தானிய காலனியல் வாதிகளை வரம்பின்றிப் புகழ் பாடினார்கள். இந்தவிதமான ஒரு சூழலில் இலங்கையின் முதலாவது சர்வஜன வாக்குரிமையையும் தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபையையும் பகிஷ்கரிப்பது என்பது உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான நடவடிக்கைதான். இலங்கையில் முதலாளித்துவம் தோன்றிய பின்னர் இலங்கையில் நடந்த முதலாவது தேசிய அரசியல் வெகுஜன எதிர்ப்பு நடவடிக்கை என்று இதைக் கூறினால் அது மிகையாகாது. இப்பகிஷ்கரிப்பு வெற்றியும் அளித்தது. இப் பகிஷ்கரிப்பு இலங்கைத் தேசியம் என்பதுள்ளேயே அடங்கியிருந்தது. ஆனாலும் இலங்கைத் தேசிய காங்கிரஸின் தமிழ் தலைவர்களின் தேசியம் போல், தமிழீழ மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் ஒன்றான யாழ்ப்பாணத்தினின்று விலகி நின்ற ஒரு தேசியமல்ல. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அங்கத்தவர்களின் நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தியே அமைந்திருந்தன. அதன் அங்கத்தவர்களின் சொந்த வாழ்க்கை நடவடிக்கைகள் கூட தமிழ் பாரம்பரிய பிரதேசத்துள்ளேயே

*அமைந்திருந்தன.*

*இக் கட்டுரையின் கதாநாயகனான விபுலானந்தர் 1929 உடன் யாழ்ப்பாணத்தை விட்டு அகன்று திருகோணமலையை வந்தடைகிறார். இதனால் 1930 இலும் 1931 இலும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் நடவடிக்கைகளுடன் அவருக்கு நேரடித் தொடர்பு எதுவும் இருக்கவில்லை. 30, 31 இலேயே காங்கிரஸ் தீவிர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. ஆனால் இது திடீர் என்று ஏற்பட்ட ஒரு மாற்றமல்ல. படிமுறையான வளர்ச்சியின் ஒரு உயர்ந்த கட்டமேயாகும். எவ்வாறேனும் அக்கால கட்ட சூழலில் வாலிபர் காங்கிரஸின் அரசியலானது புரட்சிகர அரசியல் என மதிப்பீடு செய்யப்படக்கூடியதேயாகும். ஆகவே விபுலானந்தர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த போது யாழ்ப்பாணத்தின் அன்றைய புரட்சிகர அரசியலுடனேயே தன்னைத் தொடர்பு படுத்திக் கொண்டார் எனத் துணிந்து கூறலாம்.*

# சித்தர்களும் முளைவிடும் இடது சாரிகளும்

*யாழ்ப்பாணத்தின் 20 ஆம் ஆண்டுகளை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் ஆண்டுகள் என்று சொன்னால் அது மிகையாகாது. கல்வியில் சமவாய்ப்பு இயக்கத்தின் மூலம் தீண்டாமை ஒழிப்பு அலையை யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைத்ததைப் போல்; பூரண தேசிய சுதந்திரம் என்ற அரசியல் உணர்வை யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்ததைப்போல்; மதச்சார்பற்ற (Secular) சமூக சீர்திருத்த நிறுவனத்தையும் அரசியல் அமைப்பையும் யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்ததும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸேயாகும்.*

*அனைத்து நிறுவனங்களும் மத அடிப்படையில் அமையப்பெற்று வந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு மதக் கருத்துக்களிடையே யான (குறிப்பாக கிறிஸ்தவத்துக்கும் சைவத்திற்கும்) வாத விவாதங்கள் தூற்றுதல்களாகவும் வசைபாடல்களாகவும் வளர்ந்து வந்த நேரத்தில் யாழ்ப்பாண காங்கிரஸ் தோன்றியதானது இருண்ட வானத்துக்கு ஒரு விடிவெள்ளியாகவே இருந்தது. காங்கிரஸின் தோற்றத்துடன் மலினமான மதச் சச்சரவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இவ்வித சச்சரவுகளைக் கண்டித்ததால் மாத்திரம் அந்த வெற்றி கிட்டவில்லை. மதிப்புப் பெற்ற பல படித்தவர்கள் தமது மத நம்பிக்கைகளைப் பொருட்படுத்தாமல் தமக்குள் ஐக்கியப்பட்டு சமூகத்தின் கவனத்தை உண்மையான சமூகப் பிரச்சினைகளின் மீது திருப்பி விடுவதில் வெற்றி பெற்றதே இதற்கான காரணமாகும்.*

*பாம்பும் கீரியும் போன்று இருந்த சைவர்களும், கிறிஸ்தவர்களும் ஒரு சமூக நிறுவனத்துள் அதுவும் தன்னார்வ அடிப்படையில்*

உருவாக்கப்பட்ட ஒரு சமூக நிறுவனத்துள் வெற்றிகரமாக ஒன்றிணைந்தார்கள். இத்துடன் மாத்திரம் நிற்கவில்லை. நிமிர்ந்து நேராக பார்க்கக் கூடத் தகுதியற்றவர்கள் என்று கருதப்படும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டார்கள். இவ்வெற்றியைச் சாத்தியப் படுத்துவதற்காக அவர்களால் எவ்விதமான சிந்தனைமுறை பின்பற்றப்பட்டது என்பது பெரும் ஆய்வுக்குரிய ஒரு விடயமேயாகும்.

தொகுத்த தகவல்களைக் கொண்டு பார்க்கும் போது இவ்வெற்றிக்குக் காரணமான இவ்விதமான சிந்தனா முறைகளை இனங்காணக் கூடியதாய் உள்ளது. ஒன்று ஆரம்பகால இடதுசாரிக் கருத்துக்கள், மற்றையது ஆன்மீகவாத சன்மார்க்கநெறி. முன்னையதன் பிரதிநிதிகளாக ஹண்டி பேரின்பநாயகம், சி. சுப்பிரமணியம் (ஓறேட்டர்) ஆ. கனகரத்தினம் போன்றவர்களும். பின்னையதன் பிரதிநிதிகளாக விபுலானந்தர், சிவபாதசுந்தரம் போன்றவர்களும் விளங்கியுள்ளார்கள்.

ஹண்டி பேரின்பநாயகம், சி. சுப்பிரமணியம், ஆ. கனகரத்தினம் போன்றோர் தம்மை சமரசவாதிகள் என்றும், இடதுசாரிகள் என்றும், அழைத்துக் கொள்வதில் பெருமைப்பட்டுள்ளார்கள். இலவசக்கல்வி, பாடசாலைகளை அரசுடமையாக்கல் போன்றவற்றை இவர்கள் ஆதரித்தும் வந்துள்ளார்கள். திரு. கனகரத்தினம் அவர்கள் 28 ஆம் ஆண்டு நடைபெற்ற வாலிபர் காங்கிரஸ் மாநாட்டில் ''எமது பொருளாதாரமும் சமூக பிரச்சினைகளும்'' என்ற தலைப்பில் பல சமதர்மக் கருத்துக்களை முன்வைத்தார்.[4] இம் மாநாட்டில் இலங்கையின் ஆரம்பகால சமதர்மவாதியான ஏ. ஈ. குணசிங்காவும் கலந்து கொண்டுள்ளார். (இவர் பின்னர் சிங்கள பேரினவாதியாக மாறுகிறார்) வாலிபர் காங்கிரஸின் ஆரம்பகால அங்கத்தவர்களில் பலர் இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சம்சமாஸக் கட்சியிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும் சேர்ந்து கொள்கிறார்கள்.

விபுலானந்தரால் பின்பற்றப்பட்ட ஆன்மீகவாத சன்மார்க்க நெறியும் இவ்வெற்றிக்குப் பெரும் பங்காற்றியுள்ளது. சன்மார்க்க நெறியாளர்களும் அன்றைய ஆரம்பகால இடதுசாரிகளும் (Radicals) நீண்டகாலம், சுமார் 10 வருடங்களுக்கு மேலாக ஒன்றுபட்டு இருந்துள்ளார்கள். ஒருமித்துச் செயற்பட்டும் உள்ளார்கள்.

விபுலானந்தரின் சன்மார்க்க நெறியையும், அவரின் வாழ்க்கை முறையையும் உற்று நோக்கும்போது அவர் ஒருவகைச் சித்தர் என்றே எண்ணத் தோன்றுகின்றது. சித்தரின் பொதுவான குணாம்சங்கள் என ஞானியால் 'மாக்ஸியமும் தமிழ் இலக்கியமும்' என்ற நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குணாம்சங்களை விபுலானந்தரிடத்தும் காணக்கூடியதாய் இருந்துள்ளது.

''சாதி சமயச் சடங்குகள் என்று சமூகம் இறுகி விடக்கூடிய காலங்களில் சாதி சமய சடங்குக் கட்டுகளை உடைத்தெறிந்து விட்டு சுதந்திர வெளியில் உலவியவர்கள் சித்தர்கள். மக்களுக்கு மிக மிக நெருக்கமானவர்கள் சித்தர்கள். ஆற்றல்கள் பலவற்றை தமக்குள் அடக்கிக் கொண்டு எளிய கோலத்தில் 'தாவரம் இல்லை தனக்கொரு வீடில்லை தேவாரம் ஏதுக்கடி'' என்று திரிந்தவர்கள். உண்மை காணத் தேர்ச்சி உடையவர்களாகிய இவர்கள் நன்மங்கையரை தாய்போல் கருதினர். அனைவருக்கும் தாய்மை சொல்லி சேய் போல் இருந்தனர். சாத்திரங்கள் கோத்திரங்கள் முதலியவற்றை அவற்றின் இறுதி வரை பார்த்து உதறியவர்கள். நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் என்று கண்டவர்கள். கோயிலும் மனதுள்ளே குளங்களும் மனதுள்ளே என்றவவர்கள். வெட்டவெளியே தெய்வம் என்று கண்டவர்கள். அன்பே சிவம் ஆவதை அறிந்தவர்கள். தேகமே சிவாலயம் என்று கொண்டாடினவர்கள். காசிக்கு ஓடில் வினைபோமா? கங்கை ஆடில் கதிதானுண்டோ? என்று கேள்வியெழுப்பியவர்கள்.

இவ்வகையில் சித்தர்கள் கலகக்காரர்கள், புரட்சிக்காரர்கள், நிறுவனவடிவில் எழுந்த சமயங்களுக்கு சாவுமணி அடிக்கக் கிளம்பியவர்கள். மனிதனைச் சாதி சமயக் கட்டுகளில் தளையிட்ட காலந்தோறும் அத்தளைகளைத் தகர்த்து மனிதனை விடுவிப்பவர்கள். உலகில் அன்பு, நேர்மை, மனிதர்களிடையில் சமத்துவம், சமரசம் முதலியவற்றைக் காப்பாற்றத் துணிவு கொண்டவர்கள். இறைவனை இவர்கள் மறுத்தவரில்லை. இறைவனை எங்கும் கண்டவர்கள். எல்லாவற்றையும் இறை நிலையில் வைத்துக் கண்டவர்கள். இறைவன் மகிழ்ந்துறையும் இடம் தமது இதயம் என்று கண்டவர்கள். இவர்கள் கண்ட தெய்வத்துக்கு உருவம் இல்லை. பெயர் இல்லை. குடும்பம் குழந்தைகள் இல்லை. அன்பே தெய்வம். தங்கள் உள்ளுணர்வே தெய்வம் .....''

சன்மார்க்க சமயம் என்ற தலைப்பில் விபுலானந்தர் கூறியுள்ள சில

*விஷயங்களை இங்கு கவனிப்போம்.*

*''நாம் மனிதர் என்னும் பெயருக்கு முழுதுந்தகுதி பெறவேண்டு மானால், இன்று முதலே சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டும்''*

*''சன்மார்க்க விதிகளை அனுசரித்து நடத்தல் நமது கடமை. சுத்த சன்மார்க்கம் ஆடம்பரத்தை விரும்பும் மனிதர்களால் கடைப்பிடிக்கக் கூடியதன்று''*

*''தாய் நாட்டுக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகஞ் செய்யும் உத்தம தேச பக்தர்கள் உண்மைச் சன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர்களே யாவார்கள். தேச மக்களின் நன்மைக்காக வேறு துறைகளில் சுயநலமின்றிப் பாடுபடுவோரும் சன்மார்க்க புருஷர் என்பதில் சந்தேகமில்லை''*

*''உண்மைநெறி எது என்பதை நாம் ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டும். பின்னர், அந்நெறியில், அது பழைய நெறியாயினும் நூதன நெறியாயினும் அச்சமின்றிச் சொல்லவேண்டும். இவ்வாறு நமக்கு உண்மையென்று தோன்றும் வழியை உறுதியுடன் கடைப்பிடிப்பதே உத்தம சன்மார்க்கமாகும்''*

*''பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனே தான் நல்ல நிலைமையை அடைய விரும்புவதே உண்மையான சன்மார்க்கமாகும்''*

*''இடைவிடாது நற்காரியங்களைச் செய்வதில் ஆசையை வளர்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஆசையை நிறைவேற்றுவதற்குச் செய்யப்படும் முயற்சியே உண்மையான சன்மார்க்கமாகும்''*

*''நீதிநெறி நிற்கவும் நன்மை புரியவும் நாம் வெளியில் இருந்து நன்மை பெற முடியாது. அந்தச் சக்தி நமக்குள்ளேயே நமது ஆத்துமாவில் நிலைபெற்றிருக்கிறது.''*

*''சகல நீதிகளையும் ஒன்று திரட்டிக் கடைந்து அவற்றின் சாரத்தை எடுப்போமாயின், மனித குலத்தின் நன்மைக்காக இடைவிடாது தொண்டு செய்வதே மிக மேலான சன்மார்க்க நியமம் என்பதை அறிந்து கொள்வோம்''*

*''வழக்கத்தை அனுசரித்து நடத்தலையே சன்மார்க்க வாழ்வு என்று சொல்லமுடியாது''*

*''நாம் எண்ணித் துணிந்து செய்யும் கருமங்களையே சன்மார்க்கச் செயல்கள் என்று கூறவேண்டும்''*

*''இவ்வுலகில் அவ்வப்போது தோன்றும் ஒரு சிலர் பரோபகார நோக்கங் கொண்டு உலகப் போக்குக்கும் பழைய வழக்கத்துக்கும் மாறாகக் காரியம் செய்கின்றனர். இத்தகையோர் உலகின் வீரபுருஷராவார். நாம் அனைவரும் நமது அந்தராத்மா என்ன செய்கிறது என்பதைச் செவிமடுத்துக் கேட்டு அதற்கு இணங்க நடந்தாலன்றி, நீதி மார்க்கத்தை கடைப் பிடிப்பவர்களாக மாட்டோம். சர்வாந்தரியாமியான ஈசுவரன் நாம்செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் சாட்சியாய் இருக்கிறானென்னும் உணர்ச்சி நம் உள்ளத்தில் வேரூன்றும் வரையில் நாம் மேற்கூறிய நிலை எய்த முடியாது''*

*''ஒரு காரியத்தைச் சன்மார்க்கத்துக்கு உகந்தது என்று சொல்வதற்கு அது பிறருடைய வலுக்கட்டாயத்தினாலன்றித் தன்னிச்சையினால் செய்யப்படுவதாயிருக்க வேண்டும்''*

*''விபச்சாரம் சன்மார்க்க சட்டத்தின்படி ஒரு பெரும் குற்றமாகும்''*

*விபுலானந்தரின் சன்மார்க்க நெறியில் மானுட நேயம் ததும்பி வழிவதைக் காணக்கூடியதாய் உள்ளதல்லவா? முளைவிடும் இடதுசாரிக் கருத்தும் மானிட நேயம் மிக்கதொன்றல்வா?*

*விபுலானந்தரின் சன்மார்க்க நெறியில் பழமைக்கு எதிரான புரட்சிகரத் தன்மையும் உண்டல்லவா? முளைவிடும் இடதுசாரிக் கருத்தும் புரட்சிகர தன்மை மிக்கதுதானே? அதேவேளை விபுலானந்தரின் சன்மார்க்கத்தில் ஜனநாயகமும் உண்டு.*

*சுயவிருப்புடன், சுயசிந்தனையுடன், பிறரின் கட்டாயப்படுத்தலுக்காக வன்றி தானே எண்ணிச் செய்யும் நற்கருமங்களே சன்மார்க்கமாகும். ஒருவனின் சாதி, மத, இன சார்பை வைத்துக்கொண்டு அவனை எடை போடக்கூடாது. அவனின் நோக்கமென்ன, அவன் சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்புகள் என்ன என்பதை வைத்தே அவனை எடை போட வேண்டும். இதுவே சன்மார்க்க வழியாகும். முளைவிடும் இடது*

சாரிகளின் கொள்கையும் இவ்விதமானதே தான்.

இவ்விதமான ஒத்த கருத்துக்கள் இருந்ததனால்தான் நாஸ்திகத்தை நோக்கி வளர்ந்து சென்ற முளைவிடும் இடதுசாரிகளும், ஆஸ்திகத்தில் மிகத் திடமாக ஊன்றி நின்ற சன்மார்க்க சமய வாதிகளும் ஒரே நிறுவனத்தில் ஒற்றுமையாக அணிதிரண்டு ஒப்பற்ற பல காரியங்களைச் சாதித்தார்கள்.

இவ்விரு சாராருடைய சிந்தனைப்பாங்கில் முரண்பாடுகளும் இருந்தன. ஆனால், அவர்கள் என்றுமே பகைமையணிகளாக மாற்றமடைய வில்லை. முளைவிடும் இடதுசாரிகள் காலப்போக்கில் இடது சாரிகளாக வளர்ச்சியுற்றுத் தனியான அரசியலணியானார்கள். சன்மார்க்கவாதிகளோ தனியான அரசியலணியாக வளர்ச்சியுறவில்லை. அவசியத்தைப் பொறுத்து அரசியலுடன் தொடர்புள்ள சன்மார்க்க அணியாகவே தொடர்ந்தும் இருந்தார்கள். இதனால் அரசியல் நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு கொள்ளத் தொடங்கிய வாலிபர் காங்கிரஸ் காலப்போக்கில் கலைந்து போயிற்று.

மத சார்பற்ற நிறுவனங்களில் செயற்படுவதிலும், அனைத்து மத நம்பிக்கையாளரையும் சமமாக மதிப்பதிலும் விபுலானந்தர் ஈடு இணையற்ற ஒரு துறவியாக இருந்தார். ஆனால், இதன் அர்த்தம் மதக் கோட்பாடுகளிடையே உள்ள பேதத்தை இவர் ஏற்றுக்கொள்ள வில்லை என்பதோ, புரிந்து கொள்ளவில்லை என்பதோவல்ல. இவர் அனைத்து மத தத்துவங்களையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்திருந்தார். அவற்றிடையே உள்ள வேறுபாடுகளை நன்கு புரிந்திருந்தார். மறுபிறப்புத் தத்துவத்தையே இவர் சரியென தேர்ந்தெடுத்திருந்தார். பிறப்பு - வாழ்க்கை - இறப்பு; உடல் - உயிர் - கருமவினை ஆகிய வற்றுக்கிடையே உள்ள தொடர்பை மறுபிறப்புத் தத்துவத்தின் அடிப்படையிலேயே விளக்கினார். இந்த அடிப்படையில் மதங்களுக்குள் உயர்ந்த மதம் இந்து மதம் என்பதே அவரின் கருத்தாக இருந்தது. ஆனால், இதற்காக உலகியல் விவகாரங்களில் இந்து மதத்தவர்கள் தான் எல்லோரையும் விட மேலானவர்கள் என்று இவர் கருதவில்லை. அனைத்துவகை மத நம்பிக்கை உள்ளவர்களும் உலகியல் விவகாரங்களில் சரிசம உரிமையுள்ளவர்கள் என்பதே இவரின் கருத்தாக இருந்தது. மற்றவர்களின் மத நம்பிக்கையைப் புண்படுத்தவோ, தோற்கடிக்கவோ, அவர் என்றுமே முயன்றதில்லை.

*தனது யாழ்ப்பாண வாழ்க்கையின் போது இவர் கிறிஸ்தவ அடிகளார்களுடன் நன்றே ஒத்துழைத்தார். இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் கல்விச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முன்னின்று உழைத்த ஜனாப் ஏ. எம். ஏ அஸீஸ் கூறியதாவது, ''முஸ்லிம் சகாய நிதியை ஆரம்பித்தது, கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபர் பதவியை ஏற்றது போன்ற விடயங்களில் விபுலானந்தருடனான உரையாடல் நல்ல பலனைத் தந்தது'' 1944 ல் கண்டியில் விபுலானந்தர், அஸீஸுடன் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருந்தார். கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தரால் இயக்கப்பட்ட இராமகிருஷ்ண சங்கத்தின் கல்விச் சேவை தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கும் பயன் கொடுத்திருந்தது.*

*சைவமும், வைணவமும் சமணத்துடனும் பௌத்தத்துடனும் சூடான வாதவிவாதங்களில் ஈடுபட்டதும், பலாத்கார நடவடிக்கைகள் நடைபெற்றதும் நாம் அனைவரும் அறிந்த விடயம் (நாயன்மார் காலம் பக்திப் பேரியக்கம்) ஆனால் இந்து துறவியான சுவாமி விபுலானந்தர் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்காக மேடை ஏறி பல அரிய பிரசங்கங்கள் செய்த கதை யாருக்கும் தெரியாது.*

*20ம் நூற்றாண்டின் ஈழத் தமிழ் சித்தர்களில் விபுலானந்தரே சித்தருக்குரிய இலக்கணங்களை அதிகூடியளவு பெற்ற சித்தர் என்று கூறினால் அது மிகையாகாது.*

# வடக்கும் கிழக்கும் விபுலானந்தரும்

*விபுலானந்தரின் செயற்படு களத்தை பிரதேச ரீதியாகவும், துறை சார் ரீதியாகவும், மனித இனக்குழும ரீதியாகவும், சமூக வர்க்க குழுக்கள் ரீதியாகவும், பிரித்துப் பார்ப்பது அவசியமானது. அப்போது தான் விபுலானந்தரை எம்மால் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.*

## பிரதேசரீதியான செயற்படு களம்

*கிழக்கு மாகாணம், யாழ்ப்பாணம், தமிழ்நாட்டின் சில நகர்ப்பகுதிகள் போன்ற இடங்களே விபுலானந்தரின் பிரதான செயற்படு பிரதேசங்களாக இருந்துள்ளன. 1943 இல் இருந்து சுமார் இரு வருடங்கள் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்ததன் மூலம் முழு இலங்கையையும் தனது செயற்படு பிரதேசமாகக் கொண்டிருந்ததைக் காணலாம். அதே போல் 1925 இல் கண்டி, காலி, நாவலப்பிட்டி, மாத்தளை, தொப்பிதோட்டம், பதுளை ஆகிய இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். ஆனால் இங்கு எந்தவித வேலைத்திட்டத்துடனும் அவர் நேரடியாகத் தொடர்புபட்டிருந்ததாகத் தெரியவில்லை. 1937-1941 வரை இமயமலைப் பிரதேசத்தில் தங்கிச் செயற்பட்டுள்ளார். அவர் அங்கும் சாதாரண மக்களுடன் தொடர்புகள் வைத்திருந்துள்ளார். ஆனாலும், அது அவரது செயற்படு பிரதேசமாக இருக்கவில்லை. இராமகிருஷ்ண மடத்தில் அதன் வளர்ச்சி தொடர்பாகவே அங்கு செயற்பட்டுள்ளார்.*

*ஆகவே கிழக்கு மாகாணமும் யாழப்பாணமும், தமிழ் நாட்டின் சில நகர்ப்பகுதிகளும் மாத்திரமே இவரின் நேரடி செயற்படு பிரதேசங்களாக*

இருந்துள்ளன. தமிழரசுக் கட்சியின் காலத்துக்கு முன்பு வரை அதாவது 1940 களின் பிற்பகுதிவரை, விபுலானந்தரைத் தவிர கிழக்கு மாகாணத்தையும், யாழ்ப்பாணத்தையும் தனது நேரடிச் செயற்படு பிரதேசமாகக் கொண்டிருந்த அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள் அரசியல் வாதிகள் வேறு எவருமே இல்லை என்று சொல்வது தவறாக மாட்டாது.

இன்று பலர் விபுலானந்தரை கிழக்கின் அறிஞராகவும், கிழக்கின் நடவடிக்கைகளுடன் மாத்திரம் தொடர்புற்றவராகவும் புரிந்து கொண்டிருப்பது மிகத்தவறானதாகும். யாழ்ப்பாணத்தின் சமூக அரசியல் வரலாற்றின் அடிப்படை அபிவிருத்திகளை ஏற்படுத்திய 1920 கள், ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க தசாப்தமாகும். யாழ்ப்பாணத்தின் சமூக உருவாக்கத்தில் இத்தசாப்தம் மிக முக்கியத்துவமிக்கதாகும். ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்திய இந்த 10 வருடங்களின் கதாநாயகர்களுள் விபுலானந்தரும் ஒருவராவர். மட்டக்களப்பில் பிறந்தார் என்ற காரணத்துக்காக இவரை மட்டக்களப்பிற்குள் பூட்டிவைப்பது முட்டாள்தனமும், வரலாற்று துரோகமுமாகும். இவர் தமிழீழ மக்களின் சொத்து ஆவார்.

## துறைரீதியான செயற்படு களம்

சமூக சீர்திருத்தம், தமிழ்மொழி வளப்பெருக்கம், முத்தமிழ் வளர்ச்சி, மானுட உளச் செழுமை போன்ற துறைகளே விபுலானந்தரின் செயற்படு துறைகளாக இருந்துள்ளன.

### சமூக சீர்திருத்தம்

சமூக சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் இவர் ஒரு புரட்சிகர சமூக சீர்திருத்த வாதி என்று அப்படியே கூறி விடமுடியாது. அவர் வாழ்ந்த காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலாளித்துவ தன்மைபெற்ற பொருளாதாரக் கூறுகள் துரிதமாகத் திணிக்கப்பட்டு வந்தன. பொருளாதார பரிணாமம் (படிமலர்ச்சி) ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரித்தானியர்களே இந்த மாற்றத்தைப் புகுத்தி வந்தார்கள். வெளியில் இருந்தே இந்தத் திணிப்பு மேற்கொள்ளப் பட்டது. விபுலானந்தரோ, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸோ,

இராமகிருஷ்ண சங்கமோ இந்த மாற்றத்தையிட்டு எதுவும் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. அம்மாற்றத்தை ஏற்றுக்கொண்டது போலவே தென்படுகின்றது. இந்த மாற்றத்தின் மூலம் புதியதோர் மத்தியதர வர்க்கம் துரிதமாகத் தோன்றி வளரத் தொடங்கியது. அதாவது, சமூகத்தின் ஒரு மிகக் கணிசமான பகுதியினர் மேல் நோக்கிய சமூக அசைவியக்கத்திற்கு உள்ளாகினார்கள். *(Upward Social mobility)* இம் மேல் நோக்கிய சமூக அசைவியக்கத்துக்கான ஏணியாகச் செயற்படக்கூடிய புதிய பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் பரவலாகத் தோன்றவில்லை. தென் இலங்கையே இதற்கான களமாக இருந்தது. வடக்கு கிழக்குப் பகுதியைப் பொறுத்தவரை கல்விவாய்ப்பொன்றே இதற்கான ஏணியாக இருந்தது. இதனால்தான் 1920 களிலும் 1930 களிலும் வடக்கு கிழக்கில் தோன்றிய சமூக சீர்திருத்த இயக்கங்கள் கல்விச் சீர்திருத்த இயக்கங்களாகவே தம்மை வெளிப்படுத்திக் கொண்டன. கல்விச் சீர்திருத்த இயக்கம் மறைமுகமான அரசியல் பொருளாதார இயக்கமாகவும் இருந்தது. யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதி அடக்கு முறை, கல்வியின் பரவலைத் தடுக்கும் ஒரு பலமிக்க சமூக காரணியாக இருந்ததனால், இக் கல்விச் சீர்திருத்தங்கள் சாதி பேதத்திற்கு எதிராகவும் போர் தொடுத்தன. சம ஆசனம் சம போசனத்தின் சமூக உள்ளடக்கம் இதுதான். இலசவக் கல்வி, தாய்மொழிக் கல்வி, கல்வியை அரசு பொறுப்பெடுக்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளின் சமூக காரணிகளும் இவைதான். ஆகவே விபுலானந்தரின் சமூக சீர்திருத்த நடவடிக்கையும் கல்வி சீர்திருத்தத்தின் ஊடாகவே அமைந்திருந்தது.

கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தர் இராமகிருஷ்ண சங்கத்தின் ஊடாக 38 பள்ளிக்கூடங்களை நிறுவி செயற்படுத்தினார். கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண சங்கத்தின் ஊடாக விபுலானந்தர் முன்னெடுத்துச் சென்ற கல்விச் சீர்திருத்த இயக்கமும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விச் சீர்திருத்த இயக்கமும் ஒரே நோக்கங் கொண்டவையாய் இருந்தாலும், அவற்றின் தன்மை வெவ்வேறானது. கிழக்கிலும் பார்க்க சக்தி பெற்ற நிலவுடமை வர்க்கம் யாழ்ப்பணத்தில் முதலில் பிரித்தானியர்களுடன் ஒட்டிக் கொண்டது. ஆகவே யாழ்ப்பாணக் கல்விச் சீர்திருத்த இயக்கம் காலத்தால் முந்தியது. யாழ்ப்பாண சாதி அமைப்பு மிக இறுக்கமானதாக இருந்ததனால் கல்விச் சீர்திருத்த இயக்கம் அனேக சமூக முரண்பாடுகளை உள்ளடக்கியதாய் இருந்தது. அதிக அரசியல் தன்மை பெற்றதாகவும் இருந்தது.

விபுலானந்தரும், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸும் சமூக நோக்குடைய ஒரு புதிய ஆசிரியர் பரம்பரையையே தோற்றுவித்தனர். 1960 கள் வரை வடக்கு கிழக்கு மாகாணங்களின் அநேக பிரதான பாடசாலைகளின் அதிபர்களாக இருந்தவர்கள் இந்த ஆசிரியர் பரம்பரையினரேயாவார்.

விபுலானந்தர் பின்பற்றிய சமூக சீர்திருத்தம் அன்றைய காலகட்டத்திற்கு அவசியமான அனைத்து சமூக பரிமாணங்களையும் உள்ளடக்கியது என்று கூறமுடியாவிட்டாலும், அவர் தமிழ் பேசும் மக்களுக்கு அவசியமான ஒரு சமூக சீர்திருத்தத்தைப் பின்பற்றினார் என்பதுவும் அது புரட்சிகரமான கூறுகளைக் கொண்டிருந்தது என்பதுவும் மறுக்க முடியாத உண்மைகள்

### தமிழ் மொழி வளப் பெருக்கம்

தாய்மொழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவருதல் சம்பந்தமான இவரது பங்களிப்புக்களும் தமிழ் சொல்லாக்கம் தொடர்பாக இவர் எடுத்த நடவடிக்கைகளும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும். இவரின் இத்துறை ஆர்வத்தால் 1935 ஆம் ஆண்டில் இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தால், தமிழ் ஆராய்ச்சிக் குழுவில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். இவர் சென்னையில் 'கலைச் சொல்லாக்க மன்றம்' ஒன்றை நிறுவினார். சென்னை தமிழ்ச்சங்கத்தின் உதவியுடனேயே இது நடைபெற்றது. இச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். மொழிவளர்ச்சி தொடர்பான இவரின் ஏனைய பங்களிப்புகள் முன்னரேயே கூறப்பட்டுவிட்டன.

### முத்தமிழ் வளர்ச்சி

ஒரு துறவியாகவும், முத்தமிழ் வித்தகராகவும் அறிமுகமாகியுள்ள விபுலானந்தர் இசைத்தமிழினதும், நாடகத் தமிழினதும் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்புக்களைப் பற்றி அநேகமான சகலரும் அறிவர். யாழ்நூலும், மதங்கசூளாமணியும் இவற்றுள் வரலாற்றால் அழியாதவை. ஆகவே இதுபற்றி இங்கு விபரம் கூறுவதைத் தவிர்த்துக் கொள்கிறேன். விபுலானந்தரை முத்தமிழ் வித்தகர் என்ற பரிமாணத்துள் மட்டும் வைத்துப் பார்க்கும் தன்மையைக் களைந்து விடுதல் அவசியம். இவ்விதமாக நோக்கும் தன்மையால் அவர் தரம் இறக்கலுக்கு

உள்ளாகிறார். ஆகவே அவரை முழுமையாக இனங்கண்டு கொள்ளக் கூடியதான ஆய்வுகள் தொடரட்டும்.

**மானுட உளச் செழுமை**

விபுலானந்தர் ஈடுபாடு காட்டிய அனைத்து துறைகளிலும் இதுவே அடிப்படை முக்கியத்துவம் பெற்ற துறையாகும். ஒருவன் தனது உளச் செழுமையை உத்தரவாதப்படுத்திக் கொள்ளாமல் பிறரின் உளச் செழுமைக்கு முயற்சிக்க முடியாது. விபுலானந்தரை அளப்பரிய சக்தியும், நிபந்தனையில்லா அர்ப்பணிப்பும் மிக்க திறமைசாலியாகவும், தியாகியாகவும் மாற்றியது இந்த உளச் செழுமையேதான். பின்பற்றுவோர் (Followers) இல்லையானால் எந்த மனிதனாலும் அளப்பரிய காரியங்களைச் செய்யமுடியாது. ஒரு சமூக இயக்கத்தின் கேந்திரமாக தன்னை ஆக்கிக்கொள்ளமுடியாது. விபுலானந்தரின் உளச் செழுமைக் கொள்கையே அவருக்குப் பல அருமையான பின்பற்றுவோர்களையும், செயற்படு சகாக்களையும் உருவாக்கிக் கொடுத்தது. சன்மார்க்க நெறியே இவரின் மானுட உளச் செழுமைக் கோட்பாடாகும். இசைத் தமிழிலும், நாடகத் தமிழிலும் இவர் காட்டிய ஆர்வமும், இவர் ஈட்டிய சாதனைகளும் கூட இவரின் உளச் செழுமையின் வெளிப்பாடுகளேயாகும். இசையும் நாடகமும் முருகியல் (அழகியல்) அம்சங்கள் நிறையப் பெற்ற துறைகளாகும். இதன் முருகியல் தன்மைதான் இவற்றை இயற்றமிழில் இருந்து வேறுபடுத்தி வைத்துள்ளது என்றுகூடச் சொல்லலாம். உளச் செழுமையற்றவனால் முருகியலைச் சுவைக்கவும், இரசிக்கவும் முடியாது. அதே போல் முருகியலைச் சுவைக்கவும், இரசிக்கவும் பழகிக்கொள்பவனுக்கே உளச் செழுமையும் ஏற்படும். விபுலானந்தர் இசைத் தமிழிலும், நாடகத் தமிழிலும் மாத்திரமல்ல அழகியல் வெளிப்பாடுகள் மிகுந்த சிற்பக் கலையிலும். ஓவியக் கலையிலுங்கூட ஆர்வமுடையவராய் இருந்துள்ளார்.

1936 பெப்ரவரி 28 இல் இவர் ''பழந்தமிழகத்தின் சிற்பாசிரியர்கள்'' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவைச் செய்தார். ''பாழுங் கல்வியில், கிடந்த அழகுடைப் பொருளை அனுபவிப்பதோடு அமையாது பிதற்றித் திரியுமாறு ஏவுகிறது'' என விபுலானந்தர் தமக்கு முருகியற் கலைகள் மீது இருந்த ஆர்வத்தைத் தாமாகவே வெளியிட்டுள்ளமையைக் காணலாம்.

இவையே இவரின் நாட்டத்துக்குரிய நான்கு பெருந் துறைகளாக இருந்துள்ளன. இவர் எந்தக் கட்டத்திலும் அரசியலையோ, சமூக பொருளாதார மாற்றத்தையோ ஒரு தனித் துறையாகத் தேர்ந்தெடுத்தவரல்ல. அத்துறைகளில் நேரடியாக ஈடுபடுவதில் இருந்து விலகியே வந்துள்ளார். ஆனால் இவரின் நடவடிக்கைகள் அரசியல் தன்மையற்றதாகவோ, சமூக பொருளாதாரத் தன்மையற்றதாகவோ இருந்தது என்று இதை அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது.

தமிழ் மொழி வளப்பெருக்கம், முத்தமிழ் வளர்ச்சி ஆகிய துறைகளில் இவர் பெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றிகளுக்கு இவரின் அரசியல் ஈடுபாடற்றதன்மைதான் காரணமாக அமைந்ததா என்பது ஆய்வுக்குரிய ஒரு விடயமாகும். ஏனெனில் இத்துறைகள் அரசியலுக்கு அப்பாற்பட்ட விடயங்கள். அரசியல் நம்பிக்கைகளினதும் கட்சி பக்கச் சார்பினதும் பிடிகளுள் இத்துறைகள் எக்காரணத்தைக் கொண்டும் அகப்பட்டுவிடக்கூடாது. அகப்படுமானால் இத்துறைகளின் வளர்ச்சி பாதிப்படைவது திண்ணம்.

ஆனால் கல்விச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இதன் சில அம்சங்கள் நேரடியாகவே அரசியலுடன் தொடர்புபட்டதாகும். சிலவகை அரசியல் நம்பிக்கைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகும். இது நிச்சயமாக முழுக்க முழுக்க ஒரு அரசியல் விவகாரமல்ல. ஆனால் அதே நேரத்தில் இது அரசியலுடன் தொடர்பற்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட, ஒரு விடயமுமல்ல. விபுலானந்தரை அடிக்கடி அரசியலுடன் தொடர்புபட வைத்தது இந்த நடவடிக்கையேயாகும். தமிழீழத்தில் கருக்கொள்ள ஆரம்பித்திருக்கும் கல்விச் சீர்திருத்த, தமிழ் மொழி வளர்ப்பு இயக்கங்கள், விபுலானந்தரும் - யாழ்ப்பாண காங்கிரஸும், விபுலானந்தரும் - இராமகிருஷ்ண மடமும் கால அனுபவங்களை மீள ஆராய்வது மிக அவசியமானது.

## மனித குழும ரீதியான செயற்பாடுகள்

இனம், மதம், மொழி, பால்பிரிவுகள், சாதி என பல்வேறு குழுமங்களாக மனிதன் பிரிந்து முரண்பட்டு நிற்கின்றான். மானுடம் பிளவுண்டு கிடக்கின்றது. இவற்றில் சில தவிர்க்க முடியாதவை. இயல்பானவை. உதாரணமாக பால்பிரிவுகளைக் கூறலாம். ஆனால்

*இனம், மொழி, மதம் போன்ற பிரிவுகள் அவசியமில்லாதவை. மனித சமுகத்தின் நலத்திற்குக் குந்தகமானவை. எப்பிரிவும் மனிதனைப் பிரித்து முரண்பட்டு நிற்கவைப்பதுவும், மானுடத்தைப் பிளந்து நிற்பதுவும் அவசியமில்லாதது. சமூக நலத்திற்குக் குந்தகமானது. மானுடத்திற்கு விரோதமானது.*

*சன்மார்க்க நெறியரான விபுலானந்தர் இவ்விடயத்தில் எந்தக் களத்தைத் தேர்ந்தெடுத்தார் என அவதானிக்க வேண்டியது அவசியமானது. இங்கு அவர் இரு பரிமாணங்களில் செயற்பட்டுள்ளார். முதலாவது மனிதன் அல்லது மானுடம் என்ற பரிமாணம், இரண்டாவது தமிழன் என்ற பரிமாணம். மனிதன் அல்லது மானுடம் என்ற பரிமாணந்தான் அவரை 20 ஆம் நூற்றாண்டின் இலங்கைச் சித்தராக்கியது. உண்மையான சன்மார்க்கவாதியாக்கியது. அவர் பிறமதங்களை மதித்தார். அவற்றின் சாதனைகளை ஏற்றுக் கொண்டார். பிற மொழிகளை கௌரவித்தார். அவற்றின் பலம், பலவீனங்களை ஆராய்ந்தார். அவற்றில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவைகளை எடுத்துக் காட்டினார். வேற்று மொழி இலக்கியங்களைச் சுவைத்தார். ஆங்கில மொழி இலக்கியங்கள் பற்றிய தனது கட்டுரைக்கு 'ஆங்கில வாணி' என நாமஞ்சூட்டினார். அந்நிய மொழி இலக்கியங்களை தன் தாய்மொழிக்கு அறிமுகப்படுத்தினார். மொழிகளுக்கும், நாகரிகங்களுக்கும் இடையே உள்ள உறவை எடுத்துக் காட்டினர். இவை பரஸ்பரம் ஒன்றில் ஒன்று சார்ந்திருப்பதையும், ஒன்றில் இருந்து மற்றொன்று கற்றுக் கொள்வதையும் அல்லது களவாடிக் கொள்வதையும் எடுத்துக் காட்டினார். நாகரிகத்தைப் படைத்த உலக மொழிகளுள் தமிழ் மொழியே முதலாவது மொழி என்பதை பல ஆதாரங்களுடன் முன்னுக்குப்பின் முரணற்ற முறையில் நிரூபித்தார். இந்த உண்மையை மிக அடக்கமாக ஆனால் உறுதியாக முன்வைத்தார். தம்பட்டமடிக்கவோ ஏனைய மொழிகளைக் குறைத்து மதிப்பிடவோ இல்லை. இவ்வாறாக மனித சமூகத்தில் இயல்பாக எழுந்த பேதங்களை ஏற்றுக்கொண்டார். அப்பேதங்களை அல்லது வேறுபாடுகளைப் புரிந்து கொண்டார். அவற்றில் எவை சரியானவை, எவை தவறானவை, எவை முழுநிறைவானவை, எவை குறைபாடுடையவை என்பன தொடர்பாக அவருக்குச் சிற்சில கண்ணோட்டங்களும் இருந்தன இவரின் கண்ணோட்டங்கள் அறிவியல் முடிவுகள் தொடர்புபட்ட விவகாரங்களாகும். அறிவியல் ரீதியில் இவற்றின் சரியான தன்மைகள் இன்னும் இன்னும் பரிசோதிக்கப்படும். அனைத்தையும் சரி என்று உலகம் ஏகமனதாக ஒத்துக் கொள்ளமாட்டாது. ஆனால் அவதானிக்க*

வேண்டியது என்னவென்றால், இவ்வித கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொண்டது மாத்திரமல்லாது அதனை வெளிப்படுத்தியும் வந்த விபுலானந்தர், இயல்பான வேறுபாடுடைய பிரிவுகள் அனைத்தையும் சமமாகவே மதித்தார். இதில் அவர் உயர்வு தாழ்வு பார்க்கவில்லை. யார் பெரியோர் யார் சிறியோர் என்ற வாக்கு வாதத்தில் ஈடுபடவில்லை. இதுதான் உண்மையான சன்மார்க்கமாகும். இதுதான் ''எல்லோரும் இன்புற்று இருப்பதல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே'' என்ற கொள்கையாகும். இதுதான் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பதாகும். இதுதான் 'அன்பே சிவம்' என்பதாகும்.

விபுலானந்தர் ஒரு தமிழன்; விபுலானந்தர் ஒரு இலங்கையன்; விபுலானந்தர் ஒரு இந்து; இவை எல்லாம் அவருக்கு மிக மிக நன்றாகவே தெரியும். அதே நேரத்தில் விபுலானந்தர் ஒரு மனிதர் என்பதும் அவருக்கு நன்றாகவே தெரியும். அதுவே அடிப்படையானதும் நித்தியமானதும் என்பதும் அவருக்கு நன்றாகவே தெரியும். ஆகவே இந்த அடிப்டை நிலையிலான ஒற்றுமையை ஆர்வமுடன் வேண்டி நின்றார்.

''கன்ம வினைகள் தீரும்வரை மனிதன் மீண்டும் மீண்டும் மறுபிறப்பெடுப்பான்'', ''ஆன்மா நித்தியமானது, சாவது உடலே தவிர ஆன்மா வல்ல'' என்ற வகையான மதக்கோட்பாட்டின் அடிப்படையில்தான் இவரது சன்மார்க்க நெறி அமைந்திருந்தது. இந்தக் கோணத்தில் இருந்து தான் அவர் மானுடத்தை நேசித்தார். இவரின் அணுகுமுறையுடன் அல்லது இவர் பின்பற்றிய கோட்பாட்டுடன் முரண்படுபவர்கள் இருந்தார்கள். இருக்கிறார்கள். இனியும் இருப்பார்கள். ஆனால் அவர் வந்து சேர்ந்த ''மானுடம் பிளவுபடக்கூடாது'' என்ற உயர்ந்த, தொலைதூர அவாவுடன், இலட்சியத்துடன் வெளிப்படையாகவே முரண்படும் 'மனிதன்' எவனும் இருக்கமாட்டான் என்றே எண்ணுகிறேன்.

மனித சமூகத்தின் இயல்பான வேறுபாடுகளை ஏற்றுக் கொண்ட விபுலானந்தர், அதே நேரத்தில் மனித சமூக இயல்புகளுக்குப் புறம்பான வேறுபாடுகளை வெறுத்தார். இவ்வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ள மறுத்தார். சாதி வேறுபாடுகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை நிராகரித்தார். அதன் மீதான தனது வெறுப்பை வெளிப்படையாகவே காட்டிக் கொண்டார்.

## *தமிழன் என்ற பரிமாணம்*

*விபுலானந்தர், தான் மானிடத்தின் அங்கமாய் இருக்கும் அதேவேளையில், தான் ஒரு தமிழன் என்பதையும் உணர்ந்திருந்தார். தான் வாழும் ஸ்தூலமான (Concrete) மனித சமூகப் பிரிவை மறுக்கும் அல்லது மறக்கும் ஒரு மனிதராக அவர் வாழவில்லை. 'மனிதம்' என்ற எல்லைக்குள் நின்ற வண்ணம் தான் ஒரு தமிழன் என்பதை அவர் நன்றாக உணர்ந்திருந்தார். தமிழன் என்ற இன மொழி வழக்குழுமத்தின் வளர்ச்சிக்காக அவர் சளைக்காது உழைத்து வந்தார்.*

*நாம் இங்கு மிக அழுத்தங் கொடுத்துக் கவனிக்க வேண்டிய ஒரு அரசியல் விவகாரம் உண்டு. தமிழ் இனத்தின் வளர்ச்சியைத்தான் அவர் மனதில் கொண்டிருந்தாரே தவிர தமிழ் தேசியத்தின் வளர்ச்சி பற்றியோ சிறுபான்மை தேசிய இனத்தின் வளர்ச்சி பற்றியோ அவர் கவனமெடுக்கவில்லை.*

*தேச எல்லைகளைக் கடந்து அதைக் கணக்கில் எடுக்காமல் எங்கும் பரந்திருக்கும் அனைத்து தமிழ் மக்களினதும் முழுமையே தமிழ் இனம் என்ற எண்ணக்கருவாகும். இலங்கைத் தமிழர்கள், தமிழ் நாட்டுத் தமிழர்கள், கர்நாடக மாநில தமிழர்கள், மலேசிய தமிழர்கள், உலகில் ஏனைய நாடுகளில் நிரந்தர பிரஜைகளாக வாழும் தமிழர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியதே ''தமிழ்இனம்'' என்ற எண்ணக்கருவாகும். அவர்கள் வாழும் நாடுகளின் தேசிய எல்லைகளுக்குள் வைத்துக் கொண்டு நோக்கினால் அவர்கள் அவ்வவ் நாடுகளின் தேசிய இனங்கள் எனப்படுவர். தமிழ் இனம் என்ற முறையில் இவர்கள் எல்லோருக்கும் சில பொதுவான நலன்கள் உண்டு. ஆனால் தமிழர்கள், வெவ்வேறு நாடுகளின் தேசிய இனங்கள் என்ற முறையில் ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனித்தனியான நலன்கள் உண்டு. அமெரிக்கர்களும் பிரித்தானியர்களும் ஒரே இனத்தினர்; ஆங்கிலேயர். அதேவேளை அமெரிக்கரும் பிரித்தானியரும் இரு வெவ்வேறு தேசியங்கள். தேசிய எல்லைகளுக்குள் வைத்து நோக்குதலே தேசியம் என்ற எண்ணக்கரு என அழைக்கப்படுகிறது.*

*19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இலங்கைத் தேசியம் என்ற எண்ணக்கரு உருவாகியிருந்தது. இதன் விளைவுதான் சேர் பொன்*

*இராமநாதனின் தலைமையில் அமைக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கமாகும். ஆனால் 1930 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதி வரை இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தமது தேசிய அந்தஸ்துப் பற்றிய பிரச்சினை எழவேயில்லை. இலங்கைத் தேசிய உணர்வே இலங்கைத் தமிழர்களின் தேசிய உணர்வாகவும் இருந்தது. தமிழர்களின் அன்றைய கால கட்ட இந்தப் பொதுவான எண்ணக்கருவிற்கு விபுலானந்தர் விதிவிலக்கல்லவே. விபுலானந்தரினதும் அவரைப் பின்பற்றியோரினதும் இலங்கைத் தேசிய வாதம், நாம் ஏற்கனவே கவனித்தபடி புரட்சிகரமானதாக இருந்தது உண்மை. ஆனால், அது தமிழ் தேசியத்தை கணக்கெடுக்காது விட்டமை ஒரு வரலாற்றுச் சோகம்தான். 1940 களில் இலங்கைத் தமிழ் தேசிய வாதம் மெதுவாக முளைவிடத் தொடங்கியிருந்தது. ஆனால் விபுலானந்தர் இத் தேசியவாத எண்ணக்கருவை வெளிப்படுத்தியதற்கான சான்றுகள் இதுவரை வெளிப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் ஒரு கள ஆய்வை மேற் கொள்வதன் மூலமே இது பற்றி மேலும் தெளிவு பெற முடியும்.*

*விபுலானந்தரும் அவரைப் பின்பற்றியோர்களும் இலங்கைத் தமிழர் மத்தியில் தமிழ் இனத்தின் வளர்ச்சிக்காகவென ஆற்றிய சேவைகள் இலங்கைத் தமிழ் தேசியத்தின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது என்பது உண்மை.*

# முடிவுரை

*1920 ஆம் ஆண்டுகளின் மூன்றாமணியினரின் அரசியலின் பிற்காலம் என்னவாயிற்று?*

*1920 களில் பிரித்தானிய காலனி ஆட்சியை ஏற்றுக்கொண்டு அதனுடன் ஒத்துழைத்த கிறிஸ்தவ மிஷனரிகளை 1 ஆம் அணியினர் எனவும், பிரித்தானிய காலனிய ஆட்சியை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் உள்ளூர் விவகாரங்களில் நிலமானிய உறவுகளைப் பாதுகாக்கும் நோக்குடன் செயற்பட்ட இராமநாதன் அணியினரை 2 ஆம் அணியினர் எனவும், பிரித்தானிய காலனிய ஆட்சி முறையுடன் முரண்படும் அதேவேளையில், உள்ளூர் விவகாரங்களில் நிலமானிய பண்பாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பி புரட்சிகர சமூக சீர்திருத்தத்தை வேண்டி நின்றோரை 3 ஆவது அணியினர் எனவும், முன்னைய அத்தியாயங்களில் வகைப்படுத்தியிருந்தோம். 1920 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும், 1930 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலும் இந்த மூன்றாவது அணியினரே அதிக சமூக பலம் பெற்றவர்களாக விளங்கினார்கள். அவ்வாண்டுகளின் போது யாழ்ப்பாண வரலாறு என்பது அவர்களின் வரலாறாகவே இருந்தது.*

*இதன் எதிர்காலம் என்னவானது? விபுலானந்தரினதும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸினதும் சமூக அபிலாசைகள் நிறைவேறினவா?*

*இவர்களின் சமூக அபிலாசைகளை முதலில் அட்டவணைப் படுத்துவோம்.*

1. *கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்பு*
2. *தீண்டாமை ஒழிப்பு*
3. *தாய்மொழிக் கல்வி*

4. ஆன்மீக நெறியுடன் இணைந்த கல்வி
5. கல்விக்கூடங்கள் அரசுடமையாதல்
6. மூடப் பழக்கவழக்கங்கள் இல்லாது போதல்
7. தேச நலன் பேணக்கூடிய கல்வி
8. மத வேறுபாடுகளை கணக்கில் கொள்ளாது மக்கள் ஐக்கியமுறல்
9. இலங்கைக்கு முழுமையான சுயராஜ்யம்

போன்றவையே இவர்களின் பிரதான அபிலாசைகளாகும். 1930 களின் முற்பகுதியிலேயே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் படிப்படியாகக் கலைந்துவிட்டது. இக் காங்கிரஸால் தோற்கடிக்கப்பட்ட பொன். இராமநாதன் அணி மீண்டும் தலைதூக்கி ஜீ. ஜீ பொன்னம்பலம் தலைமையில் அ. இ. தமிழ் காங்கிரஸாக வளர்ந்தது. சிங்களத் தலைவர்களுக்குப் பணிந்தும் பிரித்தானியருடன் இணைந்தும் போகும் ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. இதுவே ஜீ.ஜீ யின் தமிழ்த் தேசியமாக இருந்தது. அதே நேரத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் பெரும் பகுதியினர் இடது சாரி இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டார்கள். இவர்கள் தீண்டாமைக்கு எதிராகவும், பாடசாலைகள் அரசுடமையாக்கப்படக் கோரியும் போராடினார்கள். பிரித்தானியருக்கு எதிரான போராளிகளாகவும் திகழ்ந்தார்கள்.

சாதி அமைப்பையும், பிரித்தானியர் ஆட்சியையும் பாதுகாக்க போராடிய பொன்னம்பலம் அணியினருக்கும் இடது சாரி அணியினருக்கும் இடையேயான முரண்பாடே 1940 கள் வரை யாழ்ப்பாணத்தின் பிரதான அரசியலாக இருந்தது. இந்த முரண்பாட்டில் விபுலானந்தரால் எந்தப் பக்கமும் நிற்க முடியவில்லை. இடதுசாரிகள் தமிழரின் அரசியல் உரிமை சம்பந்தப்பட்ட விடயங்களிலும் கவனம் செலுத்தினார்கள். ஆனாலும் தமிழரின் வளர்ச்சி சம்பந்தபட்ட ஏனைய விவகாரங்களில் அக்கறை காட்டவில்லை. முளைவிடும் இடது சாரிகளுடன் ஒன்றிணைந்திருக்கக் கூடியதாய் இருந்த விபுலானந்தரால் இடதுசாரி இயக்கங்களுடன் இணைவைக் காணமுடியவில்லை. மதம், கடவுள் ஆகியன சம்பந்தப்பட்ட முரண்பட்ட நிலைப்பாடுகள், தமிழரின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இடதுசாரிகளின் மிகக் குறைந்த ஈடுபாடு ஆகியவை இதற்கான காரணங்களாக இருக்கலாம்.

1960 களின் பிற்பகுதியுடன் இடதுசாரி கட்சிகள் யாழ்ப்பாணத்தில் பலவீனப்பட்டு அழிந்துபோகத் தொடங்குகின்றன. தீண்டாமை ஒழிப்பிலும், பாடசாலைகள் தேசியமயத்திலும், மூடப்

பழக்கவழக்கங்களை எதிர்த்த போராட்டத்திலும் இடதுசாரிகள் அளப்பரிய பங்காற்றினார்கள். ஆனால் இது தொடர்பாக அவர்கள் இழைத்த பல தவறுகள், சாதிப் பாகுபாடு இன்னமும் முற்றாக ஒழிக்கப்படாமல் இருப்பதற்கான காரணிகளில் சிலவாக இருக்கின்றன. அவர்கள் இழைத்த பெருந்தவறு, ஒடுக்கப்பட்ட சாதி மக்களை தமிழ் தேசிய இயக்கங்களில் இருந்து ஒதுக்கி வைத்ததேயாகும். 50 ஆம் ஆண்டுகளின் பின் இடதுசாரி கட்சிகள் ஏதோ ஒரு வழியில் சிங்கள பேரினவாதத்துடன் நட்புறவு கொண்டிருந்தார்கள். இதனால் 50 ஆம் ஆண்டுகளின் பின்பிருந்து, தெரிந்தோ தெரியாமலோ தமிழ் தேசிய இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதே அவர்களின் அரசியல் தந்திரோபாயமாய் இருந்து வந்தது. இதன் விளைவாக 80 ஆம் ஆண்டுகள் வரை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், தமிழ் தேசிய இயக்கத்துக்கும் இடையில் முரண்பாடு நிலவியே வந்தது. இந்த முரண்பாடு சாதி பேதம் அற்றுப் போவதற்கு தடையாக இருந்தது மாத்திரமல்ல சாதி பேதத்தை வளர்க்க உதவும் அரசியல் காரணியாகவும் இருந்தது.

80 ஆம் ஆண்டுகள் வரையான தமிழ் தேசிய இயக்கமும் கூட சாதி அமைப்பு முறைக்கு மறைமுகமாகவும் சிற்சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவும் துணை போய்க்கொண்டேயிருந்தது. இது முன்சொன்ன போக்கை மேலும் ஆழப்படுத்தியது. 80 ஆம் ஆண்டுகளின் முற்கூறில் இருந்து நிலமையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. சாதி, மத பேதமின்றி அனைத்து தமிழ் பேசும் மக்களையும் ஐக்கியப்படுத்தும் புதிய போர்க்குணமிக்க தமிழ் தேசிய இயக்கம் தோற்றம் பெறத் தொடங்கியதே இதற்கான காரணமாகும்.

பாடசாலைகளைத் தேசியமயமாக்கும் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. ஆனால் 20 ஆம் ஆண்டுகளின் மூன்றாம் அணியினரின் நோக்கம் இங்கு வெற்றி பெறவில்லை. எமது அரசாங்கத்தின் ஊடாக நாம் எமது பாடசாலைகளை நிருவகிக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கத்தின் சாராம்சமாக இருந்தது. அதன் மூலமே எமது தேசநலனுக்குப் பொருந்திய கல்வியை உருவாக்கலாம் என்றே இவர்கள் கருதினார்கள். ஆனால் நடந்ததோ வேறுவிடயம். சிங்கள பேரினவாத அரசு தமிழ் பள்ளிக்கூடங்களை தன்வசம் எடுத்துக்கொண்டது. இதன் மூலம் எமது தேசியத்துக்கு எதிரான கல்வித் திட்டத்தையே எம்மீது திணித்துள்ளது. ஆகவே மூன்றாவது அணியினரின் அபிலாசைகள் இன்னமும் நிறைவு

*பெறவில்லை. பாடசாலைகளை மீளவும் தமிழர்வசம் எடுக்கும் முயற்சி 80 களின் முற்கூறில் இருந்துதான் படிப்படியாக மீண்டும் முளைவிடத் தொடங்கியுள்ளது.*

*கல்வியில் சமவாய்ப்பு என்பது 60 களில் ஓரளவு வெற்றியீட்டப்பட்டு தற்போது சமவாய்ப்பு இன்மை என்ற நிலை மீண்டும் தோன்றி விட்டது. ஆனால் அது தன்மையில் வேறுபட்டதாகவுள்ளது. இன்று சிங்கள மாணாக்கர்களுக்கு உள்ள வாய்ப்புகள் தமிழ் மாணவர்களுக்கு இல்லை என்ற நிலை தோன்றியுள்ளது. சாதிப் பிரச்சினையாய் இருந்த சம வாய்ப்பின்மை ஒரு தேசிய இனப் பிரச்சினையாக மாறியுள்ளது. எமது நாட்டுக்கு (இலங்கைக்கு) முழுமையான சுயராஜ்யம் என்ற அபிலாசையும் இன்னமும் வெற்றி பெறவில்லை. இவ்வபிலாசை புதிய வடிவு பெற்றுள்ளது. தமிழீழத்திற்கு சுயராஜ்யம் என்ற கோரிக்கையாக பரிணமித்துள்ளது.*

*தாய்மொழிக் கல்வி என்ற விடயத்தில் கணிசமான முன்னேற்றங்களும், வெற்றிகளும் கிடைத்துள்ளன. ஆனால் கல்வி மொழி அந்தஸ்துப் பெற்று விட்ட தமிழ்மொழி, பிறமொழிச் சொற்களின் கலப்பாலும், வளமான கலைச் சொற்பதங்கள் இன்மையாலும் செல்லரித்துப் போய் நிற்கும் நிலைகண்டு தமிழீழ தேசியம் விழித்துக் கொண்டது. 1990 ஆம் ஆண்டில், தமிழ் மொழி சீர்திருத்தப்படவேண்டும்; அந்நிய மொழிச் சொற்களைப் பயன்படுத்துதல் மீள் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்; தூய தமிழ் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும் போன்ற அபிலாசைகள் தமிழீழ தேசியத்தின் குணவியல்புகளாயின. ஆனால் 1930 களுக்கும் 1990 க்கும் இடைப்பட்ட காலத்தில் (சுமார் 60 வருடங்கள்) தமிழ் மொழி வளர்ச்சி என்பது, அரசியல் கருவியாக பயன்படுத்தப்பட்டதே தவிர எந்தத் தமிழ் தலைவர்களும் தமிழ் மொழி வளர்ச்சி பற்றி எதுவித அக்கறையும் செலுத்தவில்லை. படித்த தமிழர்கள் ஆங்கில மோகம் கொண்டவர்களாகவே இருந்தார்கள்.*

*ஆன்மீக நெறியுடன் இணைந்த கல்வி, தேசநலன் பேணக்கூடிய கல்வி, ஆகியவற்றைப் பொறுத்தவரை மிக வேதனைக்குரிய சம்பவங்களே நடைபெற்றன. கல்வியின் இந்த உயர் நோக்கம் இழக்கப்பட்டுவிட்டது. கல்வி என்பது கற்பவனுக்கும் சரி, கற்பிப்பவனுக்கும் சரி வர்த்தக பண்டமாக மாறிவிட்டது. பணம் சம்பாதிக்க கற்பிப்பது, பணம் சம்பாதிக்க கற்பது என்ற நிலை தோன்றி விட்டது.*

ஆனால், 1980 களில் இருந்து வளர்ந்துவரும் தமிழீழ தேசியம் இத்துறையிலும் புதிய சிந்தனைகளை உருவாக்கியுள்ளது. ஆன்மீக நெறியுடன் இணைந்த கல்விபற்றி இத்தேசிய வாதம் தனது அக்கறையை செலுத்தவில்லை. ஆனால் தேச நலன் பேணக்கூடிய கல்வி என்ற விடயத்தில் மிகவும் ஆர்வமுள்ளதாயும், தீவிர மாற்றங்களை ஏற்படுத்த அவாவி நிற்பதாயும் இருக்கின்றது.

தமிழ்மொழி வளர்ச்சி, சமூக சீர்திருத்தம். அரசியல் உரிமைக்கான போராட்டம், கல்விச் சீர்திருத்தம் ஆகியனவற்றை நோக்கும்போது 1920 களின் பொதுவான தன்மை 1980 களில் மீளவும் உயிர் பெற்றுள்ளது எனக் கூறுலாம். 1920 களின் பின் 1960 கள் வரை யாழ்ப்பாணம் பல போராட்டங்களை கொண்டிருந்தது உண்மைதான். ஆனால் அவை மிகக்குறுகிய சமூகப் பரிமாணம் உடையனவாகவே இருந்துள்ளன. இடதுசாரிகளின் தலைமையில் நடத்தப்பட்ட வீரஞ்செறிந்த தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்கள், ஏனைய சமூக, இன பரிமாணங்களை புறக்கணித்ததாகவே இருந்தது. அதேபோல் தமிழரசுக் கட்சியின் தலைமையில் நடத்தப்பட்ட தமிழ் மொழியின் அரசியல் உரிமைக்கான போராட்டம், போலித்தனம் பெற்றிருந்ததுடன் ஏனைய சமூக, இன பரிமாணங்களை புறக்கணித்ததாகவுமே இருந்தது. இவைகூட அறுபதுகளுடன் ஓய்ந்துபோய் விட்டன.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் சகாப்தமான 1920 களையும் 1980 களின் பின்பான இன்றைய தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஒப்பிடுவது, அவை இரண்டும் ஒன்றிற்கு ஒன்று சமம் என்பதற்காகவல்ல. ஒன்றை ஒன்று ஒத்தது என்பதற்காகவும் அல்ல. 1980 இன் பின்பான தேசிய விடுதலைப் போராட்டம் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தசாப்தத்தையும் விட சமூக பலத்திலும் சமூக அரசியல் குணாம்சத்திலும் வளர்ச்சி பெற்றதொன்றாகும்.

ஆனால், யாழ் சமூக உருவாக்கத்திற்கு அவசியமான பல்வேறு சமூக, அரசியல் பரிமாணங்களையும் உள்ளடக்கிய சமூக இயக்கம் என்ற முறையிலேயே இவை இரண்டும் ஒப்பிடப்படுகின்றன. இவ்விதமான ஒரு தசாப்தத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு முக்கிய பங்காற்றிய உயர் திரு விபுலானந்தரின் நூறாவது நினைவாண்டு தமிழீழ விடுதலைப் போராட்ட சகாப்தத்தில் அமையப்பெற்றது பெருமைக்குரிய தொன்றேயாகும். விபுலானந்தர் இன்று உயிரோடு இருந்திருந்தால் இச் சகாப்தத்தின் சிற்பிகளைக்கண்டு நிச்சயமாக

பெருமைப்பட்டிருப்பார்.

வரலாறு எப்போதும் அலை அலையாகத்தான் முன்னேறும். ஒரு பெரும் எழுச்சி அலைதோன்றும். அது பெரும் சாதனைகளைப் புரியும். பின்னர் ஒரு தற்காலிக பின்னடைவு. மீளவும் ஓர் எழுச்சி அலை. அது முன்னையதைவிட சக்தி மிக்கதாய் அமையும். அது இன்னும் பெரும் பெரும் சாதனைகளை சாதிக்கும். மீளவும் ஒரு பின்னடைவு. மீளவும் ஒரு எழுச்சி அலை. இவ்விதமே தனது இறுதி வெற்றி வரை வரலாறு முன்னேறும்.

இவ் வரலாற்று நியதிக்கிணங்க இறுதி வெற்றிவரை நாமும் சளையாது போராடி முன்னேறுவோம். இதுவே மறைந்த பெரியார்களுக்கும், தியாக சீலர்களுக்கும், மகான்களுக்கும் நாம் செய்யும் வரலாற்று நன்றிக்கடனாகும்.

# பிற்குறிப்புக்கள்

1. மலேரியாசுர தடுப்பியக்கம்: 1ம் உலக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பிரித்தானியர் இலங்கையின் உள்நாட்டு சிவில் விவகாரங்களில் எதுவித கவனமும் செலுத்தவில்லை. சுகாதார சேவை மிகவும் சீர்கெட்டு இருந்தது. இதனால் மிக நீண்ட காலமாகவே இலங்கையில் பரவிக்கிடந்த மலேரியாசுரம் 1920களில் மிக உக்கிரமான பாதிப்புகளை ஏற்படுத்தி வந்தது. இதனால் இலங்கை எங்கணும் மலேரியா சுர எதிர்ப்பு மக்கள் இயக்கங்கள் தோற்றம் பெற்று வளர்ந்து வந்தன. பிரித்தானிய ஆட்சிக்கு எதிரானவர்களும் இடதுசாரி கருத்தோட்டமுள்ளவர்களுமே இதில் பிரதான பங்குவகித்தார்கள்.
2. சூரியமல இயக்கம்: இரண்டாம் உலகப்போரில் மரணமடைந்த பிரித்தானிய சிப்பாய்களை நினைவுகூரும் முகமாக பிரித்தானியர் இலங்கையில் பொப்மலர் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பொப்மலர்களால் நினைவு ஸ்தூபிக்கு அஞ்சலி செய்தலே இதன் நடைமுறையாக இருந்தது. இலங்கையின் இடதுசாரிகள் இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். பொப்மலர் அஞ்சலியை நிராகரித்தார்கள். அதைக் கிண்டல் செய்தார்கள். இது ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக இருந்தது. இதை இடது சாரி இயக்கங்களின் தொட்டில் என்றும் கூறுவார்கள்.
3. ‘கீழைத்தேய கல்வியற் சிந்தனைகள்’, என். கே. தர்மலிங்கம் என்.ஏ., பக்கம் 157.
4. அதே நூல், பக்கம் 154.

# உசாத்துணை நூல்கள்

*1. 'கீழைத்தேய கல்வியற் சிந்தனைகள்', என். கே. தர்மலிங்கம் என்.ஏ.*
*2. 'சாதியமும் அதற்கெதிரான போராட்டமும்' வெகுஜனன் - இராவணா*

‘‘இந்நூல் வெளிக்கொணரப்பட்ட காலப்பகுதியில் அந்நிய நேரடி இராணுவத் தலையீட்டை எதிர்கொள்வதின் போதான பேரிழப்புகளின் பின்னால், தமிழீழ அரசு மீளவும் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. அந்நிய இராணுவத் தலையீடும் அதை வெற்றிகொள்ள புலிகள் இயக்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இராணுவ, அரசியல் வழிமுறைகளும், பல படிப்பினைகளை தமிழ் பேசும் மக்களுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் கொடுத்திருந்தன. இப் படிப்பினைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் அரசியல் சிந்தனைப்போக்குகளை தமிழ்பேசும் மக்களிடையேயும், புலிகள் இயக்கத்தினுள்ளும் தோற்றுவித்தன. புலிகள் இயக்கத்துள் ஆக்கபூர்வமான, சுமுகமான ஓர் உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமானது என்றும் கூறலாம். இது புலிகள் இயக்கத்திற்கு முற்றிலும் புதியதோர் மரபாகும். புலிகள் இயக்கமும் இதைப் புரிந்துகொண்டிருந்தது. மறு-பிறப்பெடுக்க முயற்சித்தது. அதற்கான வழிமுறைதான் மேற்குறிப்பிட்ட உட்கட்சிப் போராட்டமாகும். இம்முயற்சிகளின் வெளிப்பாடுகளில் ஒரு துளிதான் இந்நூல்.’’

-நூலாசிரியர் அ. கௌரிகாந்தன்

50 INRS, 150 SLRS, 4 EURO, 6 USD